August 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

9ம் ஆண்டில்




VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

August 2018

சுவடி — 8
ஓலை — 6

## வணக்கம் பல

**சு**யாட்சி என்ற முழக்கத்தை உயர்த்திப் பிடித்து, இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய தலைமைப் பண்பையும், தனித்துவத்தையும் கொண்ட முதல் மாநிலமாகவும், மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் மொழி, இனம், பண்பாடு என எல்லாவற்றிலும் சிறந்த ஒரு முதன்மை மாநிலமாகவும் விளங்கியது தமிழ்நாடு.

இன்றோ தமிழகம் மிகவும் தடுமாற்றமான அரசியல் சூழலில் சிக்கித் தவிக்கிறது. நடப்பதோ மாநில ஆட்சி என்ற பெயரில் மத்திய அரசின் சொற்படி நடக்கும் தலையாட்டிப் பொம்மை ஆட்சியே!

திராவிடத் தலைவர்கள் தனித்தனியே நின்றாலும், எதிரும் புதிருமாக நின்றாலும், மாநில உரிமை என்று வரும்போது மத்திய அரசைப் பணிய வைக்கும் வகையில் தமிழகத்து திராவிட கட்சிகள் ஒரே அணியாக நிற்கும்! ஆனால் தற்போது தகுதியான தலைமை இல்லாமலும், மாநில உரிமைகளைப் பாதிக்கும் மத்திய அரசின் நிலைப்பாடுகளை எதிர்க்க திராணியற்று இருப்பதையும் பார்க்கையில் வேதனையாக இருக்கிறது.

கழகங்கள் தகைசான்ற தலைவர்களை இழந்து விட்ட இந்தச் சூழலை வைத்துப் பார்க்கையில், வலுவான தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்கள் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுகிறது. இது உடனடி தேவையும் கூட! இந்த நிலை தொடர்ந்தால் தமிழ் மக்கள் தங்களது அடையாளங்களை இழப்பது திண்ணமெனச் சான்றோர் எதிர் கூறுகின்றனர்.

தமிழகத்தின் நலனுக்காக சிறந்த புதிய தலைமை வரவேண்டிய அவசரநிலை ஒருபுறம் என்றால், திராவிடம் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டியது கட்டாயத் தேவை. தமிழகம் மேலும் மேலும் தடுமாற்றத்தை எதிர்கொள்ளாமல் இருக்க வேண்டுமானால், திராவிடக் கூட்டணி உருவாகும் என்பது காலத்தின் சாட்சியாக இருக்கிறது.

ஒவ்வொரு நாடும் பலவிதமான சிக்கல்களில் இருந்து வரும் போதும் 'விளையாட்டு' என்னும் ஒரு புள்ளியில் கிடைக்கும் மகிழ்ச்சியே தனி! எனவே விளையாட்டை விளையாட்டாக பார்க்காமல் அதனுள் ஒளிந்திருக்கும் உண்மையை உணர்ந்து விளையாட்டை மதிப்போம்! விளையாட்டை ஊக்குவிப்போம்! உலகக் கால்பந்துக் கோப்பை வென்ற பிரான்ஸ் அணிக்கு அய் தமிழ் சார்பாக நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

சூடிய மகுடம்

நம்ப முடியா முடிவுகள்!

கூடவேண்டும் திராவிடம்

ஆசுகவி கபீர்

என்ன தவம் செய்தனை!

அறிவோம் தமிழர் பெருமை

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

சிவகாமியின் சபதம்

மரம் நடுவோம் மனிதம் காப்போம்

மருத்துவ தமிழ்

மடியுமோஅடிமை மோகம்

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

## உலக கோப்பை கால்பந்து

உலகக் கோப்பை கால்பந்து தொடர் கடந்த ஜூன் 14ம் தேதி ரஷ்யாவில் தொடங்கியது. சுமார் ஒருமாத காலம் நடைபெற்ற இந்த கால்பந்து திருவிழா ஜூலை 15ம் தேதி முடிவடைந்தது.

ஆஸ்திரேலியா, ஈரான், ஜப்பான், சவூதி அரேபியா, தென் கொரியா, எகிப்து, மொரோக்கோ, நைஜீரியா, செனெகல், துனிசியா, கோஸ்டா ரிக்கா, மெக்சிகோ, பனாமா, அர்ஜென்டினா, பிரேசில், கொழும்பியா, பெரு, உருகுவே, பெல்ஜியம், குரோஷியா, டென்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஐஸ்லாந்து, போலந்து, போர்ச்சுகல், ரஷ்ய, செர்பியா, ஸ்பெயின், சுவீடன், ஸ்விட்சர்லாந்து உள்ளிட்ட 32 அணிகள் இந்த தொடரில் களமிறங்கின.

உலகக்கோப்பை காற்பந்து எனப்படுவது வெவ்வேறு நாடுகளில், பன்னாட்டுக் காற்பந்தாட்டக் கழகங்களின் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருக்கும் ஆண்களின் தேசிய காற்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான உலகளவிலான போட்டியாகும். இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு காற்பந்து உலகக்கோப்பைக்கான வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும். இந்தப் போட்டியானது 1930 ஆம் ஆண்டு முதல், இன்றுவரை நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடைபெற்று வருகின்றது. ஆனாலும் இரண்டாம் உலகப் போரின் காரணமாக 1942, 1946 ஆகிய இரு ஆண்டுகளிலும் இந்தப் போட்டி நடைபெறவில்லை. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் செருமனி வெற்றியீட்டியது.



ஒவ்வொரு நான்காவது ஆண்டிலும் போட்டியை நடத்தும் நாட்டுடன் சேர்த்து 32 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்று விளையாடுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நாடுகளுக்கிடையே போட்டிகள் நடத்தப்பட்டு இறுதியாக ஒரு அணி வெற்றி பெற்ற அணியாக அறிவிக்கப்படும் வகையில் உலகக்கோப்பை




காற்பந்து போட்டியானது வடிவமைக்கப்படுகிறது. இப்போட்டிகள் உலககோப்பை இறுதியாட்டம் என்றழைக்கப்படுகிறது. போட்டி நடைபெறும் ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகளிலும் போட்டியை நடத்தும் நாடு உட்பட பன்னாட்டுக் காற்பந்தாட்டக் கழகங்களின் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருக்கும் நாடுகளின் அணிகள் தகுதிச்சுற்று ஆட்டங்களில் போட்டியிட்டு இறுதிப்போட்டிக்கான அணிகள் தீர்மானிக்கப்படுகின்றன.




இதுவரை நடைபெற்றுள்ள 19 உலக கோப்பை போட்டிகளில் எட்டு வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த அணிகள் வெற்றி பெற்றுள்ளன. பிரேசில் அணி ஐந்து முறை வெற்றி பெற்றுள்ளதோடு நடைபெற்றுள்ள அனைத்துப் போட்டிகளிலும் விளையாடிய ஒரே அணியாகத் திகழ்கிறது. செருமனி , இத்தாலி ஆகியவை நான்கு முறையும், அர்ஜென்டீனா, உருகுவே ஆகியவை இரண்டு முறையும், இங்கிலாந்து, பிரான்சு, எசுப்பானியா ஆகியவை ஒருமுறையும் வெற்றிபெற்றுள்ள மற்ற நாடுகளாகும்.

## வரலாறு

உலகின் முதல் சர்வதேச கால்பந்து போட்டி, ஸ்காட்லாந்து மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கிடையில் 1872 ஆம் ஆண்டில் கிளாஸ்கோவில் நடைபெற்றது. இச்சவால் போட்டியானது வெற்றி தோல்வி ஏதுமில்லா சமனில் முடிந்தது. இங்கிலாந்து நாட்டின் உள்ளூர் சாம்பியன் கோப்பை சர்வதேச போட்டி 1884 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இருபதாம் நூற்றாண்டில் கால்பந்து போட்டிகள் உலகின் மற்ற பகுதிகளில் பிரபலமாக வளர்ச்சியடைந்தன. 1900 மற்றும் 1904

கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் 1906 ஆம் ஆண்டு இடைச்செருகலாக நடைபெற்ற போட்டிகளில், காற்பந்தாட்டப் போட்டி பதக்கங்கள் வழங்கப்படாமல் காட்சிப் போட்டியாக மட்டுமே நடத்தப்பட்டுள்ளது.




1904 ஆம் ஆண்டில் பன்னாட்டுக் காற்பந்தாட்டக் கழகங்களின் கூட்டமைப்பு நிறுவப்பட்ட பின்னர், 1906 ஆம் ஆண்டு ஒலிம்பிக் கட்டமைப்புக்கு வெளியே உள்ள நாடுகளிடையே ஒரு சர்வதேச கால்பந்து போட்டியை சுவிச்சர்லாந்தில் இக்கூட்டமைப்பு ஏற்பாடு செய்ய முயற்சித்தது. சர்வதேச கால்பந்து போட்டிகள் அப்போது மிகவும் ஆரம்ப நாட்களில் இருந்த காற்பந்துப் போட்டிகள் கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ வரலாறு போட்டிகளின் நோக்கம் தோல்வி என்றே விவரிக்கிறது. ம இங்கிலாந்து கால்பந்து சங்கத்தின் திட்டமிடலால் லண்டன் 1908 கோடை ஒலிம்பிக் போட்டிகளில், கால்பந்து ஒரு அதிகாரப்பூர்வ போட்டியாக இடம்பெற்றது. பயிற்சி வீரர்கள் மட்டுமே விளையாடிய இப்போட்டி ஒரு போட்டியாக இல்லாமல் ஐயத்திற்கிடமின்றி கண்காட்சியாக இருந்தது. தங்க பதக்கங்களை வென்ற கிரேட் பிரிட்டனின் இங்கிலாந்து தேசிய தன்னார்வ கால்பந்து அணி ஸ்டாக்ஹோமில் 1912 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் வென்று சாதனையை நிகழ்த்தியது.

ஒலிம்பிக் நிகழ்வுகளில் தன்னார்வ அணிகள் மட்டுமே போட்டியிடுவது தொடர்ந்து கொண்டு இருந்த அந்நாளில், சர்தாமஸ் லிப்டன் என்பவர் சர்தாமஸ் லிப்டன் பரிசுக்கோப்பை போட்டியை 1909 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்தார். லிப்டன் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தனியார் குழுக்கள் அவை சார்ந்த நாட்டின் சார்பில் போட்டியிட்டன. இப்போட்டிகள் முதலாவது உலகக்கோப்பை போட்டிக்கு இணையாகக் கருதப்படுகிறது. இத்தாலி, ஜெர்மனி மற்றும் சுவிச்சர்லாந்து போன்ற நாடுகளின் மிக மதிப்புமிக்க தொழில்முறை விளையாட்டுக் குழுக்களும் பங்கேற்ற இப்போட்டியில் இங்கிலாந்து கால்பந்து சங்கம் அந்நாட்டின் தொழில்முறை அணியை அனுப்ப மறுத்து போட்டியை நிராகரித்தது. லிப்டன் இங்கிலாந்துக்குப் பதிலாக துர்காம் கோட்டத்தைச் சார்ந்த மேற்கு ஆக்லாந்து தொழில்முறை விளையாட்டுக் குழுவை இங்கிலாந்தின் பிரதிநிதியாக விளையாட அழைப்பு விடுத்தார். மேற்கு ஆக்லாந்து அப்போட்டியில் வெற்றிபெற்று மீண்டும் வெற்றிகரமாக 1911 ஆம் ஆண்டில் அவ்வெற்றியை தக்கவைத்துக் கொண்டது.

ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெற்ற தன்னார்வர்கள் கலந்துகொண்டு விளையாடிய காற்பந்து போட்டிகளை பன்னாட்டுக் காற்பந்தாட்டக் கழகங்களின் கூட்டமைப்பு 1914 ஆம் ஆண்டில் ஒரு " உலக கால்பந்து போட்டி " என அங்கீகரிக்க ஒப்புக்கொண்டது. இவ்வொப்புதல் 1920 கோடைகால ஒலிம்பிக் போட்டியில் உலகின் முதல் கண்டங்களுக்கு இடையேயான கால்பந்து போட்டி நடைபெறவும் வழிவகுத்தது. எகிப்து மற்றும் பதிமூன்று ஐரோப்பிய அணிகள் கலந்து கொண்ட இப்போட்டியில் பெல்ஜியம் வெற்றி பெற்றது. 1924 மற்றும் 1928 ஆ களில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் உருகுவே பட்டம் வென்றது. இவர்களே முதல் இரண்டு உலகக்கோப்பை போட்டிகளையும் வென்றனர். 1924 ஆம் ஆண்டு தொழில்முறை பன்னாட்டுக் காற்பந்தாட்டக் கழகங்களின் கூட்டமைப்பு சகாப்தத்தின் தொடக்கமாகும்.

இரண்டாம் உலக போருக்கு முந்தைய உலக கோப்பைகள்

பன்னாட்டுக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் ஜூல்ஸ் ரிமெட், ஒலிம்பிக் கால்பந்து போட்டிகளின் வெற்றியை உந்து சக்தியாக கொண்டு மீண்டும் ஒலிம்பிக் அமைப்பிற்கு வெளியே அவ்வமைப்பின் சொந்த சர்வதேச காற்பந்து போட்டிகளை நடத்த ஆரம்பித்தார்.

1928 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் தேதியன்று பன்னாட்டுக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு ஆம்ஸ்டர்டமில் கூடியது. இரண்டு முறை அதிகாரப்பூர்வ கால்பந்து உலக சாம்பியனான உருகுவை நாட்டின் 1930 ஆம் ஆண்டை சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவாக




கொண்டாடும் விதமாக அந்நாடு உலகக் கோப்பை போட்டியை நடத்தும் நாடு என்ற அறிவிப்பை வெளியிட்டது.

போட்டிக்காக ஒரு குழுவை அனுப்புமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் தேசிய கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் போட்டி நடத்தப்படும் நாடாக உருகுவே தேர்வு செய்யப்பட்டிருந்தது. உருகுவே நாட்டுத் தேர்வு ஐரோப்பிய நாடுகளுக்கு அட்லாண்டிக் பெருங்கடலுக்கு குறுக்கே ஒரு நீண்ட மற்றும் விலை உயர்ந்த பயணத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. அதனால் எந்த ஐரோப்பிய நாடும் போட்டி நடைபெறுவதற்கு இரண்டு மாதங்கள் முன்புவரை தங்கள் நாட்டு அணியை போட்டிக்கு அனுப்புவதாக உறுதி மொழியைத் தரவில்லை. இறுதியில் ரைமெட் பெல்ஜியம், பிரான்ஸ், ருமேனியா, மற்றும் யூகோஸ்லாவியா நாட்டு அணிகளை அழைத்து உருகுவே வந்து விளையாடுமாறு வற்புறுத்தினார். இறுதியில் தென் அமெரிக்காவில் இருந்து ஏழு, ஐரோப்பாவில் இருந்து நான்கு மற்றும் வட அமெரிக்காவில் இருந்து இரண்டு என மொத்தம் பதிமூன்று நாடுகள் போட்டியில் பங்கேற்றன.

ஜூலை மாதம் 13 ஆம் தேதி 1930 ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் முதல் இரண்டு உலக கோப்பை போட்டிகளில் நடந்தன. பிரான்சு அணி மெக்சிக்கோ அணியை 4—1 மற்றும் அமெரிக்கா அணி பெல்ஜியம் அணியை 3—0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து வெற்றி பெற்றன. உலக கோப்பை காற்பந்து வரலாற்றில் முதல் கோல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூசியன் லாரண்ட் என்பவரால் அடிக்கப்பட்டது. மொண்டேவீடியோ நகரில் 93.000 மக்கள் கூட்டத்தின் முன்னிலையில் நடந்த இறுதி போட்டியில், உருகுவே அணி அர்ஜென்டீனா அணியை 4—2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து உலககோப்பையை வென்ற முதல் தேசம் என்ற பெருமையைப் பெற்றது.

அமெரிக்க மக்களிடையே விளையாட்டு ஆர்வம் குறைந்த அளவிலேயே இருந்த காரணத்தால் உலக கோப்பை காற்பந்து போட்டிகள் உருவாக்கப்பட்ட பின், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த 1932 கோடைகால ஒலிம்பிக் போட்டிகளின் போட்டிகள் அட்டவணையில் கால்பந்து விளையாட்டு சேர்க்கப்படவில்லை. சர்வதேச ஒலிம்பிக் சங்கம் மற்றும் காற்பந்து சங்கங்களின் கூட்டமைப்பும் தொழில்முறை அல்லாத காற்பந்து வீரர்களை மறுத்து வந்ததால் அந்த ஆண்டு நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் காற்பந்து போட்டிகள் கைவிடப்பட்டன. 1936 கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் மீண்டும் காற்பந்து சேர்த்துக்கொள்ளப்பட்டது. மதிப்புமிக்க உலக கோப்பை காற்பந்து போட்டிகளின் காரணமாக ஒலிம்பிக் காற்பந்து போட்டிகளுக்கு பொதுவில் அவ்வளவாக முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

ஆரம்ப காலத்தில் கண்டம் விட்டு கண்டம் பயணம் மேற்கொள்ளுதல் மற்றும் போர் முதலிய பிரச்சினைகள் உலக கோப்பை போட்டிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களாக இருந்தன. சில தென் அமெரிக்க அணிகள் மட்டுமே 1934 மற்றும் 1938 போட்டிகளுக்காக ஐரோப்பியப் பயணம் செய்ய தயாராக இருந்தனர். தென் அமெரிக்க அணியான




பிரேசில் மட்டுமே இரண்டு போட்டிகளிலும் கலந்துகொண்டது. செருமணி மற்றும் பிரேசில் நாடுகள் நடத்துவதாயிருந்த 1942, 1946 போட்டிகள் இரண்டாம் உலகப் போர் காரணமாக இரத்து செய்யப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக கோப்பை போட்டிகள்

இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்டிருந்த நாடுகளுக்கு எதிராக விளையாடுவதற்கு விருப்பமின்மையும், கால்பந்தாட்டத்தில் வெளிநாடுகளின் செல்வாக்கிற்கு எதிர்ப்பைக் காட்டவும் இங்கிலாந்து 1920 ஆம் ஆண்டில் பன்னாட்டுக் காற்பந்தாட்டக் கழகங்களின் கூட்டமைப்பிலிருந்து தமது அணிகளை விலக்கிக் கொண்டிருந்தது. ஆனால் கூட்டமைப்பின் அழைப்பை ஏற்று மீண்டும் 1946 ல் கூட்டமைப்புடன் இணைந்தது. பிரேசிலில் நடைபெற்ற 1950 உலக கோப்பை போட்டியில்தான் , இங்கிலாந்து நாட்டவர் முதன்முதலாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முந்தைய இரண்டு உலகக் கோப்பை போட்டிகளை புறக்கணித்திருந்த உருகுவே அணியையும் போட்டியில் காணமுடிந்தது. 1930 உலக கோப்பையை வெற்றி கொண்ட சாம்பியன் உருகுவே 1950ல் போட்டியை நடத்திய பிரேசிலை இறுதியாட்டத்தில் 2—1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து மீண்டும் பட்டம் வென்றது. பிரேசிலின் இத்தோல்வி மரக்காணசோ வீழ்ச்சி என்று வர்ணிக்கப்படுகிறது.

1934 முதல் 1978 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற போட்டிகளில், ஒவ்வொருமுறையும் 16 அணிகள் கலந்துகொண்டு விளையாடின. ஆனால் 1938 ஆம் ஆண்டில் போட்டியில் விளையாட தகுதி பெற்றிருந்தும் செர்மனியுடன் இணைத்துக் கொள்ளப்பட்டதால் ஆஸ்திரியா போட்டியில் பங்கேற்கவில்லை. 1950 ல் நடைபெற்ற போட்டியில் இந்தியா, ஸ்காட்லாந்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் விலகிக் கொண்டதால் 13 நாடுகள் மட்டுமே பங்கேற்றன. இப்போட்டியில் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த அணிகள் பெரும்பான்மையாகவும் வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஓசியானியா நாடுகள் சிறுபான்மையாகவும் பங்கேற்றன. இச்சிறுபான்மை அணிகள் வழக்கமாக ஐரோப்பிய மற்றும் தென் அமெரிக்க அணிகளால் எளிதாக தோற்கடிக்கப்பட்டன. அமெரிக்கா 1930 போட்டியில் அரையிறுதி, 1938 போட்டியில் கியூபா கால் இறுதி, கொரியா 1966 போட்டியில் காலிறுதி, மெக்சிகோ 1970 போட்டியில் காலிறுதி என்று முன்னேறியதே சிறுபான்மை நாடுகளின் முதல்சுற்று ஆட்டங்களைத் தாண்டிய சாதனையாக இருந்தது.

32 அணிகளாக விரிவாக்கம்

உலககோபை போட்டிகளில் விளையாடும் அணிகளின் எண்ணிக்கை 1982 ஆம் ஆண்டில் 24 அணிகளாக விரிவுபடுத்தப்பட்டது. 1998ல் இந்த எண்ணிக்கை 32 அணிகளாக உயர்த்தப்பட்டது. இதனால் ஆப்பிரிக்கா, ஆசியா, வட அமெரிக்கா போன்ற நாடுகளின் அதிகமான பங்கேற்புக்கு வாய்ப்பு கிட்டியது. இந்நாடுகளில் இருந்து பங்கேற்ற அணிகள் கனிசமான வெற்றிகளை ஈட்டத் தொடங்கின. மெக்சிகோ, கேமரூன், செனகல் மற்றும் அமெரிக்கா, கானா அணிகள் முறையே 1986,1990,2002,2010 ஆம் ஆண்டுகளில் காலிறுதி சுற்றுவரை முன்னேறின. இருப்பினும், ஐரோப்பிய




மற்றும் தென் அமெரிக்க அணிகளின் ஆதிக்கம் தொடர்ந்து கொண்டிருந்தது.. உதாரணமாக 1994,1998 மற்றும் 2006 போட்டிகளில் காலிறுதிக்கு தகுதி பெற்ற அணிகள் யாவும் ஐரோப்பா அல்லது தென் அமெரிக்கா நாடுகளாகவே இருந்தன. 2002 உலககோப்பை காற்பந்து தகுதிச்சுற்று போட்டிகளில் 200 அணிகளும், 2006 உலககோப்பை காற்பந்து தகுதிச்சுற்று போட்டிகளில் 198 அணிகளும், 2010 உலககோப்பை காற்பந்து தகுதிச்சுற்று போட்டிகளில் 204 அணிகளும் பங்கேற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகக்கோப்பை காற்பந்து போட்டி அதிகமான பார்வையாளர்களைக் கொண்ட விளையாட்டு நிகழ்வாக உள்ளது. செர்மனியில் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற காற்பந்து இறுதியாட்டத்தை 715.1 மில்லியன் பார்வையாளர்கள் கண்டுகளித்ததாக பதிவாகியுள்ளது. .

உருசியா, கத்தார் ஆகிய நாடுகளில் முறையே 2018, 2022 ஆம் ஆண்டுகளில் அடுத்து வரும் உலகக்கோப்பை போட்டிகள் நடைபெறவுள்ளன.

தொடர் தொடங்கியவுடன், ரஷ்ய கீழ் அவை பெண் எம்.பியும் கம்யூனிஸ்ட் தலைவருமான டமாரா ப்ளேட்ன்யோவா, ‘உலகக் கோப்பையின் போது ரஷ்ய பெண்கள் வெளிநாட்டவர்களுடன் உடல் ரீதியாக உறவு வைத்துக்கொள்ளக் கூடாது’ என்று எச்சரித்தது சுவாரஸ்யமாக இளசுகளால் சமூக தளங்களில் விவாதிக்கப்பட்டது.

எகிப்து அணி 28 வருடங்களுக்கு பிறகு இந்த கால்பந்து உலகக் கோப்பையில் விளையாடத் தகுதிப் பெற்றது. கடைசியாக அந்த அணி 1990—ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பையில் விளையாடியிருந்தது. இதேபோல் மொராக்கோ அணி 1998—ம் ஆண்டுக்கு பிறகு இம்முறை தான் களமிறங்கியது. பெரு அணி 36 வருடங்களுக்கு பிறகு களம் இறங்கியது.

2002—க்கு பிறகு செனகல் அணி 2—வது முறையாக இம்முறை தான் உலகக் கோப்பைக்கு தகுதிப் பெற்றது. நார்டிக் நாடுகளை சேர்ந்த டென்மார்க், ஐஸ்லாந்து, சுவீடன் ஆகியவையும், அரபு நாடுகளான எகிப்து, சவுதி அரேபியா, துனிசியா, மொராக்கோ ஆகியவை கூட்டாக தகுதி பெற்றிருந்தது இதுவே முதன்முறையாகும்.

அதேசமயம், நான்கு முறை சாம்பியனான இத்தாலி இந்த உலகக்கோப்பை தொடருக்கு தகுதிப் பெறவில்லை.

லீக் சுற்றில் பெரும் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் களமிறங்கிய பலம் வாய்ந்த அணியான அர்ஜென்டினா, கத்துக்குட்டி அணியான ஐஸ்லாந்திடம் டிரா ஆக, நொந்து போனார் மெஸ்ஸி. அர்ஜென்டினாவின் ஆட்டத்தை பார்த்து கடுப்பாகி போன, அர்ஜென்டினா முன்னாள் கால்பந்து ஜாம்பவான் மாரடோனா, ‘இப்படி விளையாடினால் ஊருக்கு திரும்ப முடியாது’ என பகிரங்கமாகவே தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

அர்ஜென்டினா இந்த வேதனையில் இருக்க, நடப்பு உலக சாம்பியன் ஜெர்மனி அணி லீக் சுற்றில் மெக்சிகோ அணியிடம் தோற்றே போனது ரசிகர்களை கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. எப்படியோ தட்டுத் தடுமாறி அர்ஜென்டினா, போர்ச்சுகல் உள்ளிட்ட அணிகள் நாக் அவுட் சுற்றுக்கு முன்னேற, ஜெர்மனியோ லீக் சுற்றோடு

வெளியேறியது.

உலகக் கோப்பை கால்பந்து வரலாற்றில், 1938ம் ஆண்டுக்கு பிறகு, முதல் சுற்றோடு ஜெர்மனி வெளியேறுவது இதுவே முதன் முறையாகும். பலம் வாய்ந்த ஜெர்மனி அணி, ஹிட்லர் ஆட்சிக்கு பிறகு, இம்முறை தான் முதல் சுற்றோடு வெளியேறியது.

லீக் போட்டிகளின் முடிவில், 'கி' பிரிவில் இருந்து ரஷ்யா, உருகுவே, 'ஙி' பிரிவில் இருந்து ஸ்பெயின், போர்ச்சுகல், 'சி' பிரிவில் இருந்து பிரான்ஸ், டென்மார்க், 'ஞி' பிரிவில் இருந்து குரேஷியா, அர்ஜென்டினா, ணி' பிரிவில் இருந்து பிரேசில், சுவிட்சர்லாந்து, 'தி' பிரிவில் இருந்து ஸ்வீடன், மெக்சிகோ, 'நி' பிரிவில் இருந்து பெல்ஜியம், இங்கிலாந்து, 'பி' பிரிவில் இருந்து கொலம்பியா, ஜப்பான் ஆகிய அணிகள் லீக் பிரிவில் முதல் இரண்டு இடங்களை பிடித்து நாக்—அவுட் சுற்றுக்கு முன்னேறின.

ஒரு அணியில் ஆட்ட வீரராகவும், ஒரு அணிக்கு மேனேஜராகவும் இருந்து உலக கோப்பையை வென்ற மூன்றாவது நபரானார் டெஸ்சாம்ப்ஸ். இதற்கு முன்னதாக பிரேசிலின் மரியோ ஜகல்லோ மற்றும் ஜெர்மனியின் பிரான்ஸ் பெக்குன்பெர் இந்தச் சிறப்பை பெற்றிருந்தனர்.

நாற்பத்தெட்டு வருடத்திற்கு பிறகு இறுதிப்போட்டியில் நான்கு கோல் அடித்த அணி பிரான்ஸ். 1970—ல் பிரேசில் இத்தாலியை 4—1 என வென்றிருந்தது.

உலக கோப்பை இறுதியாட்டத்தில் முதல் முறையாக விளையாடும் ஓர் அணி தோல்வியடைவது 1974க்கு பிறகு இதுதான் முதல் முறை. குரோஷியாவுக்கு இது முதல் உலக கோப்பை இறுதிப்போட்டி.

உலக கோப்பை இறுதிப்போட்டி வரலாற்றில் தனது அணிக்கு எதிராக கோல் அடித்த ஒரே வீரர் ஆனார் குரோஷியாவின் மண்ட்ஜுகிக்.

உலக கோப்பை இறுதிப் போட்டியில் கோல் அடித்த இரண்டாவது இளையவர் ஆனார் பிரான்ஸின் ம்பாப்பி. அவருக்கு வயது 19 வருடம் 207 நாள்கள். இறுதிப்போட்டியில் இளம் வயதிலேயே கோல் அடித்த பெருமை பிரேசிலின் பீலேவுக்குச் சேரும். அவர் 1958—ல் 17 வருடம் 249 நாள்கள் வயது இருக்கும்போதே கோல் அடித்தார்.

உலக கோப்பை மற்றும் ஈரோ கோப்பை ஆகியவற்றில் பிரான்ஸ் அணிக்காக இதுவரை 10 கோல்கள் அடித்திருக்கிறார் கிரீஜ்மன். உலக கோப்பை மற்றும் ஈரோ கோப்பை ஆகியவற்றில் பத்து நாக் அவுட் போட்டிகளில் 12 கோல்களை தானாக அடிக்கவோ அல்லது இன்னொரு வீரர் அடிக்கவோ உதவியுள்ளார் ஆன்டோனி கிரீஜ்மன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் பிரான்ஸ் வீரர் ஒருவர் நாக்அவுட் போட்டிகளில் செய்த மிகப்பெரிய சாதனை இது. முன்னதாக ஜினடின் ஜிடேன் எட்டு கோல்களை அடித்ததே பிரான்ஸ் வீரர் ஒருவரின் சாதனையாக இருந்தது.

பெரிய கால்பந்து தொடர்களில் 11 கோல்களுக்கு நேரடி காரணமாக இருந்திருக்கிறார் பெரிசிச். வேறு எந்த குரேஷிய வீரரும் இச்சாதனையை செய்யவில்லை.

உலககோப்பை இறுதிப்போட்டியில் 1982—க்கு பிறகு பெனால்டி பகுதிக்கு பிறகு அதாவது அவுட்சைடு தி பாக்ஸ் பகுதியில் இருந்து கோல் அடித்த வீரர் ஆனார் பிரான்ஸின் போக்பா. 1982—ல் இத்தாலி கூஷிஉ ஜெர்மனி போட்டியில் மார்கோ டார்டெல்லி இம்முறையில் கோல் அடித்திருந்தார்.

பிஃபா என்றழைக்கப்படும் சர்வதேச கால்பந்து அமைப்பு, உலக கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் தற்போதைய எண்ணிக்கையான 32 என்பதனை 48—ஆக மாற்றும் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.


வரும் 2026 ஃபிஃபா உலக கோப்பை கால்பந்து போட்டியில் அதிக அணிகளை பங்கேற்க செய்யும் விதமாக 16 குழுக்கள் செயல்படும். ஒவ்வொரு குழுவிலும் மூன்று அணிகள் இடம்பெறும்.

இக்குழுக்களில் நடக்கும் போட்டிகளில் முதல் இரண்டு இடம் பெறும் அணிகள் நாக்அவுட் ( வெளியேற்றத்தை முடிவு செய்யும் சுற்று) சுற்றுக்கு தகுதி பெறும். நாக்அவுட் சுற்றில் 32 நாடுகள் விளையாடும்.

ஆனால், இந்த புதிய வடிவ உலக கோப்பை அட்டவணையின்படி ஃபிஃபா உலக கோப்பை வெற்றியாளர்கள் தற்போதுள்ள எண்ணிக்கையை விட கூடுதல் போட்டிகளில் விளையாட தேவைப்படாது.

இது குறித்த முழு தகவல்களையும் ஃபிஃபா பின்னர் வெளியிடும். ஆனால், ஃபிஃபா உலக கோப்பை அணிகள் பட்டியலில் உருவாக்கப்படும் கூடுதல் இடங்கள் பெரும்பாலும் ஆசிய மற்றும் ஆப்ரிக்கா நாடுகளுக்கே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கருத்துப் ப(ா)டம்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"சிங்கம், புலியைப் பார்த்தவன் நான்"

**அமைச்சர் ஜெயக்குமார்**

(அடடே, அம்மா ஞாபகம் வந்துடுச்சா?)



"மோடி அலை இப்போது சுனாமியாகிவிட்டது!"

**அமித் ஷா**

(அப்போ அவர் ஒரு பேரழிவுச் சக்தின்னு நீங்களே ஒத்துக்கிட்டீங்க!)



"பட்டியல் இன மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது பா.ஜ.க அரசு!

**ராகுல் காந்தி**

('சின்ன கட்டிப்பிடி வைத்தியர்' கரெக்டா சொல்லிட்டார்!)



"எதிரியைத் தீர்மானிக்கும் நேரம் வந்துவிட்டது!"

**கமல்**

(அவர் நண்பரா பகைவரான்னு 'நம்மவரே' சொல்லுங்க!)

# நம்ப முடியா

## ஆநம்ப முடியாத நண்பர்கள்

அணு ஆயுதம் என்பது பேரழிவினை ஏற்படுத்தக்கூடியது. அது மட்டுமல்ல, ஆயிரம் அணுகுண்டுகளை வைத்திருக்கும் நாடு என்பதால் மட்டும் ஒரு நாடு தன்னை வல்லரசு என்று கூறிக்கொண்டு நிம்மதியாக இருந்துவிட முடியாது; ஓரிரண்டே அணுகுண்டுகளை வைத்திருக்கும் நாடானாலும் கூட, அதைக் கண்டு ஓர் உலக வல்லரசு பயந்துதான் ஆக வேண்டும் என்பதே உண்மையாகும்.




கடந்த மாதம் 12—ஆம் தேதி சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த சென்டோசா தீவில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சந்தித்த உச்சி மாநாடு உலகளாவிய வரவேற்பை பெற்றதுடன், அணு ஆயுதப் பரவல் குறித்துக் கவலை கொண்ட எல்லோரிடத்திலும் ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து அணு ஆயுதம் மற்றும் அணுகுண்டுகளைத் தாங்கி நீண்ட தூரம் செல்லக்கூடிய ஏவுகணைகளுக்கான சோதனைகளை வட கொரியா சளைக்காமல் மேற்கொண்டு வந்ததால், கொரிய தீபகற்பத்தில் நீடித்த ஒரு போர்ச் சூழல் இருந்து வந்தது.

மேலும், அமெரிக்கா மற்றும் தென் கொரியா இணைந்து நடத்திவந்த கூட்டுக் கடற்படைப் பயிற்சி காரணமாகவும் வட கொரிய எரிச்சலடைந்திருந்தது. ஐநா சபை மூலமாக அமெரிக்கா தன் மீது கொண்டுவந்த பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் வட கொரியா கோபம் அடைந்திருந்தது. ஒரு கட்டத்தில் தனது நீண்டதூர ஏவுகணைகளைக் கொண்டு அமெரிக்க நகரங்களையும், அமெரிக்கக் கடற்படையினரையும் தாக்கப் போவதாக பகிரங்க மிரட்டலையும் விடுத்து வந்தது. வடகொரிய நாட்டின் மலை ஒன்று, அணுவெடிப்புச் சோதனையால் சுமார் பதினோரு அடிகள் இடம் பெயர்ந்ததாக செயற்கைக்கோள்

# முடிவுகள்!

எஸ். ஸ்ரீதுரை

தகவல் தெரிவித்ததையும் உலகம் கவலையுடன் உற்று நோக்கியது.

அமெரிக்கா, வடகொரியா ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான உறவு மிகவும் கீழ்நிலைக்குச் சென்றதற்கு அவ்விரு நாட்டு அதிபர்களின் பொறுப்பற்ற, சவடால் பேச்சுக்களும் ஒரு காரணமாக அமைந்தது.

லிபியாவின் அதிபர் கர்னல் கடாஃபியின் நிலைதான் கிம்முக்கு ஏற்படும் என்று டிரம்ப் அதிபர்களின் உச்சி மாநாடு திட்டமிட்டபடி நடைபெறவும் பெருமளவு உதவியது. சிங்கப்பூரும் தன் பங்குக்கு ஒத்துழைத்து, இரு அதிபர்களையும் வரவேற்றுத் தனது நாட்டிலேயே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தது.



பேசியதும், டிரம்பை வடகொரிய அதிபர் தரக்குறைவாக விமர்சித்ததும் உலக நாடுகள் அனைத்தையும் முகம் சுளிக்கவைத்தன.

இந்த நிலையில், வடகொரிய — அமெரிக்க அதிபர்கள் நேருக்கு நேராகச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. வடகொரிய — தென் கொரிய எல்லையில் அவ்விரு நாட்டு அதிபர்கள் சந்தித்துப் பேசியது போர் பதற்றத்தைத் தணிக்கவும், அமெரிக்க — வடகொரிய

சிங்கப்பூர் சென்றால் எனது உயிருக்கு ஆபத்து' என்று கிம் சொல்ல, உச்சி மாநாட்டைப் புறக்கணித்து வட கொரியாவுக்குப் பாடம் கற்பிப்போம்' என்று அமெரிக்கா அறிவிக்க, பரஸ்பர எரிச்சலூட்டல்கள் ஒரு பக்கம் தொடர்ந்தாலும், ஒரு வழியாக உச்சி மாநாடு நடக்கவே செய்தது.

தன்னைப் பற்றிய எந்தவிதமான ரகசியத் தகவல்களும் யாருக்கும் கிடைத்து விடக் கூடாது என்பதற்காக, தனக்காக ஒரு பிரத்தியேகக்




கழிவறையையே தனது நாட்டிலிருந்து கிம் கொண்டு வந்ததும் பரபரப்பாகப் பேசப்பட்டது.




உச்சி மாநாடு முடிந்த நிலையில், நமது நாட்டில் புதிய தேர்தல் கூட்டணி கண்ட தலைவர்களைப் போல, கிம்மும் டிரம்ப்பும் ஒருவரை ஒருவர் புகழ்ந்துகொண்டார்கள். வட கொரியா தனது அணு ஆயுதங்களை அழித்து விடும்' என்று கிம்மும், அணு ஆயுதங்கள் இல்லாத வட கொரியாவுக்கு வேறு எந்த நாட்டிடமிருந்தும் அச்சுறுத்தல் இல்லாதவாறு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்கும்' என்று டிரம்ப்பும் பேட்டியளித்தபோது எல்லாம் நன்றாகத்தான் இருந்தது.

உச்சி மாநாடு முடிந்தவுடன் அமெரிக்கா திரும்பிய டிரம்ப், என் இனிய அமெரிக்க மக்களே, இனி நமக்கு அணு ஆயுதத் தொந்தரவு இல்லை; இன்றிரவு பயமின்றி நிம்மதியாக உறங்குங்கள்' என்று அறிக்கை எல்லாம் கொடுத்தார்.

சில நாள்கள்தான் ஆயிற்று. இடையில் என்ன நடந்ததோ —

வடகொரியாவினால் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் நீடிக்கிறது' என்று திடீர் அறிக்கை விட்டிருக்கிறார் டிரம்ப்.

இதன் உண்மையான காரணத்தை உலகளாவிய ராஜதந்திரிகள்தான் ஆராய்ந்து சொல்ல வேண்டும். அது அணுஆயுத அச்சுறுத்தலா என்பது தெரியவில்லை. அல்லது, ராஜதந்திர அனுபவமற்ற இளம் வயதினராகிய வடகொரிய அதிபரைக் குழப்பத்தில் ஆழ்த்தி வழிக்குக் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுகிறதா என்றும் புரியவில்லை.

எது எப்படியாயினும், இன்னொரு நாகசாகி, ஹிரோஷிமா அனுபவத்துக்கு இவ்வுலகில் யாருமே தயாராக இல்லை என்பதே உண்மை.

உலகில் ஒவ்வொரு நாட்டுக்கும் நட்பு நாடு, பகை நாடு என்று தனித்தனிப் பட்டியல் உண்டு. இந்த வேளையில் பார்த்தால் வடகொரியாவும் அமெரிக்காவும் நண்பர்கள் போலத்தான் தோன்றுகின்றன. அதே சமயம், பரஸ்பரம் நம்பிக்கையிலாத நண்பர்களாக அந்நாடுகள் இருப்பதும் கண்கூடு.

இவ்விரண்டு நாடுகளைத் தவிர்த்த பிற நாட்டு மக்கள் அனைவரும் தத்தமது கடவுளர்களிடம் இனி இப்படி வேண்டிக்கொள்ளலாம். நண்பர்களிடமிருந்து எங்கள் நாட்டைக் காப்பாற்று. எங்களது பகைவர்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'!


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# கூடவேண்டும்

**திராவிட இயக்கங்களின் வரலாற்றுத் தேவை முடியவில்லை'**

“ஐம்பதாண்டு திராவிட ஆட்சி” என்ற சொற்றொடரே சரியா ?


திராவிட இயக்கம்' தமிழ்ச் சமூகத்தின் நியாயமான தேவையிலிருந்து முகிழ்த்தது .

வைதீக எதிர்ப்பு என்பது இரண்டாயிரமாண்டு தமிழ்சமூகப் பாரம்பரியம். வைதீக எதிர்ப்பு ,சுயமரியாதை ,பகுத்தறிவு ,தமிழ்பற்று ,சாதி மறுப்பு ,மாநில உரிமை ,ஏழ்மையை ஒழித்தல் போன்றவற்றோடு 'காங்கிரஸ் எதிர்ப்பும்' அதன் உள்ளுறை .

ஆர் எஸ் எஸ்சின் அரசியல் பிரிவான 'ஜனசங்கம்' /'பாரதிய ஜனதா' போல் திராவிடர் கழகத்தின் அரசியல் பிரிவாக திமுக தோன்றவில்லை . தனிக் கட்சியாகவே உருவாக்கப்பட்டது .

1967ல் அண்ணா ஆட்சிக்கு வந்தார் ; ஐம்பதாண்டு ஆகிறது . திமுக 19 ஆண்டுகள் . அதிமுக 31 ஆண்டுகள் .

இரண்டையும் சமதட்டில் வைப்பதோ —எம் ஜி ஆர் , ஜெயலலிதா ஆட்சிகளைச் சமமாகப் பாவிப்பதோ சரியல்ல . ஜெயலலிதா ஆட்சி பலவிதங்களில் பாஜகவின் சாயல்களைக் கொண்டிருந்தது .மதமாற்றத் தடை , ஆடு கோழி பலியிடத் தடை என பலவற்றைச் சொல்லலாம்.




முதல் வரிசையில் தமிழகம்

பிற மாநிலங்களோடு தக்க புள்ளி விபரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நிச்சயம் தென் மாநிலங்கள் —அதிலும் தமிழகமும் , கேரளமும் வளர்ச்சியில் முன் நிற்கும் . குறிப்பாக மனித வளக் குறியீட்டில் தமிழ்நாடு முதல் வரிசை மாநிலமே .

# திராவிடம்

அரிசி பஞ்ச எதிர்ப்பு திமுக ஆட்சிக்கு வர உதவிய காரணிகளில் ஒன்று . ஐம்பதாண்டுகளாய் அரிசிப் பஞ்சம் இல்லை .சமூகநீதி இடஒதுக்கீடு வழங்கியதில் நிச்சயம் தமிழகம் சாதித்திருக்கிறது . அடித்தட்டு மக்களுக்கு பயன்பட்ட சமூகநலத்திட்டங்களிம் தமிழகம் முன்மாதிரியே .கல்வி ,போக்குவரத்து ,ஆரம்ப சுகாதாரம் போன்றவைகளை ஒப்பீட்டளவில் பாராட்டலாம் .

அகத்தியலிங்கம் சு.பொ

மகளிருக்கான சொத்துரிமை ,மகளிருக்கான சமூகநலத் திட்டங்களுக்கு திமுக ஆரம்பம் செய்தது ;பின்னர் மேலும் முன்னெடுக்கப்பட்டது . போதாமையும் உண்டு ; போய்ச் சேர வேண்டியதும் நெடுந்தூரம் .



திமுக ஆட்சிகாலம் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் காலமாகவும், அதை முடிக்கிற போது அதிமுக ஆட்சியாகவும் அமைந்துவிடுகிறது . எடுத்துக்காட்டு கோயம்பேடு பேருந்து நிலையம் , வணிக வளாகம் .மெட்ரோ முதலியன.

சிந்தனை சிற்பி சிங்கார வேலர் சென்னையில் ஒரு பள்ளியில் சிறிதாக துவங்கிய மதிய உணவுத் திட்டம் —காமராஜர் காலத்தில் மாநிலம் முழுதும் சிறிய அளவில் விரிவாக்கப்பட்டு , எம் ஜி ஆரால் மிகப்பெரிய சத்துணவுத் திட்டமானது .

“கணவன் சொன்னாலும் தாய்மார்கள் கேட்க மாட்டார்கள் ; எனக்குத் தான் வாக்களிப்பார்கள்” என எம் ஜி ஆர் சொன்னது வேடிக்கையாகத் தோன்றலாம் ; பெண்களை சுதந்திரமாக வாக்களிக்கச் செய்தது சாதனையே. வட மாநிலங்களில் இன்னும் கணவனை மீறி மனைவி வாக்களிக்க முடியாது.

ஆனால் பெரியாரின் பெண்ணியப் பார்வையை பயிற்றுவிப்பதில் இருகழகங்களும் பின்தங்கிவிட்டன.



கோட்டையில் கொடி ஏற்றும் உரிமை

'காஞ்சி' ஏட்டில் அண்ணா எழுதிய கட்டுரையில் மாநில உரிமையை தன் இறுதிக் கனவாய் சொல்லியிருப்பார் ; மாநில உரிமையில் ஆரம்பத்தில் திமுக காட்டிய அக்கறை பின்னர் இல்லை . தமிழ்நாடு என பெயர் சூட்டியது , கோட்டையில் கொடியேற்ற வாய்ப்பு போன்றவை தவிர சொல்ல ஏதுமில்லை .

இக்காலத்தில் மாநில உரிமைகள் பெருமளவு அரிக்கப்பட்டுள்ளன . திமுக மத்திய ஆட்சியில் பங்காளியாய்ப் போனதால் மாநில உரிமைக்குரலை அடக்கியே வாசித்தது .

அதிமுக எப்போதும் மாநில உரிமைக்கு பெரிதாய் குரல் கொடுத்ததில்லை . சில சந்தர்ப்பங்களில் இருகழகங்களுமே மத்திய அரசை உறுதியாய் எதிர்த்துள்ளன . எடுத்துக்காட்டு— இடஒதுக்கீடு .

தோல்விப் பட்டியல்

தமிழ் மொழிக்காக போராடிய வளமார் பாரம்பரியமிக்க கழக ஆட்சிகளில் தமிழை பயிற்று மொழி, ஆட்சி மொழியாக்குவதில் ஏற்பட்ட தோல்வி முக்கியமானது .

உலக மயமாக்குதல் தொடங்கிய எண்பதுகளில் கல்வி வியாபாரம் கொழுத்தது . எம் ஜி ஆட்சி காலத்தில் கல்வியும் பணமீட்டும் தொழிலானது; பின்னர் மேலும் சீரழிந்தது . தமிழின் வீழ்ச்சியில் கல்வி வியாபாரத்தின் பங்கும் அதில் இருகழகத்தவர் பங்கும் சேர்த்தே பார்க்கப்பட வேண்டும் .

நகர்மயமாதலில் தமிழகம் முன்னிலையில் நிற்கிறது ; இதன் மறுபக்கமான விவசாய அழிவு , நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ரியல் எஸ்டேட் ; மணல் ,கனிமக் கொள்ளை அனைத்திலும் இரு கழகங்களும் போட்டிபோட்டு ஈடுபட்டன .

வனப் பாதுகாப்பு ,நீர்நிலை பாதுகாப்பு மிகப்பெரிய தோல்வியே !

தொழிலாளர் , விவசாய நலன் இவற்றில் சில தேன்தடவிய அறிவிப்புகளைத் தவிர சொல்லும் படியாக இல்லை. நில மறுவினியோகத்தில் கிட்டத்தட்ட ஏமாற்றமே .தொழிலாளர் மீதான தாக்குதல் , ஜனநாயக உரிமை மறுப்பு என உறுத்தும் ரணங்கள் அதிகம் .

எம் ஜி ஆர் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பொழுது கருணாநிதி மீது சாதிசார்ந்து இழிவு வசைமாரியாய்ப் பொழியப்பட்டது .'சாதி எதிர்ப்பு' மெல்ல நீர்க்கத் தொடங்கியது. .

' ஆணவக் கொலைகளும்' ' தீண்டாமை பேயாட்டமும் ' தமிழகத்துக்கு தலைகுனிவையும் , இந்துத்துவ கூட்டத்துக்கு மகிழ்ச்சியையும் உருவாக்கி உள்ளது .கலைஞரின் கடைசி ஆட்சி காலத்தில் 'சமூகநீதிக்கென தனித்துறை' உருவாக்கப்பட்டும் செயல்படவே இல்லை .ஜெயலலிதா இப்பிரச்சனைகளின் மவுனமாக சங்பரிவார் நிலையையே மேற்கொண்டார் .

ஊழல், குடும்ப ஆட்சி, ஈழம்

ஊழல் காலங்காலமாக ஆட்சியாளர்களோடு ஒட்டிப் பிறந்த நோய்தான் ; தாராளமயமும்

,உலகமயமும் கொள்ளையின் வாசலை அகலத் திறந்தன ; இரு கழகங்களும் போட்டி போட்டு ஊறித் திளைத்தன .

தீமை பயக்கும் உலக மயத்தை காங்கிரஸ் பாஜக போல் தீவிரமாக அமலாக்கியதில் இரு கழகங்களும் ஒன்றே .

ஒப்பீட்டளவில் பெயரளவுக்கேனும் உட்கட்சி ஜனநாயகம் திமுகவில் மிச்சமிருக்கிறது ; அதிமுகவில் கிட்டத்தட்ட இல்லை. முகம் சுளிக்கச் செய்யும் தனிநபர் துதியும் ,காழ்ப்பும்,வசையும் இரு கழகங்களுக்கும் உரியன .

முரசொலி மாறனோ ,ஸ்டாலினோ பொறுப்புக்கு வந்ததை புரிந்து கொள்ள முடியும் ; ஆனால் ,தயாநிதி மாறன் , அழகிரி,கனிமொழி இவர்களுக்கு பதவி வழங்கப்பட்டது 'குடும்ப ஆட்சி' எனும் பெருங்களங்கத்தை திமுகவின் மீது ஆழப்பதித்தது .





கருணாநிதி எதிர்ப்பு , குடும்ப ஆட்சி எதிர்ப்பு என்கிற ஒற்றை அஜெண்டாவில் பிறந்து வளர்ந்து ஆண்ட அதிமுக லட்சணம் ஜெயலலிதா மறைவுக்குப் பின் பல்லிளிக்கிறது ; சசிகாலா குடும்பம் ,பன்னீர் குடும்பம் என நாற்றமெடுக்கிறது .

'தமிழீழம்' தமிழகத்தையும் உலுக்கிய பிரச்சனை .எம்ஜிஆர் ,கருணாநிதி ,ஜெயலலிதா ஆகிய மூவரும் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு நிலை எடுக்க நேரிட்டது .

கடைசி நொடிவரை எதிர்த்த ஜெயலலிதா ஒரே நாளில் 'ஈழத்தாய்' வேஷத்துக்கு பொருந்திப் போனதும், ஆரம்பத்திலிருந்தே ஆதரித்த கருணாநிதி 'வில்லன்' அளவுக்கு சித்தரிக்கப்பட்டதும் வரலாற்று நகை முரணே !

தீவிர தமிழ் தேசியமும் இந்துத்துவாவும் பேசும் "திராவிட எதிர்ப்பு" இணையும் புள்ளி ஒன்றே . அது கழகங்களை சீர்குலைப்பதற்கான வலதுசாரி முயற்சி.

இடதுசாரிகள் எதிர்ப்பு என்பது கழகங்கள் வீரியமிக்க பாரம்பரியத்தை கைவிட்டுவிடாமல் முற்போக்கு திசையில் மேலும் நடை போடச்செய்யவே ! இன்னும் வலுவான வாக்கு வங்கி இவர்களிடமே இருக்கிறது . தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் இரு கட்சிக்கும் ஆட்கள் உண்டு ; எப்படி இருப்பினும் திராவிட இயக்கத்தின் வரலாற்றுத் தேவையும் முடிந்துவிடவில்லை .

"இந்திய ஒன்றியத்தில்" பறிபோன மாநில உரிமைகளை மீட்கவும், இன்னும் அதிக உரிமை பெறவும் , மதச்சார்பின்மை ,பன்முகப்பண்பாடு ,ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவைகளை வென்றெடுக்கவும், சூழும் பாசிச நெருப்பிலிருந்து தப்பவும் இடதுசாரிகளும் ,மாநிலக்கட்சிகளும் போர்க்களத்தில் ஒன்றிணைய காலம் கட்டளையிடுகிறது.





# ஆசுகவி


### சமயம் கடந்த சமரச ஞானி

இந்திய ஒருமைப்பாட்டை அரசியல்வாதிகளும் அறிவியல்வாதிகளும் உருவாக்குவதற்கு முன்னர், அதனை உருவாக்குவதற்கு முழு மூச்சாய் நின்றவர்கள் ஆன்மிகவாதிகளே. வாழையடி வாழையென வந்த அந்தத் திருக்கூட்ட மரபில் கபீரும் ஒருவர். கண்ணனைத் தேசியக் கடவுள் ஆக்குவதற்கு மகாகவி பாரதி, பிறந்தது மறக்குலத்தில் — அவன் பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில்; சிறந்தது பார்ப்பனருள்ளே — சில செட்டி மக்களோடும் மிகப் பழக்கமுண்டு’ எனப் பாடினான்.

ஆனால், கபீர் ஓர் இந்திய ஒருமைப்பாட்டுக் கவி என்பது அவருடைய பிறப்பிலும் வளர்ப்பிலும் இயல்பாக அமைந்திருக்கிறது. அவர் பெயர் தெரியாத ஓர் இந்து பெற்றோருக்குப் பிறந்த பிள்ளை. ஆனால், இசுலாமியக் குடும்பத்தாரால் வளர்க்கப்பட்டிருக்கிறார். அவருடைய இறைக்கவிகள், சீக்கியர்களுடைய வேதமாகிய கிரந்த சாகிப்’பில் விரவிக் கிடக்கின்றன. அவருடைய கவிதைகளில் சூபிசமும் புத்தருடைய போதனைகளும் ஊடாடி நிற்கின்றன. அவருடைய ஞானப்பாடல்கள் உபநிஷதக் கருத்துக்களை உள்வாங்கி நிற்கின்றன.

அவருடைய பெற்றோர், வளர்த்தோர் பற்றிய கதைகள் ஜோடிக்கப்பட்டவையே. நதிமூலம் ரிஷி மூலம் பார்க்காதே எனும் பழமொழி, கபீருக்கு முற்றிலும் பொருந்தும்.

கபீர் என்னும் பெயர் ஓர் இசுலாமியப் பெரியாரால் வழங்கப்பட்டதாகும். அவர் திருக்குரானைத் திறந்தவுடன், பெரிய’ எனும் பொருளைத் தரும் கபீர்’ எனும் சொல் தென்பட்டதாம். அதனால், ஆதரவற்ற அந்தக் குழந்தைக்கு கபீர்’ எனப் பெயரிட்டாராம். கபீர் தம் பாடல்களில் வாராணசிக்கு அருகில் உள்ள மக்ஹர்’ எனும் ஊரைப் பற்றிக் குறிப்பிடுவதால்,




மக்ஹர்’ அவருடைய பிறப்பிடம் எனத் தெரிகிறது. அவருடைய சமாதியும் அங்கேயே அமைந்திருக்கிறது.

தம் சொந்த வாழ்க்கையைப் பற்றி எதுவும் சொல்லாத கபீர், தமக்கு குரூரமான ஒரு மனைவி வாய்த்ததாகவும், அவள் மரியாதை அற்றவள்’ என்றும் குறிப்பிடுவதால், அவர் இல்லறத்திலிருந்து துறவறத்திற்கு வந்திருக்கலாமெனத் தெரிகிறது. அவருக்குப் கமால்’ என்று ஒரு புதல்வனும், கமாலி’ என்று ஒரு புதல்வியும் இருந்ததை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

தொடக்கத்தில் கபீர் எந்தக் குருவிடத்திலும் பயிலவில்லை. அதனால் குருவற்றவர்’ எனும்




# கபீர்

**தி. இராசகோபாலன்**

பொருளில் நிகுரா' என அழைக்கப்பட்டார். என்றாலும், ஜயதேவர், நாமதேவர் இருவரையும் குறிப்பாகத் தம் பாடல்களில் சுட்டுவதால், ஏகலைவனைப் போல் கற்றிருக்கிறார் எனத் தெரிகிறது. வளர்ந்த காலத்தில் இராமானந்தர் ஏற்காவிட்டாலும், கபீர் அவரைத் தம் குருவாக வரித்துக் கொண்டார் என்பதை அனைவரும் ஏற்கின்றனர்.

கபீருக்கு வாயால் கவிதை சொல்லத் தெரியுமே தவிர, ஏட்டில் எழுதத் தெரியாது. அவருடைய பாடல்கள் வாய்மொழி இலக்கியமாகவே வழங்கப்பட்டதால், இடைச்செருகல்கள் நிறைய நிகழ்ந்தன. வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர், கபீரின் பாடல்களை மொழி பெயர்த்தார். ஆனால், அவற்றுள் ஆறு பாடல்களே கபீரின் பாடல்கள் எனப் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

கபீர்,இந்து — இசுலாம் சமயங்களுக்கிடையிலிருந்த பகுத்தறிவுக் கொள்கைகளை இணைத்து, ஒரு புதிய மார்க்கத்தை உருவாக்க நினைத்தார். அவருடைய மார்க்கத்தைப் பின்பற்றும் மக்களுக்குக் கபீர் பாந்த்' (கபீர் வழியினர்') எனப் பெயர். வாராணசியில் பாய் பின்னுகின்ற இனத்திற்கு ஜோலாஹா' என்றும், கோரி' எனவும் பெயர். கபீர், தம்மை ஜோலாஹா' எனவும், கோரி' எனவும் பாடல்களில் குறிப்பிட்டிருப்பதால், அவர் பாய் பின்னும் குடும்பத்தாரால் வளர்க்கப்பட்டிருக்கிறார் என்பது தெரிகிறது.




கபீரின் கவிதைகளில், எங்கே கவிதை முடிகிறது, எங்கே ஆன்மிக ஞானம் தொடங்குகிறது என்பதைக் கண்டுபிடிப்பது கடினம். இவ்விரண்டு உத்திகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன' என வரலாற்றறிஞர் டாக்டர் மாச்வே வர்ணிக்கிறார். காந்தியடிகள், கபீரின் கீழ்வரும் பாடலை தமது பிரார்த்தனைப் பாடலாக்கிக் கொண்டார்.

நெசவு பாவு என்ன? ஊடு நூல் என்ன?

Kabir



Be quiet in your mind, quiet in your senses, and also quiet in your body. Then, when all these are quiet, don't do anything. In that state truth will reveal itself to you.

போர்வை நெய்ய உதவும் நூல்கள் தாம் என்ன?
எட்டு கமலங்கள், எழில் பத்து
இராட்டினங்கள்
ஐந்து மூலப் பொருள்கள், மூன்று
போர்வைக் குணங்கள்
பரமனுக்கு இதைச் செய்ய பத்து
மாதமாயிற்று!'

சூபிசமும், சித்தர் பாடுபொருளும் பின்னிய இப்பாடல், காந்தியடிகளைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

எல்லா உயிர்களுக்குள்ளும் இறைத்தன்மை ஊடுருவி இருப்பதால், எந்த உயிருக்கும் தீங்கு செய்யக்கூடாது என்பது கபீர்தாசின் கொள்கையாகும். அதனை அவர் இந்து இராமன்' பெயரை ஓதுவர், முஸ்லிம் இறைவனே' என்பர். கபீரின் கடவுள், உயிரனைத்திலும் கலந்துள்ளார்" எனப் பாடியிருக்கிறார்.

கபீர், போதித்ததை தம் வாழ்வில் சாதித்தும் காட்டியுள்ளார். கபீர், தான் உண்பதற்காக ஒரு காய்ந்து போன ரொட்டித் துண்டு வைத்திருந்தார். ரொட்டி வறண்டு கிடப்பதைக் கண்ட கபீர், அதனை நெய்யில் தடவி சாப்பிடுவதற்காக வீட்டுக்குள்ளே நெய்யை எடுப்பதற்காகச் சென்றார்.

அப்போது ஒரு நாய் அந்த ரொட்டித் துண்டைக் கவ்விக்கொண்டு ஓடிற்று. நெய்கிண்ணத்தோடு வெளியே வந்த கபீர், நாய் ஓடுவதைக் கண்டு, நெய்க் கிண்ணத்தோடு தொடர்ந்து ஓடி அதனை விரட்டிப் பிடித்துவிட்டார். நாய் வாயிலிருந்து ரொட்டி கீழே விழுந்தவுடன் அதனை எடுத்து, தாம் கொண்டு போயிருந்த நெய்யை அதன்மீது தடவி, தம் கையாலேயே அந்த நாய்க்கு ஊட்டினார். வியப்பிலாழ்ந்த மக்கள் அது குறித்து வினவ, காய்ந்த ரொட்டியை நாய் கடித்தால், அதன் வாய் புண்ணாகிவிடும். அதனால் நெய்யில் தோய்த்து ஊட்டினேன்' என்றார் கபீர்.

கபீர் சமயம் கடந்த ஒரு சமரச ஞானியாகத் திகழ்ந்ததால், இந்து மதத்திலும் இசுலாமிய மதத்திலும் இருந்த பல நடைமுறைகளை விமர்சனத்திற்கு உள்ளாக்கினார். அதனால், இரண்டு மதத்திலுமுள்ள அடிப்படைவாதிகள், கபீரை கண்டிக்கவும் தண்டிக்கவும் தொடங்கினர்.

கபீர் தாழ்ந்த சாதியில் பிறந்தவர் என்பதாலும், தம்மைப் போதகராக பாவித்துக் கொண்டதாலும், அவருடைய கைகளை முதுகில் கட்டி, அவரைத் துன்புறுத்தியும் இருக்கின்றனர். கபீரும் கபீரின் மார்க்கமும்' எனும் நூலை எழுதிய ஜி.ஹெச். வெஸ்ட்காட், கபீர் இரண்டு மதத்தினராலும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதை உறுதி செய்கிறார். கபீர் வாழும்போது வதைக்கப்பட்டாலும், அவருடைய கடவுள் கொள்கை, ஆன்மநேய விடுதலை, சமயம் கடந்த சமரச ஞானம் ஆகியவை இன்றும் பொக்கிஷம் போல் போற்றப்படுகின்றன.

கபீரின் பாடல்கள், இசைவாணர்களால் மட்டுமன்றி, நாட்டுப்புற மக்களாலும் போற்றப்படுகின்றது. அவருடைய நாடோடிப் பாடல்களின் இனிமைக்கு ஒரு பாடலை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

எப்படி நாளை நான் கழிப்பேன்?

இயம்பிடுவாய் வழியை

இப்பக்கம் கங்கை, அப்பக்கம் யமுனை, இடையே எனக்கோர் குடிசையமை

என்றன் மேலாடை தன்னைநான்,


காகிதம் போலக் கிழித்திடுவேன்

என்றன் இதயத்து உன்முகத்தை,
என்றும் எழுதி அருள்வாயே'

என்னும் பாடல், வாராணசிவாசிகளின் உதடுகளால் இன்றும் உச்சரிக்கப்படுகின்றது.

இவ்வுடம்பு ஆடை போன்றது. அது பயன்படப் பயன்படக் கிழிந்து போக வேண்டியதே! எனவே ஏன் அதில் பற்று வைக்க வேண்டும்?' இந்தக் கருத்து உழைக்கும் வர்க்கத்தவரின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந்தது.

கபீர் ஒரு வேதாந்த கவி மட்டுமன்று; ஒரு சூபிச கவி மட்டுமன்று; அவர் ஒரு சமதர்மக் கவிஞராகவும் வாழ்ந்திருக்கிறார். பற்றற்ற துறவு வாழ்க்கை வாழ வேண்டும் என இறையன்பர்களை எச்சரித்த கபீர், ஒரு பாமரனின் தேவைகள் என்னென்ன என்பதையும் பாடியிருக்கிறார்.




பசியுடன் பிரார்த்தனை முடியாது, பரம!
இச்செபமாலை வாங்கிக் கொள்!
என் வயிறு இருமுறை நிரம்பிடவே, எனக்கு அரைச்சேர் தானியம் வேண்டும்!
உறங்கத் தேவை ஒரு கட்டில், ஒரு
மரச் சட்டம் தலையணையாம்,
பொய் புனைந்துரைகள் புகலவில்லை; புகல்வேன் இறைவா! உன் பெயரை'

எனும் பொதுவுடைமைக் குரல் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

ஆன்மா ஆணில்லை, பெண்ணில்லை, அலியுமில்லை. அது, தான் தேடி அடையும் உடலாகிய ஆடைக்கேற்ற உருவத்தை எடுத்துக் கொள்கிறது' என்பது உபநிஷதக் கருத்து. அந்த உபநிஷதக் கருத்தை உள்வாங்கிக் கொண்ட கபீர்,

அது நானுமில்லை, தேவனுமில்லை, அது ஊழியம் கோரும் புனிதனுமில்லை,

அது யோகியுமில்லை, துறவியுமில்லை; அதற்குத் தாயுமில்லை, தனயனுமில்லை

அது இல்வாழ்வானுமில்லை; இரப்பவனுமில்லை, அது அரசனுமில்லை, ஆண்டியுமில்லை, அது இந்துவுமில்லை, இஸ்லாமுமில்லை, அதன் பிறப்பையும் இறப்பையும் பார்த்திலர் எவரும்'

என ஒரு சின்ன கருப்பொருளுக்கு, விரிவாக்கமும், விளக்கவுரையும் கொடுத்துப் பாடுகிறார்.

மதக்காழ்ப்பு என்பது ஒருவன் வாழுகின்றபோது மட்டும் ஆட்டிப்படைப்பதில்லை; ஒருவன் மறைந்த பிறகும் அவனைச் சுட்டெரிக்கக் கூடியதாகும். கபீர் இவ்வுலக வாழ்வை நீத்தவுடன், இரண்டு மதத்தார்களும் போட்டி போட்டுக்கொண்டு, உடலை எரிக்க வேண்டும்', புதைக்க வேண்டும்' எனப் போரிட்டனர். இதில் மத்தியஸ்தர்களாக இருந்த சிலர், இரண்டு மதத்தினரும் கபீருடைய புகழுடம்பைப் பாதி பாதியாக ஒரு போர்வையைக் கொண்டு போர்த்தி வைத்துவிட்டுப் போங்கள்; இரண்டு நாட்கள் கழித்து முடிவெடுப்போம்' எனக்கூறி அனுப்பிவிட்டனர். இரண்டு நாட்கள் கழித்து இரண்டு மதத்தினரும் வந்து தங்கள் தங்கள் போர்வைகளை அகற்றியபோது, அந்த இடத்தில் பூக்கள் குவியல் குவியலாகக் கிடந்தன. இருதரப்பினரும் பூக்களை அள்ளிக்கொண்டு, சமாதானமாகப் போனார்களாம்.

இந்நிகழ்வை நம்புவதற்கில்லை என்றாலும், இது கற்பிக்கின்ற பாடம் மகத்தானதாக இருப்பதால், அப்படியே ஏற்பதில் தவறில்லை.

(இவ்வாண்டு, கபீர் அமரத்துவம் அடைந்த 500—ஆவது ஆண்டு)

# என்ன தவம்


## ஃபின்லாந்து மக்களின் மகிழ்ச்சிக்கான ரகசியம்!


மகிழ்ச்சியாக இருப்பவரை எந்த நோயும் அண்டாது என்று இந்திய கிராமங்களில் சொல்வார்கள். இதையே கொலம்பியா எழுத்தாளர் கேப்ரியல், சந்தோஷத்தால் குணப்படுத்த முடியாத நோயை, உலகின் எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாது என்கிறார். மகிழ்ச்சி அனைத்தையும் குணப்படுத்தவல்லது.

அறிக்கை

பூமியில் மகிழ்ச்சியான இடம் ஃபின்லாந்து என இந்த ஆண்டுக்காண வருடாந்திர அறிக்கையில் ஐ.நா குறிப்பிட்டுள்ளது. சென்ற ஆண்டு இந்த இடத்தை நார்வே பிடித்திருந்தது.

மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளார்கள் மற்றும் என்ன காரணங்களால் மகிழ்ச்சியாக உள்ளனர் என்பதை வைத்து உலக மகிழ்ச்சி அறிக்கை அளவிடும்.







ஆனாலும் அனைவராலும் எப்போதும் சந்தோஷமாக இருக்க முடியாது. சந்தோஷத்தை தீர்மானிப்பதில் குடும்பம் முதல் உலக அரசியல் வரை பல காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உலகின் மகிழ்ச்சியான நாடு ஃபின்லாந்து : ஐ.நா

நோர்டிக் நாடுகள்தான் வழக்கமாக முதல் ஐந்து இடங்களை பிடிக்கும். துணை சஹாரா ஆஃப்ரிக்க நாடுகள் கடைசி ஐந்து இடங்களில் இருக்கும்.

கடந்த ஆண்டு கடைசி இடத்தில் இருந்தது மத்திய ஆஃபிர்க்க குடியரசு நாடாகும். இந்த ஆண்டு கடைசி இடத்தில் புருண்டி நாடு உள்ளது.



மு. நியாஸ் அகமது, அபர்ணா ராமமூர்த்தி

இந்த ஆண்டின் ஐ.நா அறிக்கையில் குடியேறியவர்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அந்த வகையிலும், ஃபின்லாந்தில் குடியேறியவர்கள் மகிழ்ச்சியாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஐ.நா வெளியிட்ட உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இந்தியா 133 வது இடத்தில் இருக்கிறது. இன்னும் துல்லியமாக சொல்லவேண்டுமென்றால் சந்தோஷ விஷயத்தில் காங்கோவுக்கும் நைஜீரியாவுக்கும் மத்தியில் இருக்கிறது இந்தியா.



உலகின் மகிழ்ச்சியான நாடு ஃபின்லாந்து : ஐ.நா அறிக்கை

ஃபின்லாந்து இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறது. உலகெங்கும் குடிபெயர்தல் பிரச்னை தலைப்பு செய்தியாக இருக்கும் இக்காலக்கட்டத்தில், ஃபின்லாந்தில் குடியேறியவர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்கிறது இந்த ஐ.நா அறிக்கை.

இது எப்படி சாத்தியமானது?

இலவச கல்வி, தரமான சுகாதாரம்

மகிழ்ச்சி என்பது ஒரு அகநிலை அனுபவம். ஆனால், அதையெல்லாம் கடந்து எம்மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இலவச கல்வியும், தரமான சுகாதார வசதியும்தான் காரணம் என்கிறார் ஃபின்லாந்தை சேர்ந்த அன்ட்டி காப்பினன்.

அதே மனநிலையில் அவர், “என்தேசம் குறித்து நான் பெருமை கொள்கிறேன். ஐ.நா அறிக்கைகாக அல்ல. இந்த மகிழ்ச்சி குறியீடு அறிக்கையில் என் நாடு இடம் பெறாமல் போயிருந்தாலும், நான்

இதே மனநிலையில்தான் இருப்பேன்."என்கிறார்.

எல்லாருக்கும் எல்லாமும்

மேலும் அவர், "எல்லாருக்கும் எல்லாவற்றுக்குமான வாய்ப்பு இங்கு இருக்கிறது. அது அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம். அதுமட்டுமல்ல, இரண்டாவது உலக போருக்குப் பின் இங்கு எந்த அரசியல் நெருக்கடியும் நிலவவில்லை. ஃபின்லாந்த் ஒரு நடுநிலையான நாடு. எங்களுக்கு யாருடனும் விரோதம் இல்லை." என்கிறார்.

முழுமையான பாலின சமத்துவமும், பொருளாதார சமத்துவமும் நிலவுகிறது. எல்லாருக்கும் எங்கள்நாடு வாய்ப்பு வழங்குகிறது. இவையெல்லாம் எங்களை மகிழ்சியாக வைத்துக் கொள்கிறது." என்கிறார்.

இந்த ஆய்வில் வெளிநாடுகளிலும் குடியேறியவர்களும் ஃபின்லாந்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக யெனா, " எங்கள் நாட்டில் குடியேறியவர்களிடமும் நாங்கள் எந்த வேற்றுமையும் பார்ப்பதில்லை. ஒரு ஃபின்லாந்து நாட்டவருக்கு என்னென்ன வாய்ப்புகள்




"நாங்கள் இருபத்துநான்கு மணிநேரமும் வேலை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று நினைக்க மாட்டோம். ஓய்வு நேரங்களை எங்களுக்கு பிடித்தமான விஷயத்தில் செலவிடுவோம். இசை, குடும்பம், விளையாட்டு என எங்களுக்கு விருப்பமானவற்றில் மூழ்குவோம். இவையெல்லாம்தான் நாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு காரணமென்று கருதுகிறேன்." என்கிறார் அதே மகிழ்வுடன்.

முழுமையான பாலின சமத்துவமும், பொருளாதார சமத்துவமும் நிலவுகிறது. எல்லாருக்கும் எங்கள்நாடு வாய்ப்பு வழங்குகிறது.

சமத்துவம்


இதே கருத்தைதான் முன் வைக்கிறார் தொடர்பியல் துறை மாணவரான யெனா வுரெலாவும். இலவச கல்வியையும், தரமான மருத்துவ வசதியையும் சுட்டிக்காட்டும் யெனா, "ஃபின்லாந்து ஒரு பாதுகாப்பான நாடு. இங்கு யாருக்குள்ளும் எந்த வேற்றுமையும் இல்லை.

எல்லாம் கிடைக்குமோ... அது அனைத்தையும் வெளிநாடுகளிலிருந்து குடியேறியவருக்கும் என் நாடு வழங்குகிறது. அம்மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட ஒருவரை சந்தோஷப்படுத்துகிறது என்றால், அது சரி என்றுதானே அர்த்தம். அந்த `சரி` எங்களுக்கும் (ஃபின்லாந்து மக்கள்) மகிழ்ச்சியையே தருகிறது.

கடந்த ஆண்டு இந்தப் பட்டியலில் நார்வே முதல் இடத்தில் இருந்தது. ஃபின்லாந்து ஐந்தாவது இடத்தில் இருந்தது.

மகிழ்ச்சிக்கான முதலீடு

நார்வே, சுவீடன் என நார்டிக் நாடுகளில் தனது நானோ தொழிற்நுட்ப ஆய்வை மேற்கொண்டு வரும் தமிழகத்தைச் சேர்ந்த விஜய்சங்கர் , "நார்டிக் நாடுகள் அனைத்து தரப்பு மக்களையும் அங்கீகரிக்கின்றன. அனைவரையும் எப்போதும் கொண்டாட்டத்தில் வைத்திருக்க தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றன. அதனால்தான், நார்டிக் நாடுகள் இந்த மகிழ்ச்சி




குறியீடு பட்டியலில் எப்போதும் முதல் பத்து இடத்தில் இருக்கின்றன." என்கிறார்.

மேலும், "மக்களை கொண்டாட்டத்தில் வைத்திருப்பதற்காக அவர்கள் செலவிடும் தொகையை செலவாக அந்நாட்டு அரசுகள் கருதுவதில்லை. அவர்களை பொறுத்தவரை அது `சமூக முதலீடு`. மனித மனம் ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக இருந்தால்தான், அதனால் ஆரோக்கியமாக சிந்திக்க முடியும். அப்படி சிந்தித்தல் நல்ல விளைவுகளை கொண்டு வரும் என்று அந்நாட்டு அரசுகள் தொலைநோக்கு பார்வையுடன் சிந்திக்கின்றன. அதற்காக மெனக்கெடுகின்றன. அதனால் அவை இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது எந்த வியப்பும் இல்லை." என்று விவரிக்கிறார் விஜய் அசோகன்.

மனித மனம் ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக இருந்தால்தான், அதனால் ஆரோக்கியமாக சிந்திக்க முடியும்.

குரோதமில்லை... வெறுப்பில்லை

நார்டிக் நாடுகளில் வரி அதிகம்தான். ஆனால், பெறும்வரி அனைத்தும் மக்கள் நலதிட்டங்களுக்காக மட்டும்தான் செலவிடப்படுகிறது. அதனால், பெரும்பாலும் அம்மக்களுக்கு வரி குறித்த எந்த வருத்தங்களும் இல்லை என்கிறார் அவர்.

"வெளிநாடுகளிலிருந்து அங்கு குடிபெயர்பவர்களுக்கு அவர்கள் அளிக்கும் முக்கியத்துவம் அலாதியானது. தாய் மொழி கல்வியை அந்நாடுகள் ஊக்குவிக்கின்றன. உதாரணமாக, முப்பது குடும்பங்கள் சேர்ந்து எங்கள் பிள்ளைகள் தமிழ் மொழியில் படிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்கு ஆவனசெய்ய வேண்டும் என்று அரசிடம் முறையிட்டால், அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை செய்கிறார்கள். அனைத்தையும், அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக இருக்க வேண்டும் என்பதில் அதிகம் கவனம் செலுத்துகிறார்கள். இப்படியான சமூகத்தில் வெறுப்பிற்கும், குரோதத்திற்கும் எங்கு இடம் இருக்கப் போகிறது. எங்கும் எப்போதும் மகிழ்ச்சிதான்" என்கிறார் விஜய் அசோகன்.

மகிழ்ச்சிகரமான பத்து நாடுகள்

- ஃபின்லாந்து
- நார்வே
- டென்மார்க்
- ஐஸ்லாந்து
- ஸ்விட்சர்லாந்து
- நெதர்லாந்து
- கனடா
- நியூஸ்லாந்து
- சுவீடன்
- ஆஸ்திரேலியா

# தமிழே

## சிதைக்கப்படும் காந்தியக் கனவு

‘உழுவார் உலகத்திற்கு ஆணி’ என்பது வள்ளுவர் வாக்கு. ஆனால், “உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது’ என்பது இன்றைய வழக்கு. உற்பத்திச் செலவு கூடியது, உற்பத்திப் பொருள்களுக்குப் போதிய விலையின்மை, மழையின்மை, காவிரி, முல்லைப் பெரியாறு போன்ற பிரச்னைகள் ஆகியவற்றால் தமிழக உழவர்கள் தத்தளிக்கிறார்கள்; மனவலிமையற்றவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

விளைநிலத்தின் பரப்பளவு சுருங்கி வருகிறது. இந்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்கள் தமிழக விவசாய நிலங்களைப் பறிக்கும் திட்டங்களாகவே அமைந்துள்ளன. காவிரிப் படுகை மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்காக 2.5 இலட்சம் ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் முயற்சி நடைபெறுகிறது. கடலூரிலிருந்து நாகப்பட்டினம் வரை பெட்ரோலிய மண்டலம் அமைப்பதற்காக 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.




தமிழ்நாட்டில் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களில் 70% பேர் ஈடுபட்டுள்ளனர். தமிழக மக்களுக்கு வேளாண்மை ஒரு தொழில் மட்டுமல்ல, வாழ்க்கை முறையுமாகும். தமிழ்நாட்டு மொத்த உற்பத்தியில் வேளாண்மை தொழில்துறையின் பங்கு 21 சதவீதமாகும். தமிழகப் பொருளாதாரத்தின் மிக முக்கிய துறையாக வேளாண்மை உள்ளது.

நகர்ப்புறங்களின் விரைந்த வளர்ச்சியால் நகரங்களையொட்டியுள்ள விவசாய நிலங்கள், வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருவதால்

புதுச்சேரியில் உள்ள பாகூர் தொடங்கி கடலூர், தஞ்சை, நாகை மாவட்டங்கள் வழியாக திருவாரூர் மாவட்டம், இராச மன்னார்குடி தெற்குப் பகுதி வரை நிலத்திற்குக் கீழே 500 அடி முதல் 1650 அடி வரை நிலக்கரிப் படிமங்கள் உள்ளன. இவற்றை வெட்டியெடுப்பதற்கு முன் நிலக்கரிப் படிமங்களின் இடுக்குகளில் உள்ள மீத்தேன் என்னும் எரிவாயுவை எடுக்க அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசின் துணையுடன் இதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. எடுக்கப்படவுள்ள மீத்தேன் எரிவாயுவின் குறைந்தளவு மதிப்பு ரூபாய் 6 இலட்சம் கோடிக்கு

# தமிழே


**பழ. நெடுமாறன்**

மேலாகும். அந்நிய நாட்டு நிறுவனம் ஒன்று கொள்ளையடிப்பதற்காக நமது விவசாயிகளின் நிலங்களை பாழ்படுத்தும் திட்டம் இது.

இத்திட்டத்திற்காக 2,000 ஆழ்துளைக் கிணறுகளை 1,650 அடி ஆழத்தில் அமைத்து நிலக்கரியை மூடியிருக்கும் நிலத்தடி நீரை முற்றிலுமாக வெளியேற்றப் போகிறார்கள். அடிமட்ட நிலத்தடி நீர் கடல் நீரைவிட 5 மடங்கு அதிகமான உப்பு நீராகும். வெளியேற்றப்படும் இந்த நீர், விவசாய நிலங்களின் பாசனக் கால்வாய்களின் வழியே ஓடி, நீர் செல்லும் வழியெங்கும் உவர் மண்ணாக்கும். மேலும், மேல் மட்டத்தில் உள்ள நல்ல நீர் கீழிறங்கிவிடும். அதுவும் சேர்ந்து வெளியேற்றப்படும். எனவே வேளாண்மைக்கோ, குடிக்கவோ காவிரிப் படுகைப் பகுதியில் இனி நிலத்தடி நன்னீர் கிடைக்காது. மீத்தேன் எரிவாயு 40 ஆண்டுகள் எடுக்கப்படும். அதற்குப் பின்னர் 100 ஆண்டுகளுக்கு நிலக்கரி தோண்டி எடுக்கப்படும். காவிரிப் படுகைப் பகுதி மக்கள் வாழ முடியாத பாழ்பட்ட பகுதியாக மாறிப்போகும்.

இப்போது சேலம் — சென்னை விரைவுச் சாலை திட்டத்திற்காக 4,750 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒதுக்கப்பட்ட வனப்பகுதியில் 250—க்கும் மேற்பட்ட ஏக்கர் காடுகள் அழிக்கப்படும். இக்காடுகளில் வாழும் வன விலங்குகள், பறவைகள், பல்வேறு உயிரினங்கள் இடமாற முடியாமல் தத்தளிக்கும்.

25 ஏக்கர் பரப்பளவுள்ள காடு அழிக்கப்பட்டாலே கானுயிர் பன்முகத்தன்மை பெரும் பாதிப்புக்குள்ளாகும் என இயற்கை விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தச் சாலை செல்லும் காடுகளில் உள்ள 14 கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வும் பாதிக்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக வட தமிழ்நாட்டின்



*India's way is not Europe's;*
*India is not Calcutta and Bombay.*
*India lives in her seven hundred thousand villages.*



**M. K. Gandhi**

CWMG, Vol. XXVI, p. 286

நுரையீரலாக இந்த காடுகள் திகழ்ந்து வருகின்றன. நுரையீரல் பாதிக்கப்படும் மனிதன் சிறுகசிறுக சாவை நெருங்குவதைப் போல, வட தமிழ்நாட்டில் பேரழிவு ஏற்பட்டுவிடும்.

ஏற்கெனவே சேலத்திலிருந்து சென்னை செல்ல மூன்று நெடுஞ்சாலைகள் உள்ளன. அவற்றில் சென்னை — வாணியம்பாடி சாலை ஆறு வழிச்சாலையாகும். மேலும் தொடர்வண்டிப் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியவையும் உள்ளன.

ஐந்து மாவட்டங்களில் உள்ள விவசாய மற்றும் வன நிலத்தை கையகப்படுத்தி 274.3 கி.மீ. நீளமுள்ள எட்டு வழிச்சாலை அமைப்பதன் மூலம் சென்னை — சேலம் சாலை வழிப்பாதை 57 கி.மீ. நீளம் மட்டுமே குறையும். பயண நேரத்தைக் குறைப்பதற்கு இந்த எட்டு வழிச்சாலை தேவை என தமிழக முதல்வர் கூறியுள்ளார். ஆனால் சாலைப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கானத் திட்டமாக இதை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. இது சம்பந்தமாக அந்த அமைச்சகம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் 53 நிபந்தனைகளைக் குறித்துள்ளது.

வனப்பகுதியை தவிர்த்து சாலை அமைக்க முடியுமா? விவசாயப் பகுதிகள், நீர் நிலைகள் பாதிக்காத வண்ணம் உள்ள மாற்றுவழிகள் என்ன? சாலைக்காக வெட்டப்படவேண்டிய மரங்களின் எண்ணிக்கை, வனப்பகுதியில் உள்ள விலங்குகள் பாதுகாப்பாக உலவும் வகையில் மாற்றுப் பாதைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா? விவசாயிகளின் குடியிருப்புகளை ஊடுருவி இந்தச் சாலை சென்றால், அவர்கள் வளர்க்கும் ஆடு, மாடுகள் சாலையைக் கடந்து செல்லவும், வேளாண் வண்டிகள் மற்றும் கருவிகளைக் கொண்டு செல்லவும் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

இச்சாலை வழியில் அமைந்திருக்கும் பழமையான கோயில்கள், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், வரலாற்றுச் சின்னங்கள் போன்றவற்றையெல்லாம் குறித்து ஆராய்ந்து அறிக்கை தரவேண்டுமென குறிப்பிட்டுள்ளது. ஆனால், இந்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ள விவரம் எதுவும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. இந்த கேள்விகளுக்குரிய விடைகள் அளிக்கப்பட்டனவா அல்லது அலட்சியப் படுத்தப்பட்டனவா?

இத்திட்டத்தின் விளைவாக, ஐந்து மாவட்டங்களுக்குள்பட்ட 14 ஒன்றியங்களில் உள்ள 159 கிராமங்களையும், மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கி 120 கி.மீ. வேகத்தில் சரக்கு வாகனங்கள் செல்லும் எட்டு வழி விரைவுச்சாலை அமைக்க அவசரம் காட்டுவது ஏன்? இந்த கேள்விக்கு விடையை நாம் ஆராய்வோமானால் பல திடுக்கிடும் உண்மைகளை அறிய நேரிடும்.


இத்திட்டத்திற்குட்பட்ட தருமபுரி மாவட்டத்தில் கிரானைட், மாங்கனசைட், குவார்ட்ஸ், சிலிக்கா மண், வெர்மிகுலைட், அப்பாடைட், சைனா களிமண், கோரண்டம், தங்கம், இரும்புத் தாது, மோலிப்டெனம், வோல்லாஸ்டோனைட் போன்ற கனிமங்கள் கிடைக்கின்றன. சேலம் மாவட்டத்தில் பாக்சைட், டியூனைட், பைரோக்சைனைட், கிரானைட், லைம்ஸ்டோன், மாக்னசைட், குவார்ட்ஸ், சிலிக்கா மண், ஸ்டீயடைட், கால்சைட், இரும்புத் தாது, டோலமைட் போன்ற கனிமங்கள் கிடைக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் இரும்புத் தாது, கிரானைட், சைனா களிமண் போன்றவை கிடைக்கின்றன. காஞ்சி மாவட்டத்தில் ஃபெல்ட்ஸ்பார்,

ஃபயர்கிளே, கிரானைட், லைம்ஸ்டோன், குவார்ட்ஸ், சிலிக்கா மண், சைனாகளிமண்

ஆகியவை கிடைக்கின்றன.

இந்தத் தாதுக்களை வெட்டி எடுத்து விரைவாக சென்னைத் துறைமுகத்திற்குக் கொண்டு சென்று ஏற்றுமதி செய்வதற்கு வசதியாகத்தான் இந்த விரைவுச்சாலை அமைக்கப்படுகிறது. மேலும், இந்த சாலையின் இருபுறங்களிலும் அலுமினியம், கண்ணாடி, சிலிக்கான், செராமிக் மற்றும் சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டமும் உள்ளது. அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிலம், வன நிலம், விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்தப்படும் நிலம் ஆக எல்லாம் சேர்ந்து இத்திட்டத்திற்காக சுமார் 5,600 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

காந்தியடிகளின் 150—ஆவது பிறந்த நாள் விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. காந்தியடிகள் விவசாயிகளின் துயர் துடைக்கும் போராட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தார். ஏனெனில், நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 60% பேர் தங்களின் வாழ்வாதாரத்திற்கு கிராமப்புற நிலங்களையே நம்பியிருக்கிறார்கள் என்ற உண்மையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். 1917—ஆம் ஆண்டில் பிகார் மாநிலத்தில் சாம்பரான் விவசாயிகளை தங்கள் நிலத்தில் ஒரு பகுதியில் அவுரி பயிரிடுமாறு ஆங்கிலேய ஆட்சி வற்புறுத்தியது. இங்கிலாந்தில் உள்ள துணி நெசவாலைகளுக்கு வேண்டிய சாயம் அவுரி செடிகளிலிருந்து எடுக்கப்பட்டது. இதற்காக விவசாயிகள் கொடுமைப்படுத்தப்பட்டபோது அவர்களை மீட்பதற்காக “சாம்பரான் விவசாயிகள் போராட்ட’த்தை காந்தியடிகள் இராசேந்திர பிரசாத் தலைமையில் நடத்தினார்.




சேலம் எஃகு தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரி, அனல் மின் திட்டம் போன்ற திட்டங்களுக்கு விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. ஆனால், இத்திட்டங்கள் யாவும் அரசின் திட்டங்களாகும். இவற்றால் கிடைக்கும் ஆதாயம் அரசுக்கும், அதன் மூலம் மக்களுக்கும் போய்ச் சேருகிறது. ஆனால், சேலம் — சென்னை விரைவுச்சாலை திட்டத்தின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது.

அ.தி.மு.க. அரசின் தேர்தல் அறிக்கையிலோ, பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையிலோ இத்திட்டம் குறித்து குறிப்பிடப்படவே இல்லை. எந்தவொரு கட்சியோ, பொதுமக்களோ கேட்கவில்லை. பின், யாருக்காக இத்திட்டம் அவசரஅவசரமாக நிறைவேற்றப்படுகிறது?

இந்த அநீதியை எதிர்த்துப் போராடுபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். கூட்டங்கள் தடுக்கப்படுகின்றன. இயற்கை வளங்களையும் தங்களது வாழ்வாதாரமான நிலங்களையும் காக்கப் போராடும் மக்களுக்கு எதிராகக் கடும் ஒடுக்குமுறை ஏவப்பட்டுள்ளது.

அதேபோன்று, குசராத் பர்தோலி மாவட்டத்தில் விவசாய நிலங்களுக்கு அதிகமான நிலவரி விதிக்கப்பட்டபோது அதற்கு எதிரான போராட்டத்தை வல்லபபாய் படேல் தலைமையில் காந்தியடிகள் நடத்தினார். காந்தியடிகள் தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்க விரும்பினார். அவர் கண்ட கிராம அரசுக் கனவு அவரது 150—ஆவது பிறந்த ஆண்டில் சிதைக்கப்படுகிறது. தங்களின் மண்ணில் இருந்தும், வேளாண்மை தொழில்களிலிருந்தும் மக்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள். ஏழை உழவர்கள் சிந்தும் கண்ணீர் கூரிய வாளையொக்கும் என்பதை உணரவேண்டியவர்கள் உணரவேண்டும்.

# நம்பிக்கை ...வை

நம்பிக்கையில்தான்
நகருகிறது வாழ்க்கை ...!
உன்நாடி ..நரம்புகளில்
இரத்தவோட்டத்தை மாற்று...
இளமையாய் நம்பிக்கையை ஊற்று...

வறண்ட பொழுதினில் வாழ்வின்
எல்லைவரை செல்லும் மனது ...
அப்பொழுதினில் நாளைய உலகினை
நம்பிக்கை வேர்களே
நன்றியுடன் உரைக்கும்

விடிவோம் என்றுதானே
வீழ்கிறான் சூரியன் ...
வளர்வோம் என்றுதானே
தேய்கிறான் சந்திரன் ...
வீழ்ச்சியும்...தேய்தலும்...தேகத்திற்த்தான்..?

மனதிற்கு ...!
தவறெனில் ‘தாய்’ புவியின்
தலைவிதியை மாற்றிவிடு ...
‘தரணி’ ஆள தளிர்களுக்கு
தன்னம்பிக்கை ஊற்றிவிடு ...
காயங்கள் ஆறிவிடும்...
கவலைகள் ஓடிவிடும்...
கனவுகள் கூடிவரும்...
காவிரியிலும் நீர்வரும்...

மாற்றங்கள் துளிர்விடும் ...
மறைவுகள் உயிர்பெறும்...
மனித மனம் என்று ஒளிபெறும் ...?

நாளைய உலகினை
வழிநடத்த வந்தவன் நீ ...!

நம்பிக்கை...வை
நம்பிக்கையில் தான்
நகருகிறது
வாழ்க்கை ...!

**குமரேசன் கிருஷ்ணன்**

# கணக்குப் போட்டான்

கணக்குப் போட்டான் விடை பிறர்க்குத்
தெரியாதிருக்க அவன் மறைத்தான்

ஒருத்தன் பார்த்தால் அவனுக்குக்
கண்ணிரண்டும் முஷ்டிகளாகும்

பலகைகள் எல்லாம் கீழ்வைத்தார்

இடைவேளைக்கும் உணவுக்கும்
பள்ளிக்கூட மணி அசைய
பலகை அடுக்கப் படுகிறது
ஒன்றின் மேல் ஒன்றாக
சரியும் தப்பும் சரியாக

அவனைப் பார்த்தான் அவன் சரியாய்ச்
செய்தான் என்றே கருதியதால்
இவனைப் பார்த்தான் இவன் சரியாய்ச்
செய்தான் என்றே கருதியதால்
ஆமாம் என்று நினைத்தேன்
உனதென்றாலும் எனதென்
றாலும் என்ன நம்விடைகள்
இன்னொன்றுக்கு பொருந்தணுமே.

**ஞானக்கூத்தன்**

# அம்பலம்

'பித்தன்' 'பித்தன்' என்ற
கூச்சல்களையும்
கற்களையும்
அவன் மீது
எறிந்துகொண்டிருந்தார்கள்.
அவன் சிரித்துக்கொண்டிருந்தான்.
அவன் காயங்களும்
சிரித்துக்கொண்டிருந்தன.
அப்படித்தான் அவனை
முதன் முதலாகப் பார்த்தேன்.
நீ பித்தனா? என்று கேட்டேன்.
நீ கல்லா? என்றான்.
நான் காயப்பட்டேன்.
நீ எப்படிப்
பித்தன் ஆனாய்? என்றேன்.
ஒருமுறை தற்செயலாய்
உண்மையைப்
பின் பக்கமாய்ப்
பார்த்துவிட்டேன்.
அப்போது
சகல இரவுகளுக்குமான
சூரியோதயம் நடந்தது.
திரைகள் விலகின.
எதிர்ப்பதங்கள்
கைகோத்து
நடனமாடக்கண்டேன்.
முரண்கள்
முகமூடியைக் கழற்றிவிட்டு
முத்தமிடக் கண்டேன்.
காலமும் இடமும் மறைய
எல்லாம்
ஒன்றாவதைக் கண்டேன்.
உண்டும் இல்லையும்
அர்த்தம் இழந்தன.
அந்தத் தருணத்தில்
அறிவுச் சிறையிலிருந்து
நான் விடுதலை ஆனேன்.
என்றான்.

அவர்கள் ஏன் உன்மீது
கல்லெறிகிறார்கள்? என்றேன்.
நான் அவர்களுடைய
அந்தரங்கத்தின் கண்ணாடி.
அதனால்தான் என்னை
உடைக்கப் பார்க்கிறார்கள் என்றான்.
ஏன்?என்றேன்.
அவர்கள்
வெளிப்படுவதற்கு
பயப்படுகிறார்கள்.
அவர்கள்
வேடங்களில்
வசிக்கிறார்கள்.
அது அவர்களுக்கு
வசதியாக இருக்கிறது.
வேடம் கலைந்தால்
மேடை போய்விடும்.
நான் அவர்களுடைய
அம்பலம்.
கவனி!
அம்பலம்
என் மேடையல்ல.
நடனம்.
அதனால்தான் என்னைப்
பித்தன் என்கிறார்கள் என்றான்.
நான் உடைந்தேன்.
காலம் காலமாய்த்
திரண்டிருந்த சீழ்
வடிந்தது.

**கவிக்கோ அப்துல் ரகுமான்**

# என்னை நோக்கி பாயும் தோட்டா!

என்னை நோக்கி பாயும் தோட்டா படத்தின் டைடில் கார்டை இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். கௌதம் மேனன் இயக்கத்தில் விக்ரமின் துருவ நட்சத்திரம், தனுஷின் என்னை நோக்கி பாயும் தோட்டா ஆகிய இரண்டு படங்கள் உருவாகி வருகிறது. இதில் என்னை நோக்கி பாயும் தோட்டா படத்தில் தனுசுக்கு ஜோடியாக மேகா ஆகாஷ் நடித்துள்ளார். இந்த படத்தின் மறுவார்த்தை பேசாதே பாடல் ஏற்கனவே வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. யூடியூபில் மட்டும் 1 மில்லியன் மக்கள் இந்த பாடலை பார்த்துள்ளனர். மேலும் இந்த படத்தின் விசிரி என்ற பாடலின் வீடியோவும் வைரலானது. இந்த படத்தில் இயக்குநர் சசிகுமார் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.



## நம்மை நோக்கி தோட்டா பாயாமல் இருந்தால் சரி!



# நடன தேவதை சாயிஷா!

ஜுங்கா, கடைக்குட்டி சிங்கம் படத்தைத் தொடர்ந்து கஜினிகாந்த் படத்தில் நடிக்கும் சாயிஷா சைகல், தமிழுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதாகவும், ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொண்ட கதைகளில் நடிக்கத் தயாராவதாகவும் கூறியிருக்கும் அவர், 'என் சின்ன வயதிலிருந்தே தீவிர நடனப் பயிற்சி பெற்றதாலோ என்னவோ, முழுமையான நடனம் சம்பந்தப்பட்ட கதையில் நடிக்க ஆசை. சுதா சந்திரன் நடித்த மயூரி படத்தைப் போல், நடனத்துக்கு அதிக முக்கியத்துவம் இருக்க வேண்டும்' என்கிறார். மும்பையில் சொந்த நடனப் பள்ளி தொடங்க திட்டமிட்டு இருக்கிறார்.

## பள்ளி திறப்பு விழா காணட்டும்! கலக்கட்டும்!



## உயரம் எட்டட்டும்!

## மடோனாவின் மகத்துவம்?!

‘காயத்ரிக்குப் பிறகு ஆகச்சிறந்த நடிகை என்றால் என்னைப் பொருத்தவரை மடோனா செபாஸ்டியன்தான்!’ எனப் புகழ்ந்துள்ளார் விஜய் சேதுபதி. இவர் நடித்து, தயாரித்திருக்கும் படம் ‘ஜுங்கா’. கோகுல் இயக்கியுள்ள இந்தப் படத்தில், சயீஷா மற்றும் மடோனா செபாஸ்டியன் என இரண்டு ஹீரோயின்கள் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசியபோதே விஜய் சேதுபதி மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். மேலும், ‘நேர்த்தியான நடிப்பை வெளிப்படுத்துவதில் பெரிய திறமைசாலியான மடோனா, தன் திறமைக்கு மிகப் பெரிய உயரம் எட்டுவார்’ என்றும் தெரிவித்துள்ளார்.



## விஸ்வரூபம் எடுக்கிறார் கமல்!

## கலக்கும் கமல்!

கமல்ஹாசன் இயக்கி, நடித்த விஸ்வரூபம் 2 படத்தின் இரண்டாவது ட்ரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது. கடந்த பாகத்தின் முடிவை முன்னுரையாகக் கொண்டு, இந்த ட்ரெய்லர் தொடங்குகிறது. இந்த ட்ரெய்லர் முழுவதும் கமல் மற்றும் ஆண்ட்ரியாவின் ஆக்ஷன் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. விஸ்வரூபம் 2 படம், வரும் ஆகஸ்ட் மாதம் 10 —ம் தேதி வெளியாகும் என முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அரசியலில் அவ்வப்போது அதிரடி கிளப்பி வரும் கமல், ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சியில், ‘எதிரியைத் தீர்மானிக்கும் நேரம் வந்துவிட்டது’ என்று அதிரடியாகப் பேசியுள்ளார்.



# மங்காத தமிழென்று

## "செயங்கொண்டான்: களங்கண்ட கவிஞன்

களம் பாடியவன்; வீரவளம் பாடியவன்; சோழர் குலம் பாடியவன்; காளி தலம் பாடியவன்; பெண்ணின் நலம் பாடியவன்; பகைவர் புலம் பாடியவன்; குருதிக் குளம் பாடியவன்; பாலை நிலம் பாடியவன்; சொல்லில் சிலம்பாடியவன் என்ற அத்துணை மிகுமொழிகளுக்கும் தகுமொழியாளரே கலிங்கத்துப்பரணி பாடிய செயங்கொண்டார்.

வரையறுக்கப்பட்ட 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் பரணியும் ஒன்று. ஆனால், தமக்கு நிகராய் ஒரு புலவரை ஒக்கவைக்கக் கருதாத சொக்கநாதப் புலவர் போன்றவர்களால் 'பரணிக்கோர் செயங்கொண்டார்' என்று பாடப்பட்ட தக்க புகழ்மிக்க கவி செயங்கொண்டார் ஒருவரே.

இறைவனைத் தொடர்ந்து அரசனையும் பாடு பொருளாக்கும் பகிர்வுரிமையை வழங்கியது சிற்றிலக்கியம் செய்த சிறு புரட்சி. குறவஞ்சி — பள்ளு போன்ற வடிவங்களில் விளிம்புநிலை மக்களையும் பாடி முடித்தது சிற்றிலக்கியம் செய்த பெரும் புரட்சி. கோவை — உலா — பிள்ளைத்தமிழ் — அந்தாதி — கலம்பகம் — தூது — குறவஞ்சி — பள்ளு — மடல் — மாலை என விரியும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் பரணியும் ஒன்று.

தக்கயாகப் பரணி — மோகவதைப் பரணி — பாசவதைப் பரணி — கஞ்சவதைப் பரணி — இரணியவதைப் பரணி — சூரன்வதைப் பரணி எனப் பரணிகள் பலபட விரியினும் பரணிகளுக்கெல்லாம் தலைமை பூணத்தக்கது கலிங்கத்துப்பரணிதான் என்பது செவ்விலக்கியச் சம்மதம் பெற்ற செழுஞ்செருக்காகும்.

பரணி என்பது நாள் விண்மீன்களுள் ஒன்று. அது கொற்றவைக்குரியது என்று குறிக்கப்பெறுவது. கொற்றவை போர்க்கடவுள். ஆதலின் போரில் பெற்ற வெற்றியை அவளுக்கே படையலிட்டுக் கொண்டாடுவது பெருவழக்கு. "காடுகெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவ தொரு வழக்கு" என்பார் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய பேராசிரியர். அதனால் அந்தக் கொண்டாட்டத்தைப் பாடும் இலக்கியமும் பரணியென்றே பெயர் பூண்டது.

வேறெந்த இலக்கியத்திலும் காணவியலாத தனிச்சிறப்பொன்று பரணியின் தலைப்புக்குண்டு. வென்றவன் பெயரில் விளங்காமல் தோற்றவன் பெயரில் துலங்குவதுதான் பரணியின் தனிச்சிறப்பு. அதனால்தான் வென்றெடுக்கப்பட்ட நாட்டையே கலிங்கத்துப்பரணி தன் தலையில் தூக்கி வைத்துத் தலைப்பாக்கியிருக்கிறது. இது தோற்றவரையும் பெருமைப்படுத்தும் தமிழின் தூய பண்பாடாகும்.

ஈசல் பிடிப்பதெல்லாம் வேட்டையில் சேராது என்பதுபோல, களத்திற்காணும் எல்லா வெற்றிகளுமே பரணிக்குப் பாடுபொருள் ஆகா. எவனொருவன் பகைவரின் ஆயிரம் யானைகளை வெட்டிச் சாய்த்து வெற்றி கொள்கிறானோ அவன் மீது மட்டுமே பரணி பாடப்படும். "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற / மான வனுக்கு வகுப்பது பரணி" என்பது இலக்கண விளக்கப் பாட்டியல்.

ஆயின், கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்? முதலாம் குலோத்துங்க சோழனே கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் என்பது வரலாற்று வழக்கு. ஆணையிட்டவன் குலோத்துங்கனாயினும் களத்திலே ஆயிரம் யானை வென்றவன் படைகொண்டு சென்ற கருணாகரத் தொண்டைமான். ஆதலின் நாட்டுடைத் தலைவன் குலோத்துங்கனாகிறான்; பாட்டுடைத் தலைவன் கருணாகரனாகிறான்.


வண்டையர்கோ என்று வழங்கப்படும் கருணாகரத் தொண்டைமானைப் பல்லவர் தோன்றல் என்று பாடுகிறது தாழிசை. பிற்காலச் சோழர்கள் பேரரசுகட்டி எழுந்தபொழுது, பல்லவர் பரம்பரை தேய்ந்தழிந்து போனாலும் ஒய்ந்தொழிந்து போகவில்லை. தங்கத்தின் மூலக்கூறு பிரித்தால் அது இறுதிவரை தங்கமாகவே திகழ்வதுபோல,

சங்கே

# முழங்கு!

## வைரமுத்து

குறுநில மன்னனாய்க் குறுகிப்போனாலும் பல்லவர் பரம்பரையின் மன்னர்குலத்து மரபணுக்கள் கருணாகரத் தொண்டைமானின் உதிரத்தில் அதிர்ந்துகொண்டேயிருந்தன. குலோத்துங்கனின் தலைமை அமைச்சராகவும், படைத்தலைவனாகவும் இரு தோள்களிலும் இருபெரும் பாரம் சுமந்தவன் கருணாகரத் தொண்டைமான்.



“வண்டை வளம்பதி பாடீரோ / பல்லவர் தோன்றலைப் பாடீரோ” என்ற கவிச்சான்று கொண்டு, அவன் ஊர் காஞ்சி மாவட்டத்தில் சென்னை — செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வண்டலூர் என்றே வரலாறு நம்பி வந்தது. ஆனால், ஆராய்ச்சி அறிஞர் மு.ராகவையங்கார் சுட்டிக்காட்டிய ஒரு சரித்திரச் சாசனம் உண்மையான ஊரை மீட்டெடுத்தது. கருணாகரத் தொண்டைமானின் மனையாள், கோவில் ஒன்றுக்குத் திருநுந்தாவிளக்கிட்ட சேதி சாசனம் ஒன்றில் காணக் கிட்டியது.

“சோழ மண்டலத்துக் குலோத்துங்க சோழவள நாட்டுத் திருநறையூர் நாடு வண்டாழஞ் சேரியுடை யான் வேளான் கருணாகரரான தொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளினி மண்டையாழ்வார் வைத்த திருநுந்தா விளக்கு” (ஷி.மி.ஷி ழிளி: 862) என்பது சாசன வாசகம். இதிலிருந்து வண்டாழஞ்சேரியே கருணாகரன் சொந்த ஊர் என்று விளங்குகிறது.

ஆயின், வண்டாழஞ்சேரி சோழநாட்டில் எங்குளது என்று நிலவியல் நேர்க்கோட்டில் ஆராய்ந்தால் — இன்று கும்பகோணத்தின் நாச்சியார்கோவிலுக்கு அருகே வண்டுவாஞ்சேரி என்று மருவி வழங்கப்படும் சிற்றூரே என்று தெரிகிறது. வரலாற்று நாயகன் பிறந்த மண்ணொன்று

வண்டுவாஞ்சேரி மக்கள் இந்த ஊரைக் கொண்டாடிக் கொள்ளலாம். இந்த வண்டாழஞ் சேரிக் கருணாகரன்தான் கலிங்கத்துப்பரணிக்குக் கருப் பொருள் தந்தவன். கலிங்கத்துப்பரணி தமிழர் வீரத்தைத் தடவிப் பார்க்கக் கிடைத்த தழும்பு.

கடவுள் வாழ்த்து — கடை திறப்பு — காடு பாடியது — கோயில் பாடியது — தேவியைப் பாடியது — பேய்களைப் பாடியது — பேய்முறைப்பாடு — அவதாரம் — இந்திரசாலம் — இராசபாரம்பரியம் — காளிக்குக் கூளி கூறியது — போர் பாடியது — களம் பாடியது போன்ற உறுப்புகளையும், 54 சந்த வேறுபாடுகளையும், 599 தாழிசைகளையும் கட்டி எழுப்பியது கலிங்கத்துப்பரணி.

யுத்தச் சத்தம் கேட்பதற்கு முன்னால் முத்தச் சத்தம் கேட்கச் செய்கிறது கலிங்கத்துப்பரணியின் கடைதிறப்பு என்னும் கலை உறுப்பு. ஒரு புறத்திணை இலக்கியம் அகத்திணையோடு தொடங்குவதே ஓர் அழகு. களங்காணச் சென்ற கணவன்மார்கள் காலங்கடந்தும் மீளாமை கண்டு காதல் நோயால் மனைவிமார்கள் தவிக்கும் தவிப்பே கடைதிறப்பின் பாடுபொருள். இதுவரை காணாத கலவி இன்பத்தைக் கனவு காணும் ஒரு பெண்ணுக்கும், கண்ட கலவி இன்பத்தை மீண்டும் காணத் துடிக்கும் ஒரு பெண்ணுக்குமான உளவியல் அசைவுகள் வெவ்வேறு. இதில் இரண்டாம் வகைப் பெண்களின் தட்பவெப்பமான மனநிலையைச் செப்ப நுட்பமாகச் சித்திரித்துச் சிலம்பாடுகிறார் செயங்கொண்டார்.

அதோ வந்துவிட்டார் கணவர் என்று ஓடிச்சென்று திறக்கிறார்கள் கதவை. அய்யோ வரவில்லை என்று ஓங்கிச் சாத்துகிறார்கள் அதே கதவை. ஒரு முறையா இரு முறையா விடிய விடிய இதுதான் நிகழ்கிறது. இரவு தேய்ந்து கழிந்ததோ இல்லையோ கதவு தேய்ந்து கழிந்தது. “வருவார் கொழுநர் எனத் திறந்தும் / வாரார் கொழுநர் என அடைத்தும் திருகும் குடுமி விடியளவும் தேயும் கபாடம் திறமினோ” — என்பது கடைதிறப்பில் ஒரு மடைதிறப்பு.

இதயத்தின் தேய்மானத்தை அளக்கவியலாது. காரணம் அதைக் கண்கொண்டு காணவியலாது. ஆயின் அதை அளப்பதெங்ஙனம்? கண்ணுக்குத் தெரிந்த இரும்பின் தேய்மானத்தைக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத இதயத்தின் தேய்மானத்தைக் கணக்கிட்ட கணக்காளன் கவி செயங்கொண்டான்.

கலவியெனும் உயிரின் உன்னதப் பொழுதில் நயத்தக்க நாடகம் ஒன்றை நடத்திக் காட்டவும் தெரிகிறது போர்பாட வந்த புலவனுக்கு. கலவி என்பது, நான் என்ற பொருள் அழிந்து, நாம் என்ற நிலை கடந்து, இரண்டென்ற பொருள் மறந்து, ஒன்றென்று உயிர் உணர்ந்து இறுதியில் இருந்தும் இல்லாத நிலை எய்தும் இயற்கைத் திருச்செயல்; பேரண்டத்தில் தான் என்பது போக, தனக்குள் பேரண்டம் என்று ஒருகணம் உணர்த்திப்போகும் மனோமாயம். மனித வாழ்வில் உணர்வு நிலை கழியாமல் அறிவழியும் கணங்களே உயிரின் உச்சம். அப்படிப்பட்ட உயிரின் உச்சப் பொழுதில் கருத்தழிகிறார்கள் சில காதல் மனையாட்டிகள்.

பாம்பு உரித்த சட்டையைப்போல் உடலுக்கு வெளியே ஓடி விழுந்து கிடக்கிறது அவர்கள் உடுத்த உடை. ஆழ்மனது சொல்கிறது உடையற்ற உடலை மூடு என்று. உடனே கைக்கெட்டும் ஓர் ஆடையை எடுக்கிறது அழிந்து கிடக்கும் அறிவு. அவர்கள் எடுத்து உடுத்த எத்தனித்த ஆடை எது தெரியுமா? அது நெசவுத் தறியில் நெய்ததன்று; நிலாத்தறியில் நெய்தது. ஆடையென்று கருதி நிலாவின் கிரணத்தை இழுத்தணிய நினைத்தார்களாம் அந்த நிர்வாண அல்லிகள். “கலவிக் களியின் மயக்கத்தே / கலைபோய் அகலக் கலைமதியின் / நிலவைத் துகில் என்று எடுத்துடுப்பீர் / நீள்பொற் கபாடம் திறமினோ?” என்று பனை ஓலையில் உழுது போகிறது செயங்கொண்டானின் சிருங்கார எழுத்தாணி.

களம் பாடுவதற்கு முன்பு காடு பாடுகிறது கலிங்கத்துப்பரணி. கொற்றவை குடியிருக்கும் காட்டின் சுட்டெரிக்கும் வெம்மையைச் சுட்டுவதன் மூலம் களத்துக்கான தளத்தைக் கட்டமைக்கிறார் கவி. இது — ஒரு கொல்லன் ஆயுதஞ் செய்வதற்கு முன் இரும்பைப் பழுக்கக் காய்ச்சும் ஒழுக்கம் போன்றது.

காளி வதியும் காடு கடுங்காடு. சூரியக் கதிர்களால் பூமி என்ற தட்டை ஓட்டில் வறுபடுங்காடு. அங்கே உலர்ந்து கிடக்கும் ஓமை மரங்கள், புகைந்துகொண்டிருக்கும் வீரை மரங்கள்; பொரிந்துகிடக்கும் காரைச்செடிகள்; கரிந்து கிடக்கும் சூரைச்செடிகள்; பிதிர்ந்த முள்ளி; சிதைந்த வள்ளி; உணங்கிய நெல்லி; உதிர்ந்த வெள்ளில் ஆகிய தாவரக் குடும்பம் சரிந்து கிடக்கும். வாகை மரங்களும் கூகை மரங்களும் வற்றிக் கிடக்கும்; வேலமரங்கள் மடிந்துகிடக்கும்; புங்க மரங்கள் உதிர்ந்து கிடக்கும்.

பறந்துபோகும் பருந்தின் நிழல் நிலத்தில் விழுகிறது. பறவை பறக்கும்போது நிழலும் பறக்கிறது. கவி சொல்கிறார் : “அந்த நிலத்தின் வெம்மை தாளாமல் அந்த அனல்காட்டை விட்டு நிழல்கூட அஞ்சி ஓடுவதுபோல் இருக்கிறது”.

நெருப்பைத் தகடு செய்த காடு. அதிலிருந்து கனலும் அனல் நெருப்பாய்த் தெரிகிறது. அங்கிருந்து பறக்கும் புறாக் கூட்டம் தீயில் கிளம்பும் புகையாய்த் தெரிகிறது. “செந் நெருப்பினைத் தகடுசெய்து பார் /

செய்த தொக்கும்அச் செந்தரைப் பரப்பு / அந் நிலத்தினில் புகை திரண்டது / ஒப்பிலது ஒப்புறா அதன் இடைப்புறா."

ஒரு காட்டுக்கே பெய்ய வேண்டிய மழையை ஒரு கழனியில் கொட்டித் தீர்த்துவிடும் மேகம்போல் ஒரு பேரிலக்கியம் படைக்கும் பேராற்றலைச் சிற்றிலக்கியத்துக்குச் செலவிட்டிருக்கிறார் செயங்கொண்டார்.



கொற்றவைக் காட்டில் கூத்தன்தேவியைச் சுற்றிக் கூத்தாடும் பேய்களைக் கோரச் சித்திரம் தீட்டிப் பயங்காட்டுகிறான் செயங்கொண்டான். பேயும் பேய் சார்ந்த குறிப்புகளையும் எல்லா உலக இலக்கியங்களும் ஏந்தியே வந்திருக்கின்றன. பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் உலகத்தைப் பாடிக்காட்டுமொரு படைப்புக் கலை, எல்லா மொழிக் கவிகளுக்கும் இருந்தே வந்திருக்கிறது. மகாகவி ஷேக்ஸ்பியரும்கூட 'மாக்பெத்'தின் பயணத்தில் சில மாயக்காரிகளை வருணிக்கிறார்.

"இவை என்ன! இவற்றின் ஆடைகள் சருகுபோல் உலர்ந்து அச்சமூட்டுகின்றனவே; மண்ணுயிர்களைப்போல் இல்லையே! உலர்ந்த உதடுகள்; சூம்பிய விரல்கள். நீங்கள் பெண்களாகத்தான் இருக்கவியலும். ஆனால், தாடியோடு திரியும் உங்களை எப்படிப் பெண் என்பது?" — இவ்வளவுதான் பேய்கள் போன்ற மாயக்காரிகள் குறித்து ஷேக்ஸ்பியரின் சித்திரம். ஆனால், பேய்களை வர்ணிக்கிறானே செயங்கொண்டான் என்ற செந்தமிழ்க் கவி! அவன் பேய்பிடித்தவனைப் போல் பெருந்தாழிசை பாடுகிறான்.

"அந்தப் பேய்கள் பனைமரங்களொத்த கையின, காலின; பிலம்போன்ற வாயின; என்பும் நரம்பும் துருத்தித் தோன்றும் உடலின; ஓந்திகள் கோத்த பாம்பினைத்தாலியாய் அணிவன;பாசிபட்டதுளை களையுடைய மூக்கின; ஆந்தையும் வவ்வாலும் உட்புகுந்து உலாவும் செவியின; மண்வெட்டியும் கலப்பையும் கோத்து வைத்தாற்போன்ற பல்லின; வானைத் தட்டித் தகர்க்கும் தலையின; மார்பின் மேலே துவண்டுதொங்கும் உதட்டின."

அவன் கூறுகிறான், "கொட்டும் மேழியும் கோத்த பல்லின / கோம்பி பாம்பிடைக் கோத்தணி தாலிய / தட்டி வானைத் தகர்க்கும் தலையின / தாழ்ந்து மார்பினைத் தட்டும் உதட்டின."

இந்தப் பேய்களின் கண்கள் வழியாகத்தான் களப்போரைக் கட்டமைக்கிறான் கவி.

உலகத்தின் மிகப் பெரிய பாடுபொருள் போர். மண்ணையும் பெண்ணையும் உணவையும் கவர்வதற்கோ காப்பதற்கோ மீட்பதற்கோ தலைப்பட்ட மனிதன் முதல் போரைத் தொடங்கிவைத்தான். ஆயுதங்களையும் ஆட்களையும் மாற்றி மாற்றி அதே போர் இன்றும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. உலக இலக்கியத்தின் மிகப் பெருங்காவியம் என்று கருதப்பெறும் ஹோமரின் 'இலியட்'டில் போர் குறித்த சித்திரமொன்று வீறுணர்ச்சியோடு வெளிப்படுகிறது.

"ஆஷ் மரங்களும் கார்னெல் மரங்களும் அடர்ந்த காட்டைப் பெருமூச்செறியச் செய்து, கிழக்குக் காற்றும் மேற்குக் காற்றும் மலைப் பள்ளத்தாக்கில் பேரோசையோடு சண்டையிட்டுக்கொள்வதைப் போல டிரோஜன்களும் கிரேக்கர்களும் முட்டி மோதினர்".

செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியோ வேலெறிந்து விண்ணை மறைக்கிறது; அம்பெறிந்து மண்ணை மறைக்கிறது. ஒரு போர்க்களத்தைப் படிம அடுக்குகளால் காட்சிப்படுத்துவது கவிஞர்களுக்குக் கைவந்த கலைதான். ஆனால், போரின் ஒலிகளைக்கொண்டு காட்சிகளைக் கட்டி எழுப்பும் தாழிசைச் சந்தம் செயங்கொண்டானைப் போல முன்னெவர்க்கும் வினைப்பட்டதில்லை என்று ஆயிரம் மன்றங்களில் ஆணையிடலாம். படைகளும் படைகளும் எதிர்கொண்டது கடல்களும் கடல்களும் எதிர்கொண்டது போன்றதாகும். பரியொடு பரிகள் எதிர்கொண்டது அலைகளும் அலைகளும் எதிர்கொண்டது போன்றதாகும். இதை ஒலிச்சித்திரமாய் உணர்த்திக் காட்டுகிறது தாழிசை ஓசை.

"எறிகடலொடு கடல் கிடைத்தபோல் / இருபடைகளும் எதிர் கிடைக்கவே / மறிதிரையொடு திரை மலைத்தபோல் / வருபரியொடு பரி மலைக்கவே" இந்த ஒலி ஊர்வலத்தைக் கடக்குமுன்னே காட்சிப் படிமம் கண்ணை மிரட்டுகிறது. குருதி நதியாகிறது; அதில் மிதக்கும் வெண்கொற்றக் குடைகள் நுரைகளாகின்றன. துண்டிக்கப்பட்ட யானையின்

கரமோ நதியிருபுறமும் கரையாகிறது.

ஒரே ஒரு தற்குறிப்பேற்றத்தில் உலகக் கவிகளையெல்லாம் ஓரங்கட்டுகிறான் செயங்கொண்டான். வெட்டி வீழ்த்தப்பட்ட யானையின் துதிக்கை சுருண்டு வீழ்கிறது. அதில் பாய்ந்திருந்த அம்புகளெல்லாம் வட்டத் துதிக்கையில் ஆரங்களாய்த் தோன்றுகின்றன. துதிக்கை வட்டமாகிவிட்டது; அம்புகள் ஆரங்களாகிவிட்டன. இப்போது உருமாறிப்போன யானையின் அக்கரங்கள் சக்கரங்களாகிவிட்டன என்று எக்களிக்கிறான் செயங்கொண்டான். "மத்த யானையின் கரம் / சுருண்டு வீழ வன்சரம் / தைத்த போழ்தில் அக்கரங்கள் / சக்கரங் கள் ஒக்குமே."

ஒலியோடும் பொருளோடும் தமிழோடு போட்டியிட முடியாது உலகில் யாரும்.

கலிங்கத்துப் பரணியின் அறங்கேற்றத்தின்போது செயங்கொண்டான் பாடப் பாட ஒவ்வொரு தாழிசைக்கும் ஒரு பொற்றேங் காய் உருட்டுவானாம் கொற்றவன் குலோத்துங்கன். 550 முதல் 600 கிராம் நிறைகொண்டது ஒரு தேங்காய் எனக் கொள்ளலாம். சற்றொப்ப 12 சொற்கள் கொண்டது ஒரு தாழிசை எனலாம். இது உண்மையாயின் ஒரு சொல்லுக்கு 50 கிராம் தங்கம் பெற்றவன் உலகிலேயே தமிழ்க் கவிஞன் ஒருவன் மட்டும்தான்.

போரில் புறங்கண்ட வடகலிங்க மன்னன் அனந்த வன்மன், மலையொன்றில் ஏறிக் குகை புகுந்தான். அந்த மலையினைச் சோழ வீரர் சூழ நின்றனர் வில்லாலும் வேலாலும் வேலி கோலி. கருணாகரத் தொண்டைமான் அவனைக் கைது செய்து அழைத்து வந்து குலோத்துங்கனைக் கும்பிட வைத்தான். இந்த வெற்றியைக் கொண்டாடித்தான் கொற்றவை காட்டுப் பேய்கள் ஒரு பரணி நாளில் கூழ் அட்டுக் குடித்துக் கொண்டாடிக் கூத்தடிக்கின்றன. "அகோ பேய்களே! கூழ் அடுவதற்கு முன்னால் குருதி ஆற்றிலே குளித்தெழுங்கள். யானையின் ஒடிந்த தந்தமெடுத்துப் பல் துலக்குங்கள். கொழுப்புகளை உலர்த்தி விரித்து உடை உடுத்துங்கள். யானை மதநீரில் தரை மெழுகுங்கள். முத்துப்பொடிகளில் கோலமிடுங்கள். யானை மத்தகத்தில் அடுப்புக் கூட்டுங்கள். யானைப் பானையில் உலையிடுங்கள். குந்தம் — பகழி — கோல் — வேல் கொண்டு அடுப்பெரியுங்கள். பகைவரின் பல்லரிசி எடுத்து முரசமென்ற உரலிலிட்டுத் தந்த உலக்கைகளால் குற்றி எடுங்கள்" என்று ஆணையிட்டுக் கூழ் சமைத்துப் பந்திகொண்ட பிறகு, தாம்பூலம் தரிக்க வேண்டும் என்ற பேராவல் எழுகிறது பேய்களுக்கு.

பேய்களின் பெருநோக்கில் தாம்பூலம் தயாரிக்கப்படுகிறது. குதிரைகளின் செவிச் சுருளே வெற்றிலையாய், குதிரைக் கால்களின் பிளந்த குளம்பே பெரும்பாக்காய், பகைவர்களின் கண்ணின் வெண்மணியே சுண்ணாம்பாய்த் தாம்பூலம் தரிக்கிறது பெரிதினும் பெரிது கேட்கும் பேய்க்கூட்டம். இப்போது எழுகிறது ஒரு வினா. இதுவா சிற்றிலக்கியம்?

தலைமகனாய்ப் பிறந்தவனைச் சின்னச்சாமி என்று பெயரிட்டு அழைப்பதொக்கும் கம்பனின் யுத்த காண்டத்துக்கே வழிகாட்டிய இந்தப் பேரிலக்கியத்தைச் சிற்றிலக்கியம் என்று செப்புவது.

போரிலக்கியம் என்பது பேரிலக்கியம் என்று பேசப்பட்டபோதிலும் தமிழ்ச் சமூகம் போர்நெறிச் சமூகமன்றிப் போர்வெறிச் சமூகமன்று. மூண்ட போர்களைக் கொண்டாடும் அதே வேளையில், போர்கள் மூண்டுவிடக் கூடாது என்ற செழுமிய விழுமியம் தமிழச் சாதியால் பெரிதும் பேணப்பட்டே வந்திருக்கிறது. "இருவீர் வேறல் இயற்கையு மன்று / ஒருவர் தோற்பினும் தோற்பது நுங் குடியே" என்று போருக்கு எதிரான குரலே புறப்பாட்டில் கேட்கிறது.

சோழப் பேரரசை வேலாலும் வாளாலும் விரிவு செய்துகொண்டிருந்த போர்ச் சமூகத்திலும் "யாரொடும் பகை கொள்ளலன் என்றபின் / போரொடுங்கும் தன் புகழ் ஒடுங்காது" என்ற கம்பன் குரலும் அதையே வழிமொழிகிறது.

இரண்டாம் உலகப்போரில் சேமித்துவைத்த பிணங்களின் கொழுப்பிலிருந்து வழலை (சோப்) செய்தும், தட்டி எடுத்த பிணங்களின் தங்கப்பற்களில் ஆபரணம் செதுக்கியும், எலும்புகளிலிருந்து உரம் தயாரித்தும் ஆதிக்கசக்திகள் அநாகரிகம் நிகழ்த்திய காலையில் — "புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட / போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்ற தமிழ்க் கவியின் உலகக் குரல் நமது பண்பாட்டின் சாரமென்றும் ஈரமென்றும் அறியப்படுகிறது.

கலிங்கத்துப்பரணியும் போர் முடித்த பிறகு ஒரு பொன்னுலகையே கனவு காணுகிறது. பேய்களின் பெருவாழ்த்தோடுதான் பரணி நிறைகிறது. உலகமாந்தர் களிக்கட்டும்; இயற்கையின் இன்னருள் தழைக்கட்டும்; பூதலத்தார் புகழ் பரவட்டும்; வையகம் நிலைக்கட்டும்; வான்மழை சுரக்கட்டும் என்று அமைதியின் ஆட்சியைத்தான் இறைஞ்சு கிறது. "யாவரும் களி சிறக்கவே / தேவர் இன்னருள் தழைக்கவே / பூதலம் புகழ் பரக்கவே / புவி நிலைக்கவே புயல் சுரக்கவே" என்று பேய்கள் வாழ்த்துகின்றன.

பேய்களின் வாழ்த்தோடு நம் வாழ்த்தையும் இணைத்துக்கொள்வோம். தரணி உள்ளவரை பரணி வாழும்.

# புத்தக விமர்சனம்

## எம்.ஜி.ஆர் பயணம்

**ஆசிரியர் : எஸ்.விஜயன்**




**விலை : ரூ. 180**

**வெளியீடு:**
**இதயக்கனி வெளியீடு**
**12/32, வீரபாண்டி நகர்**
**2வது தெரு,**
**சூளைமேடு, சென்னை –94**

*‘எம்.ஜி.ஆர் என்ற அற்புதமான மனிதரைப் பற்றித் தொடர்ந்து படித்தும், எழுதியும் வரும் இதயக்கனி இதழின் ஆசிரியர் எஸ்.விஜயன் எழுதியிருக்கும் நூல் இது. எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாற்றுக் கதையின் தொடர்ச்சியாக இந்நூல் வெளிவந்திருக்கிறது.*

*எம்.ஜி.ஆரின் வாழ்க்கைப் பக்கங்களை, அவரது நல்ல பண்புகளை எல்லோரும் பின்பற்றிப் பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் படைக்கப்பட்டிருக்கும் இந்நூலில் இதுவரை வாசிக்கக் கிடைக்காத அபூர்வத் தகவல்கள் பல இடம்பெற்றிருக்கின்றன.*

*அத்துடன், எம்.ஜி.ஆரின் அடையாளங்களான தொப்பி, கண்ணாடி போன்றவை அவருக்கு வந்த செய்திகளுடன், அவற்றை அவருக்குச் செய்து தந்தவர்களின் பேட்டிகள் இதுவரை எங்குமே வராத செய்திகள் என்பது சிறப்பு! எம்.ஜி.ஆரின் குணநலன்கள் குறித்த அபூர்வத் தகவல்கள் அடங்கிய இந்தநூல் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் தவறவே விடக்கூடாத மிகவும் அரிய நூல்!*



சிறுகதை

# அன்புள்ள அம்மா அப்பாவுக்கு...

மாலை நேரப் பரபரப்பில் இருந்தது சென்னை மாநகரம்.

நாளுக்கு நாள் பெருகி வருகிற வாகன நெரிசலால் உருவாகும் புகையாலும் இரைச்சல்களாலும் கோடைக் காலம் வருவதற்கு முன்பேயே மாநகரம் சூடாகி வெக்கை அதிகமாகி இருந்தது.

நெருங்கிய தோழிகளான வர்ஷாவும் நிஷாவும் சீருடையில் பள்ளி முடிந்து மாலையில் பள்ளி வளாகத்தில் கைகோர்த்தபடி நடந்து வந்தனர். இருவரும் சென்னையில் உள்ள அந்தத் தனியார் பள்ளியில் படிக்கும் எட்டாம் வகுப்பு மாணவிகள்.

அவர்களை அழைத்துச் செல்ல தினமும் மாலையில் பள்ளிக்கு வெளியே விலையுயர்ந்த கார்களுடன் டிரைவர்கள் காத்திருப்பார்கள். இருவரும் மிகவும் வசதி படைத்த பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வர்ஷாவின் குடும்பம் சென்னையிலிருந்தாலும் அவளுடைய தந்தை மட்டும் அடிக்கடி தில்லியில் உள்ள அவரின் வர்த்தக நிறுவனத்தின் கிளைக்கு சென்று வருவார்.

மாலையில் பள்ளி முடிந்து வீடு திரும்பும் உற்சாகம் அனைவரின் முகத்திலும் தெரிய வர்ஷாவின் முகம் மட்டும் மிகவும் வாடிப்போயிருப்பதைக் கவனித்தாள் அவளின் தோழி நிஷா. வாடிய மலரைப் போலிருந்தது அவள்முகம்.

கடந்த சில நாட்களாக வர்ஷாவிடம் நிறைய மாற்றங்கள். எப்போதும் எதையோ பறி கொடுத்த மாதிரியிருந்தாள். என்ன வென்றுகேட்டால்

## நிலா ரவி

“ஒண்ணுமில்லை லேசா தலைவலிக்கிறதுஞ்”

என்று பொய் சொல்லி வந்தவள் இன்று மனமுடைந்து அழுதுவிட்டாள்.

“எதுவாயிருந்தாலும் என்கிட்டே சொல்லுடிஞ் மனசுக்குள்ளேயே வச்சிகிட்டு இருந்தா இன்னும் கஷ்டம் தான் அதிகமாகும்ஞ்” என நிஷா கேட்க வர்ஷா மனம் திறந்து பேசினாள்.

“நிஷாஞ் நான் என் அம்மாவையும் அப்பாவையும் ரொம்பவும் நேசிக்கிறேன். ஆனால் என் வாழ்க்கையில் மட்டும் ஏன் இப்படி நடக்குதுன்னு தெரியலை. எது நடக்கக்கூடாதுன்னு நான் இவ்வளவு நாள் பயந்துகிட்டு இருந்தேனோ அது கடைசியா நடந்துடிச்சி. அவங்க ரெண்டு பேருக்கும் டைவர்ஸ் கிடைச்சிடுச்சி. இந்த வார சண்டே அன்னிக்கு என் அப்பா தில்லியிலிருந்து சென்னை வருகிறார். அடுத்த வாரம் நாங்கள் மூனுபேரும் நிரந்தரமா பிரியப் போறோம்ஞ் என்னாலதான் அதைத் தாங்கிக்கொள்ள முடியலை.

என் வாழ்க்கைக்கு இனி எந்த அர்த்தமுமில்லாத மாதிரி தோனுது எனக்கு. என்ன செய்யறதுன்னு ஒண்ணும் புரியலைஞ்” என்று தன் மனதில் இருந்தவைளை தன் தோழியிடம் கொட்டினாள் வர்ஷா.

நிஷாவிற்கோ என்ன சொல்லி அவளைத் தேற்றுவது என்று தெரியவில்லை. எப்படியாவது தன் தோழிக்கு உதவ வேண்டும் என்று நினைத்தாள். ஆனாலும் இந்த விஷயத்தில் தன்னால் என்ன செய்துவிட முடியும், வர்ஷாவிற்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்வதைத்தவிர என்று நினைத்துக் கொண்டாள்.

அந்த ஆண்டின் இறுதித் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. அன்று இரவு வீட்டில் தன் அறையில் கடந்த மூன்று நாட்களாக மனதில் சுமக்க முடியாத பாரங்களுடன் உறங்காது தவித்த வர்ஷா , களைப்பில் இரவு எட்டு மணிக்கு முன்பே உறங்கிப்போனாள்.

நிஷாவோ வீட்டில் தன் அறையில் அமர்ந்து படிப்பதற்காக தன் பேக்கிலிருந்து ஆங்கில புத்தகத்தை எடுத்தாள். ஆனால் பள்ளியில் தன் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருக்கும் தோழி வர்ஷாவின் புத்தகத்தை அவசரத்தில் மாற்றி எடுத்து வந்திருப்பது தெரிந்தது.



அப்போது அந்தப் புத்கத்தின் நடுவே நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்த அந்தக் காகிதம் அவள் கண்ணில்பட்டது. அது ஒரு கடிதம் போலிருந்தது. ஒருவேளே அது விவாகரத்து குறித்த ஆணையோஞ்அல்லது வர்ஷா எதையாவது கடிதமாக எழுதி இருப்பாளாஞ் சந்தேகமாக இருந்தது நிஷாவிற்கு. அதை பிரித்துப் படிக்கலாமாவேண்டாமா என்று தயங்கினாள் நிஷா. தன் தோழியின் தற்போதைய மன நிலையில் அவள் தவறான முடிவெடுத்து விபரீதமாக எதுவும் நடந்துவிடக்கூடுமோ என்ற அச்சத்தில் ரகசியமாக அந்தக் கடிதத்தை பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

அன்புள்ள அம்மா அப்பாவுக்கு,

உங்கள் மகளாக அல்லது முன்னாள் மகளாக எழுதியது.

இந்த வரிகள் உங்களுக்கு அபத்தமாகப் படலாம். இவைகள் அபத்தமெனில் இந்த அபத்தங்களை உருவாக்கியவர்கள்நீங்கள் இருவருமே.

என் வாழ்வில் எது நடக்கக்கூடாதென்று பயந்து கொண்டேயிருந்தேனோ அது இப்போதுநடந்தே விட்டது. எவ்வளவு எளிதாக எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு நீங்கள் இருவரும் நிரந்தரமாகப் பி ரி ந் து விட்டீர்கள்.

வாழ்ந்த வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்ட ச ந் தே ா ஷ ங் க ளை , து க் க ங் க ளை , உணர்வுகளை,உறவுகளை, குடும்பம், வீடு எனஅனைத்தையும் பொய்யாக்கிக் கலைத்துவிட்டீர்கள்.இவைகள் அர்த்தமற்றவையாக ஆகிவிட்டபின் எனது இந்த வாழ்க்கையும் அர்த்தமற்றதாகிவிட்டது போல் உணர்கிறேன்.

எப்படி இப்படி நடந்துகொள்ள முடிகிறது உங்களால். ஆனால் எனது நிலமையைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். என்னால் உங்களைப் போல் அப்படி வாழ முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை.

திடீரென்று ஒரு நாளில் முன்னாள் கணவனாகவும் முன்னாள் மனைவியாகவும் அறிவித்துக்கொண்டு பிரிந்து விட்டீர்கள்.ஆனால் என் நிலமை தான் என்னஞ்

எனக்கு ஒன்றும் புரியவில்லை.இனி நான் என்ன உங்கள் முன்னாள் மகளாஞ்.

இதை நிலையை நான் ஒரு நாளும் வேண்டியதில்லையே. பிறகு ஏன் என் மீது இதைத் திணித்துவிட்டீர்கள்?

சிறுவயதில் நான் நடக்கப்பழகிய நாட்களில் உங்கள் இருவரின் கைவிரல்களை இரு புறமாக எனது கைகளால் பிடித்துக்கொண்டு நடந்த அந்தப் புகைப்படத்தை நான் பத்திரமாக வைத்திருக்கிறேன் .. ஆனால் அந்தக்குழந்தைக்கு இருபுறமும் துணையாக இருந்த உருவங்கள் இன்று மறைந்ததோடு அந்தக்குழந்தையின் பார்வை பறிபோக இருளில் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

ஒரே இரவில் வாழ்வில் யாருமேயில்லாத அநாதையாகிவிட்ட அந்தக் குழந்தையைப் பார்க்க முடியாமல் பார்வையை பறிகொடுத்தவர்கள் உண்மையில் நீங்களே.

உங்கள் தரப்பு நியாயங்களை நீங்கள் பேசலாம். ஆனாலும் என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள் என் மனதில் உள்ளவற்றைச் சொல்லி அழவிடுங்கள்.

உங்கள் உணர்வுகள், உரிமைகள், சுதந்திரம், சந்தோஷம் எதையுமே நான் புரிந்து கொள்ளாமல் மறுக்கவோ எதிர்க்கவோ இல்லை. அவைகள் உங்களுக்கானவை.

ஆனால் எனது உணர்வுகள்,கனவுகள், சந்தோஷங்கள் என எனக்குத்தான் எதுவும் இல்லை இன்று. எனக்கு என் குடும்பம்வேண்டும். அம்மாவும் அப்பாவும் இருக்கிற வீடு வேண்டும்ஞ் அவைகளை எனக்குத் திருப்பித் தருவீர்களா என்று கேட்கக்கூட முடியவில்லை என்னால் உங்களிடம். இனி எனது ஏக்கங்களை, கனவுகளை யாரிடம்சொல்வேன் நான். அவைகள் இனி ஒருநாளும் நிறைவேறாத பகற்கனவுகள்.

பிரிவது தான் உங்கள் இருவரின்முடிவெனில் நான் ஒருத்தி மட்டும் இந்தப் பூமியில் பிறக்காமலேயே இருந்திருக்கலாம். அல்லது நான் பிறக்கும் முன்பேயே நீங்கள் பிரிந்து போயிருக்கலாம்.

நான் ஒரு சமயம் விலையுயர்ந்த பொம்மை ஒன்றை கைத்தவறி உடைத்து விட்போது, 'இதைக்கூடப்பத்திரமாக வைத்துக் கொள்ளதெரியவில்லை' என என்னைத் திட்டிய நீங்கள்தான் இந்தவாழ்க்கையை என் சந்தோஷங்களை எப்படி உடைத்துவிட்டீர்கள்.



தவறுகள் யாருடையதோ தண்டனைகளை நிரபராதியான நான் மட்டுமே அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்.

எனக்கு நினைவு தெரியாத நாட்களில் நேசித்து வாழ்ந்த நீங்கள் எனக்கு மெல்ல மெல்ல உலகம் புரிய ஆரம்பித்தபோது உங்களுக்குள் புரிதலற்றுப் போய் இறுதியில் என் வாழ்க்கையைப் புரியாத புதிராகப் புயலாக ஆக்கிவிட்டீர்கள்.

என்னைப் பொறுத்தவரை நீங்கள் இருவரும் இணைந்து வாழவேமுடியாத மோசமான தம்பதிகளோ, தாய் தந்தையரோ இல்லை. ஆனால் ஒருவருக்காக மற்றொருவர் இறங்கிவந்து விட்டுக் கொடுக்க மனமில்லாத ஈகோயிஸ்ட்டுகள். இப்படிச் சொல்வதற்காக உங்கள் மகளான என்னை மன்னிக்கவும்.

உங்களுக்கான பொது அடையாளங்கள் அனைத்தையும் அழித்தும் இல்லாமலும் செய்வதில் ஜெயித்துவிட்டீர்கள் நீங்கள் இருவரும். ஆனாலும் உங்களின் மகளான என்னை மட்டும் என்ன செய்வதாய் இருக்கிறீர்கள்.

உங்களில் யாருடன் இருப்பது என்ற கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. உங்கள் இரு கண்களில்எது வேண்டும் என்று உங்களிடம்யாரும் கேட்கப்போவதில்லை.

அன்பான தாய் தந்தைக்குப் பிறந்த பிள்ளைகள்

அடுத்த பிறவியிலும் உங்கள் மகனாக அல்லதுமகளாகப் பிறக்க வேண்டும் என்பார்கள் . நானோ அடுத்த பிறவியிலாவது ஒருவரை ஒருவர் நேசிக்கும் தாய் தந்தைக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்
.

இறுதியாக சில விஷயங்கள்.

இவைகளை உங்கள் மனதைப் புண்படுத்தவோ உங்கள் மீது குறை கூறவோ எழுதவில்லை. உங்கள் இருவரின் நியாயங்களை,உணர்வுகளை, வாதங்களை, உரிமைகளை நான் மதிக்கிறேன்.

பிரிந்த பின்னும் எனக்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை, உதவிகளை, அக்கறையை நான் உணர்ந்து கொள்ள முயல்கிறேன்..பண விஷயத்திலோ என் தேவைகளிலோ எனக்கு எந்தக்குறையுமில்லாமல் கவனித்துக்கொள்கிறீர்கள்.

கூண்டில் ஒரு பறவையை அடைத்துவிட்டு அதற்கு வேளை தவறாமல் உணவு தரப்படுவது மாதிரி உணர்வது ஒருவேளை என் தவறாக இருக்கலாம். இவை அனைத்தையும் கடந்து இது ஒரு மகளின் ஏக்கங்கள், புலம்பல்கள் மட்டுமே. நாம் முன்பு மகிழ்ச்சி யோடு வாழ்ந்த அரண்மனை போன்ற இதே வீட்டில் கடந்த சில மாதங்களாக அன்னியர்களாகி ஒரே வீட்டில் தனித்தனி அறைகளில் சிறைப்பட்டு ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேச முடியாத சூழலில் வாழ்கிறோம். எனினும் இந்தக் கடிதத்தை நான் உங்களுக்கு அனுப்பப்போவதில்லை. இது எனக்காக நானே எழுதியது.

இனி நீங்கள் புது வாழ்க்கையைத் தேடிக்கொள்ள இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்று எனக்குத் தெரியவில்லை .உண்மையெனில், அவர்கள் எனக்கு என்ன மாதிரியான உறவுகளென்று எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று அந்த உறவுகள் மூலம் பிறக்க இருக்கும் என் சகோதரனுக்கோ சகோதரிக்கோ மீண்டும் என் நிலமை வரவேண்டாம் என்று மட்டும் வேண்டுகிறேன்.

கடைசியாக ஒரு விஷயம்

கடிதத்தின் தொடக்கத்தில் உங்கள் இருவரையும் ஒன்றாக இணைத்து “அம்மா அப்பாவுக்கு” என எழுதியதற்காக, இறுதியாக ஒருமுறை மன்னிப்பு கோருகிறேன்.

இப்படிக்கு,

உங்கள் அன்பு மகள் வர்ஷா.

கடிதத்தைப் படித்த நிஷாவின் கண்களிலிருந்து



பொலபொலவென கண்ணீர் வழிந்தது. தன் தோழியைப் பார்க்கையில் மிகவும் பரிதாபமாக இருந்தது. அப்படியே மீண்டும் அந்தப் புத்தகத்தின் நடுவே கடிதத்தை வைத்துவிட்டு நாளை இதை மீண்டும் வர்ஷாவின் பைக்குள் அவளுக்குத் தெரியாமல் வைத்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு நிஷாவும் உறங்கிவிட்டாள்.

மறுநாள் விடியலில் கதிரவனின் மிதமான ஒளி படர ஈரக்காற்று வீசக் கோடையின் தாக்கம் சற்று குறைந்து இதமாக இருந்தது. அன்று காலையில் கண்விழித்தபோது நிஷாவின் மனதில் அந்த யோசனை உதித்தது . எப்படியும் தன் தோழி வர்ஷாவிற்கு உதவ இதுதான் வழியென்று முடிவுசெய்தவள், அன்றே வர்ஷாவுக்கு தெரியாமல் அந்தக் காரியத்தைச் செய்தாள் நிஷா.

என்னை மன்னிச்சுடு வர்ஷாஞ்ஜனக்கு வேற வழி தெரியலை. உன்னோட அனுமதி இல்லாம உன் கடிதத்திற்கு இரண்டு நகல்கள் எடுத்து அவைகளில் உன் வீட்டு முகவரி எழுதி உங்க அம்மாவுக்கும், தில்லியிலுள்ள நிறுவன முகவரி எழுதி உன் அப்பாவுக்கும் தனித்தனி கடிதங்களாக அதை அனுப்பிவச்சிட்டேன்ஞ்ஜன்று மனதுக்குள் தன் தோழியிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டாள் நிஷா.

# அறிவோம் தமிழர்


## கல்விச் சிற்பி காமராஜர்

### உலகமே பள்ளிக்கூடம்

காமராஜர், பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோதே அவரது தந்தை குமாரசாமி காலமானார். குடும்பம் வறுமைக்கு ஆளாகியது. ஆறாவது வகுப்பு படிக்கும்போதே பள்ளிக்கூடம் போவதை நிறுத்திக்கொண்டார். உறவினர்களின் கடைகளில் உதவியாளாக வேலைசெய்தார். அந்தக் கடைகளுக்கு வருபவர்கள் விவாதித்துக்கொள்ளும் அரசியல் விவகாரங்களின் மீது அவருக்கு ஆர்வம் பிறந்தது. அந்த விவாதங்களைக் கூர்ந்து கவனித்தார். செய்தித்தாள்களைப் படித்து அன்றாடம் அரசியல் நிலவரத்தை உடனுக்குடன் தெரிந்துகொண்டார். அரசியல் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டார். தான் அறிந்த அரசியல் கருத்துகளை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள அவர் தவறியதில்லை. இப்படித்தான் பள்ளிக்கூடங்களுக்கு வெளியே ஒரு தலைவர் உருவெடுத்தார்

### விவசாயத்துக்கும் ஏற்றம்

காமராஜர் ஆட்சிக்கு வந்ததும் விவசாய வளர்ச்சிக்கும் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுத்தார். விவசாய மேம்பாட்டுக்கு அவர் மேற்கொண்ட பணிகளில் முக்கியமானவை பாசனத் திட்டங்கள். கீழ்பவானி, மணிமுத்தாறு, மேட்டூர் கால்வாய், ஆரணியாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, காவிரி கழிமுக வடிகால், புள்ளம்பாடி வாய்க்கால், புதிய கட்டளைக் கால்வாய், வீடூர் நீர்த்தேக்கம், கொடையாறு வாய்க்கால், நெய்யாறு, பரம்பிக்குளம்—ஆழியாறு ஆகிய நீர்ப்பாசன திட்டங்களால் தமிழகத்தின் பல பகுதிகளையும் வளமாக்கினார் காமராஜர்.



### தமிழ்த் தொண்டு

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம், தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், தமிழ்ப் பாடநூல் வெளியீட்டுக் கழகம் ஆகியவற்றைக் கொண்டுவந்து ஆரவாரமில்லாமல் தமிழ்ப் பணியாற்றினார். கலைச்சொல் அகராதி அவர்

# பெருமை

ஆட்சியின்போதுதான் வெளியானது. நிதிநிலை அறிக்கை தமிழில் வெளியிடப்பட்டது.

## எஸ்.சண்முகம்

தமிழகத்தின் பொற்காலம்

காமராஜர் ஆட்சி செய்த ஒன்பது ஆண்டுகள் தமிழ்நாட்டின் பொற்காலங்களில் ஒன்று. விவசாயத் துறையின் வளர்ச்சிக்காகப் பாசன வசதி மேம்படுத்தப்பட்டது. தொழில்துறை வளர்ச்சி அடைந்தது. காமராஜரால் தமிழகத்து மக்கள் அடைந்த பயன்கள் பல. அவற்றில் ஏழைக் குழந்தைகளுக்கு மதியஉணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவருடைய ஆட்சியில்தான் அதிகளவில் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு வட்டியில்லாத கடன் கொடுக்கவும் வழிவகைகள் செய்தார்.




எப்போதும் முதல் இடத்தைப் பிடிப்பது கல்வித் துறை மேம்பாட்டில் அவர் முன்னெடுத்த செயல்பாடுகள்.

காமராஜரின் ஆட்சிக்கு முந்தைய காலத்தில் மூடப்பட்ட 6000 பள்ளிகளை அவர் மீண்டும் திறந்துவைத்தார். அந்தப் பள்ளிகளின் எண்ணிக்கையால் மட்டும் எல்லோருக்கும் கல்வி கொடுக்க இயலாது என்பதால் மேலும் 14 ஆயிரம் பள்ளிகளைப் புதிதாகத் திறந்தார். மாநிலம் முழுவதும் பள்ளிக்கூடங்களில்

தலைவர்களின் தலைவர்

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் அதற்குப் பரிசாக ஆட்சியதிகாரத்தைத் தொடர்ந்து வகிப்பது கூடாது, கட்சிக்காக உழைக்க வேண்டும் மக்களுக்கும் அரசுக்கும் பாலமாகச் செயல்பட வேண்டும் என்றார். அவருடைய திட்டத்தை நேரு மகிழ்ச்சியோடு வரவேற்றார். வெறும் யோசனையோடு நிற்காமல் தானே முன்னுதாரணராகப் பதவியைத் துறந்து கட்சிப்




பணியில் ஈடுபட்டார்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் தேசியத் தலைமையே அவரிடம் வந்தது. அவர் தலைவராக இருந்த காலகட்டத்தில்தான் நேரு உடல்நலம் குன்றி காலமானார். நேருவுக்குப் பிறகு யார் என்ற கேள்விக்குத் தீர்வுகண்டவர் காமராஜர். லால் பகதூர் சாஸ்திரியைப் பிரதமராக்கினார் காமராஜர். சாஸ்திரியின் மறைவுக்குப் பிறகு யார் என்ற கேள்வி எழுந்தபோதும் பிரதமர் பதவியை நோக்கி தான் நகராமல் இந்திராவை நகர்த்தினார்.

கட்சிக்குள்ளும் போராட்டம்

காங்கிரஸ் கட்சியில் 1919—ல் காமராஜர் ஒரு தொண்டராக இணைந்தார். அடுத்த இருபது ஆண்டுகளுக்குள் அந்தக் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக உருவெடுத்தார். இடைப்பட்ட காலத்தில், உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதற்காக சிறைத்தண்டனையை அனுபவித்திருக்கிறார். ஆங்கிலேய ஆட்சியில் தொடர்ந்து பொய் வழக்குகள் போடப்பட்டு இன்னலுக்கு ஆளாகியிருக்கிறார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது தலைமறைவாக இருந்து பணியாற்றியிருக்கிறார். கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் தன்னுடைய வாழ்க்கையில் வெவ்வேறு காலகட்டங்களில் அவர் சிறையில் இருந்திருக்கிறார்.

அந்தக் காலகட்டத்தில் அரசியல் தலைவர்கள் அனைவருமே போராட்டங்களில் ஈடுபட்டவர்கள்தான். அதற்காக ஆங்கிலேய ஆட்சியில் சிறைத்தண்டனையைப் பரிசாகப் பெற்றவர்கள்தான். அதுவே சுதந்திர இந்தியாவில் அவர்கள் அரசுப் பதவிகளைப் பெறவும் காரணமாயிற்று. காமராஜர் ஆங்கிலேய ஆட்சியோடும் எதிர்க்கட்சியினரோடும் மட்டும் போராடவில்லை. சொந்தக் கட்சிக்குள்ளும் பல்வேறு தரப்புகளோடு அவர் போராடிக்கொண்டிருந்தார். கட்சியில் அவர் எதிர்கொண்ட எதிரி ராஜாஜி. சர்வபலமிக்க ஆளுமை. ராஜாஜியை வீழ்த்தியதுதான் அரசியலில் காமராஜரின் பெரிய சாதனை.

மக்கள் நலனே முக்கியம்

விடுதலைப் போராட்டக் காலத்தில் காங்கிரஸ் கட்சி மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. எனவே, பணம் இருப்பவர்களும் பதவியை விரும்புபவர்களும் அந்தக் கட்சியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்கள். ஆனால், காமராஜரோ பதவிகளைப் பெறுவதைக் காட்டிலும் மக்களுக்கு உழைப்பதிலேயே கவனத்தைச் செலுத்தினார். அவரது நம்பிக்கையும் முயற்சியும் வீண்போகவில்லை.மக்களுக்காக உழைத்த அவரைப் பதவிகள் தானாகவே தேடிவந்தன. தமிழகத்தின் முதலமைச்சராக 1954 முதல் 1963 வரை ஒன்பது ஆண்டுகள் பணியாற்றினார். அப்போது கட்சியில் தனக்கு எதிராகச் செயல்பட்டவர்களையும்கூட தனது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். அரசியல் பகையைக் காட்டிலும் மக்கள்நலனே முதன்மையானது என்பதில் அவர் காட்டிய உறுதிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

ஆவடி காட்டிய சோஷலிசப் பாதை

ஆவடியில் மாபெரும் காங்கிரஸ் மாநாட்டை 10.1.1955—ல் நடத்தினார் காமராஜர். வறுமையை ஒழிக்கவும், வேலைவாய்ப்பைப் பெருக்கவும், தேசத்தின் அரிய வளங்களை மக்களின் நலனுக்காக மட்டுமே பயன்படுத்தவும் சோஷலிசம்தான் உற்ற கொள்கை என்று தீர்மானித்திருந்தது காங்கிரஸ். பெரம்பூரில் ரயில்பெட்டித் தொழிற்சாலை, ஊட்டி இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை,



திருவெறும்பூரில் பெல் ஆலை, ஆவடி ராணுவ டாங்க் தொழிற்சாலை எல்லாம் காமராஜர் காலத்தில் தொடங்கப்பட்டதுதான்.

சென்னை கிண்டி, விருதுநகர், கும்பகோணம், விருத்தாசலம், கிருஷ்ணகிரி, நாகர்கோவில், அம்பத்தூர் உள்ளிட்ட பல பகுதிகளில் தொழிற்பேட்டைகளும் தொடங்கப்பட்டன. ‘வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’ என்ற அண்ணாவின் முழக்கத்துக்குப் பதிலடி கொடுக்க வேண்டிய நிலையிலிருந்த காமராஜர், காங்கிரஸின் புதிய தீர்மானத்தை அதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தினார்.

மின்உற்பத்தியில் தன்னிறைவு

காமராஜர் காலத்தில் தொழிற்சாலைகள் அதிகம் திறக்கப்பட முக்கியக் காரணமாக இருந்தது ஆலைகளுக்கு வேண்டிய மின்சாரத்தைத் தடையின்றித் தர முடிந்ததுதான். அன்றைக்கிருந்த நீர்வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி பெரியாறு, குந்தா நீர் மின்னுற்பத்தி திட்டங்களை அமல்படுத்தினார். நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை அகழ்ந்தெடுக்கும் நிறுவனத்தை அமைத்ததுடன் அனல் மின் நிலையங்களுக்கும் வழிகோலினார்.

தேர்ந்த வாசகர்

காமராஜர் ஆங்கிலம் அறிவார். இந்தியும் பேசுவார். ஆனால், ஆங்கிலம் இந்தியெல்லாம் தமிழ்நாட்டுக்கு வெளியேதான். பத்திரிகைகளைக் காலையில் எழுந்தவுடன் படித்துவிடுவதும் பத்திரிகைகள் சுட்டிக்காட்டும் குறைகளுக்கு நடவடிக்கை எடுப்பதும் அவர் கடைபிடித்த ஒழுங்குகளில் ஒன்று. வெகுஜன பத்திரிகைகள் மட்டுமின்றி சிறுபத்திரிகைகளையும் விடாமல் வாசித்தவர். ஹெரால்டு லாஸ்கி எழுதிய அரசியல் இலக்கணம் (எ கிராமர் ஆஃப் பாலிடிக்ஸ்) அவருக்கு மிகவும் பிடித்த புத்தகம். ஒவ்வொரு பக்கத்தையும் அவர் அடிக்கோடிட்டுப் படித்திருக்கிறார்.

திராவிடக் கட்சிகளுக்கு முன்னோடி

திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்குப் பிறகு தமிழ்நாட்டின் வரலாற்றைப் பார்ப்பவர்கள் ஒட்டுமொத்த இந்தியாவின் போக்கிலிருந்து மாறுபட்ட போக்கைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்று சொல்வதுண்டு. உண்மையில், காமராஜர் காலத்திலேயே அது தொடங்கிவிட்டது. தேசிய அளவில் காங்கிரஸ், நாட்டின் முன்னேற்றத்துக்கான பாதையாக தொழில் வளர்ச்சியை முன்னெடுத்தபோது காமராஜர் இங்கு அதில் சமூகநீதிக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

பெரியாரோடு மிக நெருக்கமாக இணைந்து பணியாற்றினார். திமுகவின் வளர்ச்சியைக் காட்டி பயமுறுத்தியே டெல்லியிடமிருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்தார். பிற்பாடு அண்ணா, கருணாநிதி, எம்ஜிஆர் மூவரும் சொன்னபடி பலவகைகளில் திராவிடக் கட்சிகளின் ஆட்சியாளர்களுக்குக் காமராஜர் முன்னோடியாக இருந்தார். தமிழக வரலாற்றில் மிக பயன்மிக்கதான ஆய்வுக்குரிய பகுதி காங்கிரஸை அழித்தொழிப்பதையே லட்சியமாகக் கொண்ட பெரியார், காமராஜருக்காக ஓட்டு கேட்டு ஊர்ஊராகப் பயணித்ததும், இந்திய தேசியத்துக்கு இங்கு பெரும் சவாலாக இருந்த பெரியாருடன் காமராஜர் இணைந்து பணியாற்றியதும்தான். தமிழக நலனே இருவரின் பிரதான நலனாக இருந்தது.




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# அசோக புரத்தில் 22

காஞ்சி மாநகரத்திலிருந்து ஏழு காததூரத்தில், தில்லைப்பதிக்குப் போகும் மார்க்கத்தில், அசோகபுரம் என்னும் ஊர் இருந்தது. இந்த ஊரின் மத்தியில் பரத கண்டத்தை ஒரு குடை நிழலில் ஆண்ட சக்கரவர்த்திகளுக்குள்ளே ஒப்புயர்வற்ற தர்ம சக்கரவர்த்தியான அசோகவர்த்தனர் தேசமெங்கும் நிலை நாட்டிய ஸ்தம்பங்களில் ஒன்று கம்பீரமாய் நின்றது. ஒரு காலத்தில் இந்த அசோக ஸ்தம்பத்தைச் சுற்றியிருந்த புத்த விஹாரங்களில் ஓராயிரம் புத்த பிக்ஷுக்கள் வாசம் செய்தார்கள். புத்த மதத்தைச் சேர்ந்த கிரகஸ்தர்கள் வாழ்ந்த ஆயிரக்கணக்கான வீடுகளும் இருந்தன. மாலை நேரத்தில் புத்த சைத்தியங்களில் பகவான் புத்தருக்கு ஆராதனை நடக்கும்போது தூபங்களிலிருந்து எழும் நறுமணப் புகையானது ஊரெல்லாம் கவிந்திருக்கும். நூற்றுக்கணக்கான பூஜை மணிகள் கணகணவென்று ஒலித்துக்கொண்டிருக்கும். புத்தரின் சந்நிதியில் ஆயிரக்கணக்கான தீபங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கும். பிக்ஷுக்களும், கிரகஸ்தர்களும் கையில் புஷ்பம் நிறைந்த தட்டுக்களை ஏந்திக்கொண்டு பத்தி பத்தியாகச் சைத்தியங்களுக்குப் போய்க்கொண்டிருப்பார்கள்.




அத்தகைய அசோகபுரமானது இப்போது பாழடைந்து நிர்மானுஷ்யமாய்க் கிடந்தது. சைத்தியமும் விஹாரமும் சேர்ந்தமைந்த ஒரே ஒரு கட்டிடத்திலே மட்டும் ஒரு சிறு தீபத்தின் ஒளி காணப்பட்டது. மற்றக் கட்டிடங்கள் இடிந்து தகர்ந்து பாழாய்க் கிடந்தன. இடியாத கட்டிடங்களில் இருள் சூழ்ந்திருந்தது.

தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அசோக சக்கரவர்த்தியால் நிலைநாட்டப்பட்ட தர்மபோதனை ஸ்தம்பம் மாத்திரம் தாவள்யமான சந்திரிகையில், "தர்மத்துக்கு என்றும் அழிவில்லை" என்பதை ஸ்தாபித்துக் கொண்டு தலைதூக்கி நின்றது.

இத்தகைய அசோக புரத்துக்கு இருட்டி இரண்டு நாழிகைக்குப் பிறகு ஆயனரும் சிவகாமியும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் அசோகருடைய ஸ்தம்பத்தின் அருகில் வந்த போது ஆயனர் வானை நோக்கி நெடிதோங்கி நின்ற அந்த ஸ்தம்பத்தை அண்ணாந்து நிலா வெளிச்சத்தில் பார்த்தார். அதுவரை அவர்களுக்குள் நிலவிய மௌனத்தைக் கலைத்துக் கொண்டு, "ஆஹா! அசோக சக்கரவர்த்தி எத்தகைய சர்வோத்தமர்! உலகத்திலே தோன்றும் அரசர்கள், சக்கரவர்த்திகள் எல்லாம் அசோகரைப் போன்றவர்களாயிருந்தால், இந்தப் பூவுலகம் எவ்வளவு ஆனந்தமயமாயிருக்கும்? யுத்தம் என்னத்திற்கு? பகைமை என்னத்திற்கு? ஒருவருடைய இரத்தத்தை ஒருவர் சிந்துவது என்னத்திற்கு? பூவுலக மாந்தர்கள் எல்லாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்து கொண்டு அஹிம்சையை மேற்கொண்டு ஆனந்தமாய் வாழலாகாதா?" என்றார்.

அப்போது சிவகாமி குறுக்கிட்டு, "அப்பா! இதென்ன! சற்று முன்னாலேதான் உங்களுக்கும் கத்தி எடுத்துக்கொண்டு யுத்தம் செய்ய ஆசை உண்டாவதாய்ச் சொன்னீர்கள். இப்போது அன்பு, அஹிம்சை, ஆனந்தம் என்கிறீர்களே. உங்களுடைய மனது இப்படிச் சஞ்சலம் அடைந்து நான் பார்த்ததேயில்லை!" என்றாள்.




“உண்மைதான், சிவகாமி! என் மனது இப்போதெல்லாம் ஒரு நிலையில் இல்லை. புத்த பகவான் இந்த உலகத்தில் அன்பின் ஆட்சியை நிலைநாட்டப் பார்த்தாரே? அவருடைய பிரயத்தனம் ஏன் வீணாகப் போயிற்று என்பதை நினைத்து என் மனம் சஞ்சலப்படுகிறது” என்றார் ஆயனர்.

பிக்ஷு அப்போது வாய் திறந்து, “ஆயனரே! புத்த பகவானுடைய போதனையை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் மனித குலத்துக்கு இன்னும் ஏற்படவில்லை! அதற்கு என்ன செய்வது?” என்றார்.

யாரும் எதிர்பாராதபடி குண்டோதரன் சம்பாஷணையில் கலந்து கொண்டு, “மனித குலம் என்று பொதுப்படையாகச் சொன்னால் என்ன பிரயோசனம், அடிகளே? பிராணிகளிலே புலியும் இருக்கிறது; பசுவும் இருக்கிறது. ஜந்துக்களிலே பாம்பும் இருக்கிறது; அணிலும் இருக்கிறது. அது போலவே மனிதர்களுக்குள்ளும் எத்தனையோ வித்தியாசம் இருக்கிறது. மௌரிய வம்சத்து அசோகவர்த்தனரைப் போலவேதான் நமது மகேந்திர பல்லவரும் தம் ராஜ்யத்தில் அன்பு மதத்தை ஸ்தாபிக்க முயன்றார். யுத்தம் என்பதே வேண்டாம் என்று நினைத்தார். அதைக் கெடுப்பதற்கு ஒரு புலிகேசியும், ஒரு துர்விநீதனும், ஒரு பாண்டியனும் புறப்பட்டு வந்தால் மகேந்திர பல்லவர் என்ன செய்வார்? பூலோகத்தில் பாம்பு இருக்கும் வரையில் கீரிப்பிள்ளையும் இருக்க வேண்டியதுதான். கீரிப்பிள்ளை இல்லாவிட்டால், மனிதனாவது தடியை எடுத்துப் பாம்பை அடித்துத்தானே தீர வேண்டும்?” என்றான்.


“அடே அப்பா நமது குண்டோதரன் இவ்வளவு வாசாலகன் என்று எனக்குத் தெரியவே தெரியாதே!” என்றார் ஆயனர்.

புத்த பிக்ஷுவோ அருவருப்புடனும் ஆத்திரத்துடனும் அவனை நோக்கினார்.

சிவகாமி, “குண்டோதரன் சொல்வது நியாயம், அப்பா! உலகத்தில் பொல்லாதவர்கள் இருக்கும் வரையில் அவர்களை அடக்கக்கூடிய புருஷர்களும் வேண்டும் அல்லவா?” என்றாள்.

“ஆம் சிவகாமி, ஆமாம்! அது மட்டுமல்ல; உலகத்தில் எல்லாம் அன்புமயமாய்ப் போய்விட்டால், வீரம் என்பதே இல்லாமற் போய்விடும். வீரம் இல்லாத உலகம் என்ன உலகம்? அப்புறம் கதை ஏது, காவியம் ஏது, கலைதான் ஏது?” என்றார் ஆயனர்.

குண்டோதரன், “குருவே! நான் ஒன்று சொல்லட்டுமா? இந்த அசோகர் ஸ்தம்பம் இங்கே வெறும் ஸ்தம்பமாக நின்று கொண்டிருப்பதில் யாருக்கு என்ன பிரயோசனம்? இதிலுள்ள உபதேசத்தைப் படித்து அதைப் பின்பற்றி நடப்பார் யார்? இந்த ஸ்தம்பத்தை என்ன செய்யவேண்டும்



என்று நான் சொல்லட்டுமா?.." என்று கூறிக்கொண்டே குண்டோதரன் ஸ்தம்பத்தைக் கையினால் தட்ட அது 'டாண்! டாண்!' என்று ஒலி செய்தது.



பின்னர், "நல்ல எஃகினால் செய்திருக்கிறது; இதைக் கொல்லன் உலையில் போட்டு உருக்கி, வாள்களாகவும் வேல்களாகவும் செய்யவேண்டும். இந்த ஸ்தம்பத்தை உருக்கினால், குறைந்தபட்சம் பத்தாயிரம் வாள்களும் வேல்களும் செய்யலாம்!" என்றான் குண்டோதரன்.

அசோக ஸ்தம்பத்தினருகில் மேற்கண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில் நாகநந்தி சற்று முன்னாலேயே நடந்து சென்று அருகிலே இருந்த புத்த விஹாரத்தை அடைந்தார். அதேசமயம் விஹாரத்துக்குள்ளேயிருந்து வயோதிக பிக்ஷு ஒருவர் கையில் தீபத்துடன் வாசலில் வந்தார். அந்தத் தீபத்தின் வெளிச்சத்தில் விஹாரத்தின் வாசலிலே நின்றுகொண்டு, பிக்ஷு குண்டோதரன் கொண்டு வந்த ஓலையைப் படித்தார். அப்போது அவருடைய முகத்தில் உண்டான மாறுதல்களைத் தீபச் சுடரின் சிவந்த ஒளியில் பார்த்துக் கொண்டிருந்த வயோதிக பிக்ஷுவே பயந்து போனார் என்றால், மற்றவர்கள் பாராததே நல்லதாய்ப் போயிற்று என்று சொல்லவேண்டும்.

நாகநந்தி ஓலையைப் படித்து முடித்ததற்கும் ஆயனர் முதலியோர் விஹாரத்தின் வாசலில் வந்ததற்கும் சரியாயிருந்தது. உடனே அவர் தமது முகத்திலும் குரலிலும் அமைதி வருவித்துக் கொண்டு, மற்றொரு பிக்ஷுவைப் பார்த்து, "சுவாமி! இவர்கள் எல்லாம் ஐந்தாறு தினங்கள் தங்கியிருக்கும்படி நேரிடலாம். அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுக்க வேண்டும்" என்று கூறினார்.

பின்னர் ஆயனரைப் பார்த்துச் சொன்னார்: "ஆயனரே! உம்முடைய சீடனுக்கு உண்மையில் நான் நன்றி செலுத்தவேண்டும். இந்த ஓலையில் மிகவும் முக்கியமான விஷயந்தான் அடங்கியிருக்கிறது. இதைக் கொண்டு வந்தவனை ஏரியிலே தள்ளிவிட்ட போதிலும் ஓலையைக் கொண்டு வந்தானல்லவா? இந்த ஓலையில் அடங்கிய விஷயத்தைக் கவனிப்பதற்காக நான் அவசரமாய்ப் போகவேண்டியிருக்கிறது. திரும்பி வருவதற்கு இரண்டு மூன்று நாள் ஆனாலும் ஆகலாம். அதுவரையில் நீங்கள் இங்கேயே சுகமாகத் தங்கி இருங்கள். இந்தப் பிக்ஷு உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பார். மேலும் உங்களுக்கு ஒத்தாசையாகக் குண்டோதரனும் வந்து சேர்ந்து விட்டானல்லவா?"

இந்தக் கடைசி வாக்கியத்தைச் சொல்லும்போது குண்டோதரனுடைய மார்பையே கீறி உள்ளே பார்ப்பது போல் பார்த்த நாகநந்தி மறுகணம் சிவகாமியை நோக்கி, கனிவு ததும்பிய குரலில், "சிவகாமி! உங்களை அழைத்துக் கொண்டு வந்து இப்படி நடுவழியில் விட்டுவிட்டுப் போகிறேனே என்று நினைக்காதே! மிகவும் அவசர காரியமானபடியாலேதான் போகிறேன். சீக்கிரத்தில் திரும்பி வந்து உங்களுடன் சேர்ந்துகொள்வேன்" என்றார்.

அநேகமாக எல்லாப் புத்த விஹாரங்களிலும் உள்ளதுபோல் இந்தப் பாழடைந்த விஹாரத்திலும் நடுவில் புத்தர் சந்நிதி இருந்தது. இரண்டு பக்கத்திலும் பிக்ஷுக்கள் வசிப்பதற்குரிய அறைகள் இருந்தன. ஒரு பக்கத்து அறைகள் ஆயனருடைய குடும்பத்துக்காக ஒழித்துக் கொடுக்கப்பட்டன.

அவர்கள் தங்களுடைய அறைகளுக்குச் சென்ற பிறகு, இன்னொரு பக்கத்திலிருந்த இருண்ட அறைகளுக்கு நாகநந்தி சென்றார்.

(சபதம் தொடரும்)

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்

தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648



# மரம் நடுவோம்

## தமனிதரின் உறவாகும் மரங்கள்

நமது ஊரில் எனது உடன்பிறப்பே' என்று சொன்னால் அது ஒரு கட்சியைக் குறிக்கிறது; ரத்தத்தின் ரத்தமே' என்று கூறினால் அது மற்றொரு கட்சியைக் குறிக்கும். மக்களின் ஆதரவைத் திரட்டி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் திட்டத்தோடு இந்த தாரக




மந்திரங்கள், முதலாவதாக, கட்சிப் பணியாற்றும் தொண்டர்களுக்காக கட்சிப் பத்திரிகைகளில் எழுத்து வடிவில் அழைக்கப்படும்.

பின்னர் கட்சியினர் நடத்துகின்ற பொதுக்கூட்டங்களில் மக்களைக் கவர்வதற்காக இம்மந்திரங்களைக் கட்சியின் தலைவர்கள் முழங்குவார்கள். ஆனால், சிக்கிம் மாநிலத்தில் இப்படி ரத்த உறவுகளை அழைப்பது மனிதர்களைக் குறிக்காது; மரங்களையே அர்த்தப்படுத்தும்.

காடுகளில் இழந்துவிட்ட மரங்களை ஈடுசெய்யவும், இயற்கை விவசாயத்திற்கு ஆக்கம் தரும் வன வேளாண்மையை மேம்படுத்தவும், மரங்களுடன் மனிதன் கொண்டுள்ள பாரம்பரிய உறவுகளைத் தக்க வைக்கவும், மனிதனின் ரத்த உறவுகளாகவே மரங்களை நேசித்து வளர்க்கிறார்கள். மரங்களைத் தத்தெடுத்து வளர்க்கும் இப்பண்பாட்டை சட்ட வரையறைக்குள்ளேயே கொண்டு வந்துவிட்டார்கள் சிக்கிம் மக்கள்.

சிக்கிம் மாநிலத்தில் மைத்' என்ற பாரம்பரிய வழக்கம் தொன்றுதொட்டு உள்ளது. மைத்' என்றால் ஒருவர் ஒரு மரத்தையே ரத்த உறவு அடிப்படையில் அதாவது தன்னுடைய உடன்பிறப்பாகவோ, தந்தையாகவோ, தாயாகவோ, சகோதரனாகவோ, சகோதரியாகவோ ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்து, அதனைப் போற்றி வளர்ப்பது.

ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தால், ஒரு மரத்தை தத்தெடுத்து அந்த




# மனிதம் காப்போம்

**ஆர். எஸ்.நாராயணன்**

மரத்தையே அக்குழந்தையின் தந்தை என்று ஏற்றுக்கொள்வார்கள். அது மட்டுமல்ல, அம்மரம் பட்டு விழும் வரை அதனைத் தமது குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகவே மதித்துக் காப்பாற்றும் மரபு சிக்கிம் மாநிலத்தில் உண்டு.

இப்படிப்பட்ட ஒரு பாரம்பரியப் பண்பு மங்கிவிடாமல் அதனைப் பட்டை தீட்டி மிளிர வைக்கும் விதமாக சிக்கிம் முதல்வர் பவன்குமார் சமலிங், சிக்கிம் வனமரங்கள் பாதுகாப்பு விதிமுறைகள் — 2017' என்ற பெயரில் ஒரு புதுமையான சட்டத்தை நிறைவேற்றியுள்ளார். மனிதர்கள் மரங்களோடு கொண்டுள்ள ரத்த உறவை மூன்று விதமாக வகைப்படுத்தி, அவ்வுறவைக் காப்பாற்ற மக்கள் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

முதலாவது, மைத்' என்று அறிவித்து ஒரு ஆண் ஒரு மரத்தை தத்தெடுத்துக் கொண்டால், அம்மரம் அவரின் சகோதரனாகக் கருதப்படும். இரண்டாவது, மைத்தினி' என்று அறிவித்து ஒரு பெண் ஒரு மரத்தைத் தத்தெடுத்துக் கொண்டால் அம்மரம் அந்தப் பெண்ணின் சகோதரனாகக் கருதப்படும். மூன்றாவது, குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவர் நினைவாக, குடும்பத்தினர் ஒரு மரத்தைத் தத்தெடுப்பது. இதனை ஸ்மிருதி' என்று குறிப்பிடுவர். அதாவது நீத்தார் நினைவு.





இப்படிப்பட்ட உறவுப்பெயர்கள் சூட்டி மரங்களைத் தத்தெடுக்க வேண்டும். அவரவர் தங்களுக்குச் சொந்தமாக உள்ள நிலத்தில் உள்ள மரங்களை மட்டுமே தத்தெடுக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. மற்றவர் நிலத்தில் வளரும் மரத்தையும் மேற்குறிப்பிட்ட முறைகளில் தத்தெடுக்கலாம்.

அவ்வாறு தத்தெடுக்கும்போது மற்றொருவர் நிலத்தில் உள்ள மரத்திற்கு நிகராக, மரமதிப்பை சந்தை விலைக்கு ஏற்ப நிர்ணயித்து நில

உரிமையாளருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். அதே போன்று, வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் உள்ள மரங்களையும் தத்தெடுக்கத் தடையில்லை. வனத்துறையிடம் முறையான ஒப்புதல் பெற்றால் போதுமானது.

சாதாரணமாக நமது மாநிலத்தில் அடிக்கடி மரம் நடு விழா' என்று விளம்பரப்படுத்தப் படுகிறது. சிலர் பிறந்தநாள் விழாவில் மரம் நடுவதாக




புகைப்படத்திற்கு போஸ்' தருவதுண்டு. சிலர் மரக்கன்றுகள் பரிசளிப்பார்கள். ஆனால் மரம் நட்டார்களா? நட்ட கன்று வளர்ந்ததா என்ற சந்தேகங்கள் உள்ளன.

ஆனால், சிக்கிமில் அப்படி அல்ல. மரம் தத்தெடுப்பவர்கள் எழுத்து மூலம் வனத்துறையில் பதிவு செய்யவேண்டும். வனப் பாதுகாப்பு அலுவலரிடம் விண்ணபத்தாள் பெற்று பூர்த்தி செய்ய வேண்டும். எந்த மரத்தை யார் தத்தெடுத்தாலும் அவர் இறக்கும் வரை அதை வளர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அப்பொறுப்பேற்பு உறுதிமொழி ஏற்கப்பட்ட பின்புதான் மர வளர்ப்பு அனுமதிக்கப்படுகிறது.

மைத்', மைத்தனி', ஸ்மிருதி' ஆகிய மூன்று முறையில் மரங்களைத் தத்தெடுத்து வளர்ப்பவர்கள் எக்காரணம் கொண்டும் மரத்தை வெட்ட அனுமதி இல்லை. சரியான காரணம் இருக்குமானால் வனத்துறை அனுமதி வேண்டும். மீறி தாங்கள் தத்தெடுத்த மரத்தை வெட்டினால், அது வனத்துறை நிலத்தில் உள்ள மரமானால் அந்த மரத்தின் மதிப்புக்கு நிகராக நான்கு மடங்கு பணம் அபராதம் செலுத்த வேண்டும். தனியார் நிலம் என்றால் இரண்டு மடங்கு பணம் அபராதம்.

ஏற்கெனவே ஒரு மரத்தைத் தம் குடும்ப உறுப்பினராக,ஒரு சகோதரனாக,நீத்தார் நினைவாக ரத்த பாசத்துடன் தத்தெடுத்து வளர்க்கும் முறை சிக்கிமில் சட்டமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சட்ட அந்தஸ்தை பெற்றுவிடுவதால் தத்தெடுத்த மரத்தை யாரும் வெட்டமாட்டார்கள்.


இந்த சட்டம் மக்கள் வரவேற்பைப் பெற அடிக்கடி ஆங்காங்கே வன மகோத்சவம்' நடத்தி பிரசாரமும் நடக்கும் என்று சிக்கிம் மாநிலத் தலைமை வனக் காவலர் கூறியுள்ளார். மேலும் அவர் சிக்கிம் மக்கள் தொகையில் 50 சதவீதம் மக்கள் இந்தசிக்கிம் வன வளர்ப்பு விதிமுறைச் சட்ட' அடிப்படையில் ஒரு மரம் வளர்க்க முன்வந்தால், வனங்களில் அடர்த்தி உருவாகி புவிவெப்பமாதலுக்கு அரணாகவும், இமயத்து வெள்ளிப் பனிமலை உருகாமலும் காப்பாற்றலாம்' என்று கூறியுள்ளார்.

சிக்கிம் மாநில அரசின் மர வளர்ப்புக் கொள்கை இமயமலை சார்ந்த உத்தராஞ் சல், ஹிமாசலப் பிரதேசம், ஜம்மு—காஷ்மீர் போன்ற மாநிலங்களிலும் பின்பற்றப்படுமானால் இமயமலைக் காடுகள் காப்பாற்றப்பட்டு நிலச்சரிவுகளிலிருந்தும் மீள முடியும்.

இப்படிப்பட்ட சுற்றுச் சூழலுடன் தொடர்புள்ள மர வளர்ப்பு என்ற வேள்வியை மாநில வனச் சட்டமாகவே இயற்றிய சிக்கிம் முதல்வர், மலைப்பிரதேசமாயுள்ள இம்மாநிலத்தில் மர வேளாண்மை உயிர்ச்சூழல் அமைப்பை

உறுதியாக்குவதுடன், சரிவுள்ள நிலங்களில் மண்வளம் பாதுகாக்கப்பட்டு, நீர்வளமும் பெருகும். மேலும், காற்றில் கலந்துள்ள மாசு நீங்கவும் மரம் அவசியமே’ என்கிறார்.

சிக்கிம் மாநிலம் இயற்கை விவசாயத்தில் முழுமைய பெற்றுள்ளது. சிக்கிமில் ரசாயன உரங்களுக்கும் பூச்சி மருந்துகளுக்கும் தடை உள்ளது. இந்த விஷயத்தில் இந்தியாவின் பிற




மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ள மாநிலம் சிக்கிம்.

இந்த மர வளர்ப்பு வனச்சட்டம் மூலம் உயிர்ச்சூழலை உயர்த்தி ஒரு மரம் சார்ந்த உயிரினங்களையும் வளர்த்து கால்நடைகள், விலங்குகள், மற்றும் பறவைகளின் சரணாலயங்களாகப் பல இடங்கள் உருவாகிப் பல்லுயிர்ப் பெருக்கத்தை உயர்த்துவதிலும் சிக்கிம் வழிகாட்டுகிறது. இன்று அதன் நிலப்பரப்பில் 43 சதவீதம் வனப்பகுதி உள்ள சிக்கிமில் வரும் ஆண்டுகளில் 50 சதவீதமாக வனப்பகுதி உயர இப்புதிய வனச் சட்டம் உதவும்.

சிக்கிமைப் பார்த்து மற்ற மாநிலங்கள் கற்க வேண்டும். மர வளர்ப்பு பற்றிய உணர்வு தமிழ்நாட்டில் மங்கி விடவில்லை. நடுவதற்கு இடமில்லாத நகர மாந்தர் உணர்வது போல் மண்ணுள்ள கிராம மக்கள் உணர்வதாகத் தெரியவில்லை. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்‘, வன விரிவாக்கத் திட்டம்‘ எல்லாம் அந்நிய நிதியுதவி, குறிப்பாக, போர்டு அறக்கட்டளை, டென்மார்க் ஸ்வாலோஸ் போன்ற வரவுகள் இருந்தபோது இருந்தன.

இப்போதும் வன வளர்ப்புக்கு உலக வன வளர்ப்பு நிதியம், அழியும் தாவரங்களின் மீட்டுயிர்ப்புக்கான நிதி அமைப்புகள் உண்டு. வனப்பகுதிகளில் இழந்த மரங்களை ஈடு செய்யவும் திட்டங்கள் உண்டு. வன வாழ்வில் வாழ்வுரிமை, பழங்குடி மக்களின் பாதுகாப்பு போன்ற மனிதாபிமானப் பிரச்னைகளை மட்டுமே கையில் ஏந்திக் கொண்டு அரசியல் செய்யும் போராளிகள் மிகுந்துள்ளதைப் போல் ஏராளமாக மரங்களை நட்டு உலகம் முழுவதும் அடர்த்தியான பசுமைப் போர்வையை உருவாக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்ட சூழல் ஆர்வலர்கள் இல்லை.

மர வளர்ப்பை மனித ரத்த உறவுடன் பிணைத்து ஒவ்வொரு மனிதனும் மரத்தைத் தம் உடன்பிறப்புகளாகவும், ரத்தத்தின் ரத்தமாகவும் எண்ணித் தத்தெடுத்து மரம் வளர்க்கும் திட்டத்தை மாநில வனத் துறையுடன் நல்லெண்ணமுள்ள தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயலாற்ற முன்வருமா?

அரசு, மரங்களையே உடன் பிறப்புகளாகவோ, ரத்தத்தின் ரத்தமாகவோ அறிவித்து மர வளர்ப்பில் ஈடுபடுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!





# மருத்துவத்

## சர்க்கரையில் ஏது சைவமும் அசைவமும் ?

அறிவிப்புகளால் ஏழையைப் பணக்காரன் ஆக்கலாம். வறுமைக்கோட்டின் அளவைக் கீழ் இறக்கி, நாடாளுமன்றக் கூட்டம் போட்டு சட்டமாக நிறைவேற்றி விட்டால் போதுமே. அனைவரும் இந்நாட்டு மன்னர்கள் ஆகிவிடுவோம் அல்லவா? பொருளாதாரத்திற்கு மட்டும் அல்ல, உடல் சுகாதாரத்துக்கும் இது பொருந்தும். நீரிழிவுக்குப் பேர் போன இந்தியாவில் சர்க்கரை நோய் வரம்புகளைத் தளர்த்தினால் பலரும் ஆரோக்கியர்கள் ஆகிவிடலாம்.




முன்பெல்லாம் காலை உணவுக்கு முன், ரத்தத்தில் சர்க்கரை அளவு டெசிலிட்டருக்கு 140 மில்லி கிராம் என்று இருந்தால்தான் நீரிழிவு நோயாளி' என்கிற கௌரவப் பட்டம் கைகூடும். ஆனால் 1997—ஆம் ஆண்டின் அமெரிக்க சர்க்கரை நோய் சங்கத்தின் புதிய அறிவிப்பின்படி, 126 மில்லி கிராம் இருந்தாலே அந்தப் பட்டம் நிச்சயம்.

உலக அளவில் ஆண்டுதோறும் 17.5 டன் கரும்பு உற்பத்தி ஆகிறது. நாம் ஒவ்வொருவரும் மாதம் சராசரி இரண்டு கிலோ சர்க்கரை உண்கிறோம். சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரேசிலுக்கு அடுத்த இடம் இந்தியாவிற்கே. சீனி' என்ற கலைச்சொல்லை வழங்கிய சீனாவும், ஐரோப்பிய யூனியனுக்கு அடுத்த நான்காம் இடத்தில் உள்ளது. தாய்லாந்து, அமெரிக்கா, மெக்ஸிகோ, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, ரஷியா ஆகிய நாடுகள் பத்திரமாக பின்வரிசையில் ஒளிந்து கொண்டு விட்டன.

மேற்கொண்டு நாமே நாடு நாடாகச் சென்று, இந்தியாவில் முதலீடு செய்வதற்கு அழைப்பு விடுகிறோம். அமெரிக்க நீரிழிவு மருந்துகளும் இங்கே அமோக விற்பனை ஆக வழி வகுத்து வருகிறோம். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி, ரத்தத்தில் தித்திப்பு கூடுதலால் 34 லட்சம் பேர் மரணம். அதிலும், அடிமட்ட மற்றும்




நடுத்தர மக்கள்தாம் இந்த நோய்க்கு அதிகம் பலி ஆகிறார்கள். 2030 —ஆம் ஆண்டுக்குள் அது இரட்டிப்பாக ஆகக்கூடும் என்கிறது அந்தத் துவர்ப்பு அறிக்கை.

2010—ஆம் ஆண்டின் 29 கோடி என்ற கணக்கோடு ஒப்பிட்டால் 2030 —ஆம் ஆண்டு 44 கோடி சாமானியர்களுக்கு சர்க்கரை நோயாளி' என்ற விலைமதிப்பு மிக்க சான்றிதழ் வழங்கப்பட்டு விடும். இந்தியாவைப் பொருத்தமட்டில் 5 கோடி பேர் என்ற நிலை உயர்ந்து 8.7 கோடி பேர் வாய்க்

**நெல்லை சு.முத்து**

எப்படியோ, சர்க்கரை நோயின் உலகத் தலைநகர் இந்தியா என்கிற புகழைப் பெற்று விட்டோம். நம் உலக ஜனத்தொகையில் 41 கோடி பேர் சர்க்கரை நோயாளிகள். இந்தியாவில் மட்டும் 6.4 கோடி பேர். நல்ல உணவுப் பழக்கம் மட்டும் அல்ல, நடைப் பயிற்சியையும் கைவிட்டுவிட்டோம்.




கொழுப்பினால்' (தீனியினால் மட்டும் அன்றி, பேச்சினாலும்) அந்தத் தகுதிக்குத் தங்களை உயர்த்திக்கொள்பவர்களாம். இந்தியாவில் தொன்மையான ராம ராஜ்யத்தில் இருந்தே சர்க்கரைக்கு மதிப்பு அதிகம். ராமபிரான் பரம்பரையே இஷ்வாகு தானே! (இஷ்' என்றால் கரும்பு, வாகு' என்றால் வாக்கு.)

இனிப்பு வாக்குப் பரம்பரையில் 62—ஆம் மன்னர் இவர். புத்தரும் இடம்பெறுகிறார். இந்தியாவில் இன்றைக்கு நாற்பது பேரில் ஒருவர் சர்க்கரை நோயாளி. (மன நோயாளிகள் 18 பேருக்கு ஒருவர்தாம் என்று சந்தோஷப்படாதீர்கள்.)

வீட்டு வரவேற்பறையில் மணிக்கணக்கில் உட்கார்ந்து நொறுக்குத் தீனிகளை உண்கிறோம். திரை விளம்பரங்களைப் பார்த்து நாக்கைச் சுழற்றிச் சுழற்றித் தின்னும் இனிப்புப் பண்டங்கள். சர்க்கரை சைவமா? அசைவமா?' என்கிற விவாதங்கள் வேறு. இனிப்புச் சுவைக்கு லாக்டோஸ்' நன்று. பாலூட்டிகளின் உடல் திசுக்களில் இழிந்து பிரிந்து வந்த அசைவச் சர்க்கரை அது.

சொல்லப்போனால், 38% ஃப்ரக்டோஸ் அடங்கிய தேன் உடலுக்கு நல்லது. ஆனால் அது அசைவம். தேன் அடைகள் தேனீக்களோடு சேர்த்துப் பிழிந்து எடுக்கப்படுகிறது. உண்மையில் முன்னாள் சர்க்கரை




அசைவம். இன்னாள் சர்க்கரை சைவம்தான். வேதியியல் சைவம். அனைவருக்கும் உகந்தது. உள்ளபடியே, கருப்பஞ்சாற்றில் லேசான அமிலத் தன்மை இருக்கும். அதனைக் குறைக்கவில்லை என்றால், சர்க்கரை புளித்து, நொதித்து ஆல்கஹால் (சாராயம்) ஆகிவிடும். அதனால் கருப்பஞ்சாற்றின் புளிப்புத் தன்மையை மாற்றுவதற்காக அதில் கொஞ்சம் தாளித்த சுண்ணாம்புக் கல் (கால்சியம் ஆக்சைடு) கலப்பது உண்டு.

சுண்ணாம்பு கலந்த கருப்பஞ்சாற்றின் சகதி நிறத்தை மாற்ற வேண்டுமே. கந்தக அமில வாயு (சல்ஃபர்—டை—ஆக்சைடு) செலுத்தினால் ஆயிற்று. கால்சியம் சல்ஃபைட்டு, சல்ஃபேட்டு ஆகிய உப்புகள் உண்டாகும். பிறகென்ன? அழுக்கு நிறக் கருப்பஞ்சாறு, இளநீர் போல் தெளிவாகும். வெள்ளைச் சர்க்கரைப் படிகங்கள் பெறப்படும். முன்னாளில் இத்தனை வேதிக் கலப்புகளுக்குப் பதிலாக சர்க்கரைச் சாற்றினில் மாட்டு எலும்புத்தூள் கலந்து சர்க்கரை தயாரித்தார்கள். அது அசைவம் அல்லவா?

இன்றைய சைவச் சர்க்கரை கந்தக அமிலத்தினால்தான் இனிப்பது இல்லையோ என்று கேட்பதில் அர்த்தம் இருக்கிறது. உலக நாடுகள் கந்தகச் சர்க்கரைக்குத் தடை விதித்து விட்டதால், இந்தியச் சர்க்கரையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியாது. நாம் தயாரித்த நஞ்சை நாமே அருந்தி வாழவேண்டும் என்பது நம் தலைவிதி. இந்தச் சர்க்கரையின் நிறம் வெளுக்க கந்தக அமில வாயுவிற்குப் பதில் கரியமில வாயு கலக்கிறார்கள்.

இந்தியர்கள் அதையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். காரணம், அந்தச் சர்க்கரை சற்று சாண நிறத்தில் இருக்கிறதாமே. எதிலும் வெண்மைதான் தூய்மை என்று நினைத்து ஏமாறுகிறோம். கான்பூர் தேசியச் சர்க்கரைப் பயிலகம் மற்றும் தக்காணச் சர்க்கரைத் தொழில்நுட்பவாதியர் கழகம் போன்ற அறிவியல் அமைப்புகள் சில ஆய்வுகள் மேற்கொண்டனர். கந்தக சர்க்கரையின் கபில நிறத்தைப் போக்க சிறிதளவு பாஸ்பாரிக் அமிலம் கலக்கின்றனர். பழையபடி ஓரளவுக்கு வெள்ளைச் சர்க்கரை இனித்தது. மகாராஷ்டிரத்தில் சோலாப்பூர் தொழிற்சாலை ஒன்றில் இது பரிசோதனை ரீதியில் தயாரிக்கப்பட்டது.

அது மட்டுமா? ஆல்கஹாலான சாராயம் தயாரிக்கும்போது இந்த கந்தகம் அதில் சிறிதளவு கலந்து இருக்குமாம். இத்தனை எதற்கு? மொத்தத்தில் தினமும் சாப்பாட்டில் இனிப்பைக் குறையுங்கள் என்று சொன்னால் கேட்டால்தானே?

குளூகோஸ் தெரியும், ஆனால் மாம்பழத்தில்தான் உச்ச அளவாக, ஒரு பழத்தில் 30 கிராம் ஃப்ரக்டோஸ் உள்ளது. ஒரு வாழைப்பழத்தில் 27 கிராம். ஒரு கோப்பை திராட்சை ரசத்தில்

25 கிராம். தர்ப்பூசணி சராசரித் துண்டில் 18 கிராம். வட்டாகச் சீவிய அன்னாசிப் பழத்தில் 15 கிராம். ஒரு ஆப்பிளில் 10 கிராம்.




அரைக்கோப்பைப் பேரீச்சம்பழ திரவத்தில் 55 கிராம் ஃப்ரக்டோஸ் உள்ளது. என்றாலும், ஃப்ரக்டோஸ் செறிந்த மக்காச் சோள இன்சுவைக் குழம்பு இன்றைக்கு 'மேசைச் சர்க்கரை' என்ற பெயரில் மேனாடுகளில் பரிமாறப்படுகிறது.

அதில் பாதரசம் கலந்து இருப்பது ஓர் ஆபத்தான செய்தி. நீண்ட கால உபாதைகள் ஒரு பக்கம். குறுகிய காலத்தில் நெஞ்சுவலி, வாந்தி, கண் எரிச்சல், தலைவலி, பார்வைக் கோளாறு என்று சர்வ நோய் காரணி இது. பொதுவாக, லவங்கப் பட்டை நீரிழிவு நோய்க்கு நல்ல மருந்தாம். இதில் எதிர் — ஆக்சிகரணிப் பொருள் உள்ளதாம். அதனால் சீழ்முறி குணமும், ரணம் ஆற்றும் தன்மையும், சிறிய அளவில் மயக்கம் ஊட்டியாகவும் இது உதவும். ஆயின் இதில் அடங்கிய யுஜினோல்' என்ற வேதிப்பொருள் நோய் முறி திறன் உடையது. பல் மருத்துவர்கள் இதனைக் கையாளுவது உண்டு. அதிலும் லவங்கப் பட்டைக்கு பஞ்சசீல குணம் உண்டாம். நீரிழிவு, உடல் எடை கூடுதல் கொழுப்பு, சருமத்தில் பொடுகு , முரட்டு உரோமம் போன்ற ஐந்துவகைக் குறைகளுக்கும் கைகண்ட நிவாரணம் இது.

சில சுண்டெலிகளுக்கு லவங்கத்தூளினை தினமும் ஒரு குறித்த அளவு ஊட்டிவளர்த்தனர். ஒரு மாதம் கழித்து, அந்த லவங்க எலிகளை, சாதாரண உணவு உண்ட சுண்டெலிகளுடன் திறந்த வெளியில் மேய விட்டனர். என்ன ஆச்சரியம்! லவங்கப்பட்டை உண்ட சுண்டெலிகளில் தங்களின் வளைக்குள் சரியாக, பத்திரமாகப் புகுந்தன. சாதாரண எலிகளோ தொகுதி தவறிய வாக்காளர்கள் மாதிரி இடம் மாறி மாறித் தவித்தன. இதுதான் இன்றைய லவங்கப் பட்டையின் மகத்துவம்.

இலங்கையில் விளையும் மூலிகை லவங்கம். இந்தியாவிலும் சீனாவிலும்கூட இதன் விளைச்சலுக்குக் குறைவில்லை. இலங்கையில் சின்னாமம் சிலானிக்கம்' என்றும், சீனாவில் சீனமாமும் காஸியா' என்றும், ஆங்கிலத்தில் சின்னமம்' என்றும் வழங்கப்படுகிறது. ஆனாலும், பட்டை (தமிழ்), லவங்கப்பட்டை (கன்னடம்), கருவாப்பட்டை (மலையாளம்), தல் சின்ன செக்கா (தெலுங்கு), தர்ச்சின்னி (வங்கம்), தல் சின்னி (இந்தி) என்றெல்லாம் அழைக்கப்படும் மருத்துவக் குணம் கொண்ட மூலிகை இது.

உடல் எடையைக் குறைக்கவும், தோல் மினுமினுப்பு அடையவும், தலைமுடி வளரவும் உதவுகிறது. இதில் அடங்கிய கௌமாரின்' என்ற வேதிப்பொருளுக்கு ரத்த ஓட்டத்தினை சீராக்கும் குணம் உள்ளது. அதற்காக அளவுக்கு அதிகமாக இதனை உட்கொண்டால் கல்லீரலும், சிறுநீரகமும் பாதிக்கப்படும், எச்சரிக்கை!

நம்பிக்கை என்று வந்தபிறகு, எதையும் உண்ணலாம்போல. இந்து சந்நியாசிகளுக்குக் கிறித்தவர்கள் நிறுவிய நோபல் பரிசு கிடைக்கவில்லை என்று ஆதங்கப்படுகிறார் குளிர் அறைக்குள் டாலர் திரட்டும் ஓர் அறக்கட்டளைப் பேச்சாளர். முன்னாள் பிரதமர் ஒருவரிடம் ஒரு நேர்காணலில், அவர் சிறுநீர் அருந்துவது குறித்துக் கேட்கப்பட்டபோது, அந்த முன்னாள் பிரதமர், மருந்து என்ற பெயரில் நீங்கள் பிறர் மூத்திரத்தைத்தானே குடிக்கிறீர்கள்' என்றாராமே.

# மடியுமோ அடிமை

### ஆன்லைன்' அடிமைகள் !


தற்போது தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள அதிவேக வளர்ச்சி, உலக அளவிலான பல்வேறு செயல்பாடுகளை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு, வங்கித்துறை போன்ற அத்தியாவசியமான சேவைகளை மேற்கொள்ளும் துறைகளில் மின்னணு தொழில்நுட்பம் பரந்து விரிந்துள்ளது.

இப்போதெல்லாம் வங்கிக்குச் சென்று, நீண்ட நேரம் காத்திருந்து பணம் செலுத்தவோ, பெறவோ அவசியம் இல்லை. வெளியூர் செல்பவர்கள் பேருந்து நிலையத்திற்கோ, ரயில் நிலையத்திற்கோ முன்னதாகவே சென்று வரிசையில் நின்று பயணச்சீட்டு எடுக்க வேண்டியதில்லை. இத்தகைய சேவைகளை எல்லாம், நம்மிடமிருக்கும் செல்லிடப்பேசியில் உள்ள இணையம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படி நமக்கு நல்லது செய்கிறது என நம்பி, அதிலேயே நாள் முழுவதும் மூழ்கி கிடக்கும் பலர், இன்று அதற்கு அடிமையாகி உள்ளனர். குறிப்பாக, இளைய சமுதாயத்தினர் இணைய அடிமைகளாகியுள்ளனர். போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பதுபோல, ஏராளமானோர் ஆன்லைன் அடிமைகளாகி உள்ளனர்.

“இண்டர்நெட் அடிக்ஷன் டிஸர்டர்' (ஐ.ஏ.டி.) என்ற புது விதமான நோய் இன்று பலரையும் பீடித்துள்ளது. இந்த நோயை குணப்படுத்துவது மிகவும் கடினம் என்று மனநல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆன்லைன் விளையாட்டுகள் பலரை




அடிமையாக்கியுள்ளன. முகநூல், சுட்டுரை, கட்செவி அஞ்சல் போன்றவற்றில் இளம்பெண்கள் பலர் கட்டுண்டு கிடக்கின்றனர். குறிப்பாக, முகநூலில் பெண்கள் அதிக நேரம் மூழ்கிக் கிடப்பதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

ஆன்லைன் அடிமைகள் பல பிரிவினராக உள்ளனர். “சைபர் செக்ஸ் அண்ட் போர்னோகிராபி', “சைபர் ரிலேஷன்ஷிப்ஸ்', “ஷாப்பிங் அண்ட் கேமிங்' என பல பிரிவுகளாக உள்ளனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பயன்பாட்டில் சந்தோஷம் கிடைக்கிறது.

“இணையச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்போர் அடிக்கடி பொறுமை இழக்கின்றனர். அவர்களின்

# மோகம்


பா.ராஜா

நினைவாற்றலும் குறைகிறது. மேலும் புதிய சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் தேக்க நிலை காணப்படுகிறது' என்று மனநல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜெர்மன் நாட்டு அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி, 2011—இல் சுமார் 5 லட்சம் ஜெர்மானியர்கள் ஆன்லைன் செயல்பாடுகளுக்கு அடிமையாகி இருந்தனர். அவர்களில் சுமார் 5 சதவிகிதத்தினர் இளம்பெண்கள். “பிரச்னைகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கவும், பிரச்னைகளை எதிர்கொள்ள இயலாத சூழ்நிலையிலும் இவர்கள் இணையத்தைத் தேடி ஓடுகின்றனர். நாளடைவில், அவற்றிலேயே மூழ்கி விடுகின்றனர்' என்று ஜெர்மன் நாட்டு பல்கலைக்கழகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஹாங்காங் பல்கலைக்கழக ஆய்வு ஒன்றின்படி, உலகின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 6 சதவிகிதம் பேர் இணைய அடிமைகளாக உள்ளனர்.

2018—ஆம் ஆண்டு கணக்குப்படி, உலகின் மொத்த மக்கள்தொகை சுமார் 760 கோடி. இவர்களில் சுமார் 53 சதவிகிதம் பேர், அதாவது சுமார் 390 கோடி பேர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். இவர்களில் சுமார் 360 கோடி பேர் செல்லிடப்பேசி மூலம் இணைய சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




“இணைய அடிமைகள்' குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சீனா, இதை “கிளினிகல் டிஸலர்டர்' எனத் தெரிவித்துள்ளது. இணையப் பயன்பாட்டில் அதிகம் ஈடுபட்டிருப்போரை, அதிலிருந்து வேறு செயல்பாடுகளில் ஈடுபடுத்த 250 ஆலோசனை மையங்களை சீன அரசு ஏற்படுத்தியுள்ளது. மூளை நரம்புகளில் ஏற்படும் சில மாற்றங்களே இதற்கு காரணம் எனவும், இது மனநலம் மற்றும் நரம்பு தொடர்புடைய பிரச்னை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Types of Internet Addiction

- Web Surfing.
- Internet Gambling Addiction.
- Social Networking Addiction.
- Online Gaming Addiction.
- Cybersex Addiction.
- Online shopping.



ஜப்பானில் 12 முதல் 18 வயதுக்குள்பட்ட 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இணையச் செயல்பாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பள்ளி நேரங்களில் வாரத்துக்கு குறைந்தது ஆறு மணி நேரம் இணையத்திலேயே செலவிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவில் இணைய சேவை பயன்பாடு ஒரு சமூகப் பிரச்னையாகவே மாறியுள்ளது. அதனால், அங்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.



இந்தியாவைப் பொருத்தவரை, சுமார் 12 சதவிகிதம் பேர் இணைய அடிமைகளாக உள்ளனர் என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ளது. "போர்னோகிராபி' சார்ந்த செயல்பாடுகளில் இந்திய பயன்பாட்டாளர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இச்செயல்பாடுகளில் உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாம். மற்றொரு அதிர்ச்சிக்குரிய தகவல், பிரிட்டனில் ஆறு வயதுக்குள்பட்ட குழந்தைகள் நான்கு பேரில் ஒருவரிடம் அறிதிறன் பேசி (ஸ்மார்ட்போன்) உள்ளதாம். இணையப் பயன்பாட்டுக்கு இவையே அதிகம் பயன்படுகின்றனவாம்.

இணைய அடிமைகளின் எண்ணிக்கை வருங்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், இதனை உடனே கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். "புளூவேல்' போன்ற உயிரை மாய்த்துக் கொள்ளும் விளையாட்டுகள் வெளியே தெரியவந்ததால், அவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

செல்லிடப்பேசியின் பயன்பாடு அதிகரித்துவரும் நிலையில், அதைப் பயன்படுத்துவோரைக் கண்காணிக்க வேண்டியது அவசியம். சமூக வலைதளங்களும் கண்காணிக்கப்பட வேண்டும். சிலரின் செயல்பாடுகள் வரம்பு மீறியதாக இருந்தால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சைபர் கிரைம் தொடர்பான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

மேலும், தனியார் இணைய சேவை மையங்கள் கண்காணிப்பு வளையத்துக்குள் இருக்க வேண்டும். இதன் மூலம் இணையப் பயன்பாட்டைக் குறைக்கலாம்; குற்றச் செயல்களைத் தடுக்கலாம்.







# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018

JANUARY





FEBRUARY




MARCH




APRIL




MAY




JUNE




JULY




AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |


NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा